கல்கி



"அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரே போல் கெட்டிக்காரி!"



ஹார்லிக்ஸ் அவளைக் கெட்டிக்காரியாக மாற்றிற்று!

வளரும் குழந்தைகளுக்கு தெம்புடன் திகழத் தேவையான அதிக சக்தியை அளிக்க ஹார்லிக்ஸ் உதவுகிறது. டாக்டர்கள் குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். உங்கள் மகளுக்கும் ஹார்லிக்ஸ் தேவை!



ஆனால், சில நாட்களுக்கு முன் அவளுக்கு ஒரே மந்தம். நான் டாக்டரை விசாரித்தேன்.

டாக்டர் சொன்னார்: "அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்."

ஹார்லிக்ஸ் சாப்பிட்ட பின் அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரேபோல் கெட்டிக்காரியாக மாறிவிட்டாள்!




ஆடைச் சத்து நிறைந்த பாலுடன் கோதுமை மாவு மற்றும் மால்டெட் பார்லியின் போஷாக்குச் சத்துக்கள் சேர்ந்தது

ஹார்லிக்ஸ் அதிக சக்தியை அளிக்கிறது!

HL 7573 A







எரிசசலா?
அஜீர்ணமாக இருக்கலாம்

ஜீரணம் பாதிக்கப்பட்டால் நிதானம் கெடுகிறது. வேலையில் ஜாக்கிரதையும், ஈடுபாடும் குன்றுகிறது. தொழில் நிர்வாகியான தங்களுக்கு இப்படி நேர்வது நல்லதல்ல. ஹ்யூலெட்ஸ் மிக்சர் அருந்துங்கள். அது ஜீரண சக்தியை ஒழுங்கு படுத்துகிறது; விரைவில் நிவாரணம் அளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி ஜீரணகோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பு அளிக்கிறது.

ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்று உபாதைகளுக்கும் நல்லது. வயிற்றுப் போக்கு இருந்தால் அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்.





ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்குச் சிறந்தது

C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
66A மதலியப்ப நாயக்கன் தெரு, மதராஸ்-3

CIH 3306A

கல்கி பொருளடக்கம்

சௌமிய, ஆவணி 1 ○ 1969 ஆகஸ்டு, 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



"கவலைப்படாதீர்கள், இடது பக்கம் திரும்புகிறோம், அவ்வளவுதான்."



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ● இதழ் 3

நிக்ஸன் விஜயத்தின் விளைவு

ஆசியப் போராட்டங்களிலிருந்து அமெரிக்கா தன்னை விடுவித்துக்கொள்ள முற்பட்டுள்ளது. அதை ஆசிய நாடுகள் ஏற்றுக்கொள்ளும்படி செய்வதுதான் நிக்ஸனது சுற்றுப் பிரயாணத்தின் நோக்கம். அமெரிக்கா வெளி விவகாரங்களிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டுமென விரும்பும் தமது தேசத்தவரின் கருத்துக்குப் பணிந்து போவது தான் விவேகம் என்று நிக்ஸன் கண்டு கொண்டார். அதே சமயத்தில் ராணுவ உதவியின் மூலம் நண்பர்களான தேசங்களின் நல்லெண்ணத்தையும் அவர் காப்பாற்றிக் கொண்டார்.

ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்டுக் கலக எழுச்சிகளும் நாச வேலைகளும் நடைபெற்றால், அந்தச் சர்க்கார்களுக்கு உதவியளிக்கும் வகையில் அமெரிக்கா குறுக்கிடாது என்பது தெளிவாகி விட்டது. அருகிலுள்ள கம்யூனிஸ்ட் நாடுகளின் படை பல உதவியுடன் ஆயுதம் தாங்கிய கலகம் தலைதூக்கினாலும் குறுக்கிட இராது. உலக யுத்தம் அச்சுறுத்தினாலொழிய அமெரிக்கா குறுக்கிடாது என்று நிக்ஸன் கூறியிருக்கிறார்.

இரண்டு உலக வல்லரசுகளிடையே இருந்து வந்த போட்டி நிலை மாறி, வல்லரசுகள் மூன்றாகி விட்ட நிலைமை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியவைதாம் இம் மூன்றும். இந்த மூன்று வல்லரசுகளில் ஒவ்வொன்றும், மற்ற இரண்டும் ஒன்று பட்டுவிடக் கூடாது என்பதில் அக்கறை காட்டுகின்றது. இதன் காரணமாக முன்னர் அலட்சியம் செய்யப்பட்ட சீனாவின் நட்புக்கு மேலை நாடுகள் பாடு படுகின்றன. வல்லரசுகளின் உலக விவகார நிலவரத்தில் ஏற்பட்டுள்ள இந்த அடிப்படையான மாறுதலைப்பற்றி இந்தியா பெரிதும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனியின் கவலையெல்லாம் சோவியத் ரஷ்யாவைப் பற்றியதுதான். அதைப் போலவே இந்தியாவின் கவலையெல்லாம் சீனாவைப் பற்றியதாகத்தான் இருக்க முடியும். சீனா விஷயமாக மேலை நாடுகளின் மனப்பான்மையில் ஏற்பட்டு வரும் மாறுதலின் விளைவு இந்தியாவுக்கு மிகவும் பாதகமாகி விடலாம்.

"உங்கள் தேசப் பாதுகாப்பையோ அல்லது ஒழுங்கான ஆட்சி முறையையோ கம்யூனிஸ்டுகள் கவிழ்க்க முற்பட்டால் நீங்களேதான் அவர்களுடன் போராடியாக வேண்டும்" என்கிறார் நிக்ஸன். "நாங்கள் ஆயுதமும் பணமும் தரலாம். ஆனால் போர்க்களத்திலும், கெரில்லா நடவடிக்கைகளிலும் உங்கள் மக்கள்தான் ஈடுபடவேண்டும். ஆசியாவின் பாதுகாப்புக்காக அமெரிக்கப் படை வீரர்கள் இனி கடல் கடந்து சென்று உயிர்விட மாட்டார்கள்" என்கிறார். அமெரிக்கா இப்படி முடிவு செய்ததற்காக நாம் பூசலிட முடியாது. கம்யூனிஸ்டுகள் ஒன்று சேர்ந்து கொண்டு வெளிப்படையாகவே பலாத்காரத்தில் ஈடுபடக்கூடிய அபாயம் அதிகரித்து வருகிறது. நாம் விழித்தெழ வேண்டும். அபாயத்தை எதிர்நோக்கி முன் ஜாக்கிரதையாகச் செயலாற்ற வேண்டும். காலத்தைக் கட்டி நிறுத்த முடியாது.

அபாயம் மிகப் பயங்கரமான அளவுக்கு வளர்ந்து விடுவதற்கு முன்னால் இந்தியாவிலுள்ள நாம் அவசியமான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்கிறோமா? கம்யூனிஸம் ஒரு வகையான சோஷலிஸமே என்றும், கம்யூனிஸ்டுகள் சட்டசபைகளில் பணியாற்றும் ராஜீய வகையினர் என்றும் நமது ஆட்சியாளர் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். கம்யூனிஸ்டுகள் தேச விரோதிகள். அவர்கள் சோஷலிஸ்ட் அரசியல்வாதிகள் அல்ல. அவர்களிடம் தாட்சிண்யம் காட்டக்கூடாது. சொத்து, தொழில், வாக்குறுதிகளின் புனிதத்தன்மை ஆகியவற்றுக்கு உத்தரவாதம் தருகின்ற அரசியல் சாஸனப் பகுதிகளைப் புறக்கணிப்பவர்கள்,

கம்யூனிஸ்டுகள். கம்யூனிஸ்ட் பலாத்காரத்தினின்றும் துரோகத்தினின்றும் தேசத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுத்துக் கொள்ள முடியும். சட்டத்தைப் பற்றிய சங்கடங்கள் குறுக்கே நிற்க வேண்டியதில்லை.

நமது தேசத்தின் பொறுப்பாளர் விழிப்புள்ளவர்களாக இருக்கக் காணோம். நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குகிறார்கள். இதைத் தேசம் போதிய அளவு உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. அதிகாரத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் பெரிய இடத்துச் சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். தேசத்தின் பந்தோபஸ்து விஷயத்தில் அவர்களுக்கு அவ்வளவு அக்கறை காணோம். சுதந்திரம் உண்மையிலேயே பேராபாயத்துக்கு உள்ளாகி இருக்கிறது. கம்யூனிஸ்ட் எதேச்சாதிகாரம் வந்துவிட்டால் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்றவர்களாகி விடுவோம். நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கிழக்கு ஐரோப்பிய மக்கள் சக்தியற்றவர்கள் ஆகிவிட்ட நிலைமை இங்கும் வந்துவிடும்.

(ராஜாஜியின் ''ஸ்வராஜ்யா'' கட்டுரைச் சுருக்கம்)

என்ன சேதி?

குணச்செல்வர் குணமடைகிறார்

ஆன்மிக அபிவிருத்திக்கு ஓர் ஆணிவேராகவும் ஆஸ்திக உலகின் மாபெரும் ஆஸ்தியாகவும் விளங்கி வரும் பிரம்மஸ்ரீ செங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் அவர்கள் சுகவீனம் உற்றதை அறிந்து துடிதுடித்து, அவரது தேக நலனுக்காகப் பிரார்த்தித்தவர் அனந்தம்.



பிரார்த்தனை பலன் அளித்துவிட்டது. பகவானிடம் பக்தி செலுத்துவதிலும், மக்களிடம் அன்பு செய்வதிலும் இணையற்ற அப் பெருந்தகை யாருக்காகமக்கள் செய்த வேண்டுகோளுக்குப் பகவான் கருணையுடன் செவி சாய்த்துவிட்டான். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் நன்கு குணமடைந்து வருகிறார். இறைவன் அருளினால் காலக்கிரமத்தில் உபந்நியாஸத் திருப்பணியிலும் ஈடுபடுவார். இப்போது அன்பர்கள் கடமை அவரைக் கண்டும், கடிதம் எழுதியும் சிரமப்படுத்தாமல் இருப்பதுதான்.

மகாலிங்கம் ராஜிநாமா

பொள்ளாச்சித் தொழிலதிபர் திரு மகாலிங்கம் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிக் கொள்வதாக காங்கிரஸ் அக்ராசனர் திரு நிஜலிங்கப்பாவுக்கு எழுதியுள்ளார். காங்கிரஸுக்காக முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தொண்டு செய்து வந்த திரு மகாலிங்கம், தமிழக காங்கிரஸுக்குள் அநீதியும், கோஷ்டி சேர்த்துக் கொள்ளும் போக்கும் வளர்ந்திருப்பதைப் பொறுக்க முடியாமல் ராஜிநாமாச் செய்துள்ளார். திரு மகாலிங்கம் உயர்ந்த பண்பும் நாகரிகமும் மிக்கவர். அவரைப் போன்றவர்கள் இதுகாறும் தமிழக காங்கிரஸில் ஒட்டிக் கொண்டிருந்ததுதான் வியப்பளிக்கும் விஷயமேயன்றி விலகியதல்ல.

பென்ஷனுக்குப் பெருமை

நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கு மாதம் இருநூறு ரூபாய் அரசாங்க பென்ஷன் அளிக்கத் தீர்மானித்திருப்பதை அறிந்து இன்றைய ஆட்சியாளர்களைப் பாராட்டுகிறோம். பாரதியாரோடு நெருங்கிப் பழகிய தேசபக்தர் பரலி சு. நெல்லையப்பருக்கும் நூறு ரூபாய் பென்ஷன் வழங்கச் சர்க்கார் முன்வந்துள்ளது. விடுதலைப் போரில் பங்கு கொண்டு இன்றும் நம்முடன் வாழும் தேசபக்தர்கள் யாவரும் இச் செய்தியை அறிந்து மன மகிழ்ச்சி அடைவார்கள்.

நாமக்கல் கவிஞரின் ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது'' என்ற பாடல் லட்சக் கணக்கான தமிழ் மக்களுக்குத் தேச பக்தி வெறியூட்டியது. நாட்டுப் பற்றையும், தியாக உணர்ச்சியையும் வளர்த்த தமிழ்க் கவிஞரைச் சென்றகாலத் தமிழகக் காங்கிரஸ் அரசாங்கம் ஆஸ்தானக் கவிஞராகவும், சட்ட மன்றத்தின் மேல் சபை உறுப்பினராகவும் நியமித்துக் கௌரவித்தது. ஆனால் இவரையும், மற்றொரு முதுபெருமகன் நெல்லையப்பரையும் வறுமைக் கொடுமையிலிருந்து விடுவிக்க நிரந்தரமானதோர் ஏற்பாடு செய்யும் வாய்ப்பு தி. மு. க. அரசாங்கத்துக்கே வாய்த்துள்ளது. அது தி. மு. க. செய்த அதிர்ஷ்டம்.

புது விஷயம் அல்லவே!

கடலூரில் நடைபெற்ற இளைஞர் காங்கிரஸ் மகாநாட்டில் பேசிய திரு காமராஜ், காங்கிரஸுக்குள் கம்யூனிஸ்டுகள் புகுந்துவிட்டார்கள் என்று எச்சரித்தது டில்லி ஆட்சிபீடத்துக்கு வியப்பூட்டியிருக்கிறது. நில உச்ச வரம்புச் சட்டமும், கூட்டுப் பண்ணைத் திட்டமும் கொண்டு வர வேண்டும் என்று நாகபுரியில் காங்கிரஸ் தீர்மானித்த அன்றே காங்கிரஸ் கம்யூனிஸ்டாக மாறத் தொடங்கி விட்டது என்று நாட்டில் கண் படைத்தவர்கள் எல்லோரும் அறிவர். கம்யூனிஸ்ட் கொள்கைகளைப் பேசவும் அமுல்படுத்தவும் தொடங்கிய பின் கம்யூனிஸ்டுகள் உட்புகுந்ததில் ஏதோ எதிர்பாராதது நடந்துவிட்டது போல் நாடகம் நடத்துவானேன்?

ராஜாஜியின் கருத்துக்கள்

தனிப்பட்ட கம்பெனிகளும், பெரிய பாங்குகளும் தமது குமாஸ்தா வேலைகள், மற்றக் கீழ்நிலைப் பதவிகள் முதலியவற்றில் நாற்பது சதவிகிதத்தைச் சர்க்கார் தமது இஷ்டப்படி வழங்குவதற்கான ''கோட்டா''வாக ஒதுக்கி வைக்க வேண்டும் என்று தமிழ் நாட்டை ஆளும் கட்சி அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாக ஒரு செய்தி பரவி வருகிறது. இது உண்மையாக இராது என்று நம்புகிறேன். உண்மையாயின் இதன் விளைவாகப் பெருந் தீங்குகள் நிகழக் கூடும். மனுப் போடுபவரின் தகுதி முதலியவற்றைப் பாராமல் சர்க்காரால் திணிக்கப்படுபவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்பது, 'காக்காய் பிடிக்கிற' தன்மையை வளர்த்து விடும். திறமையும் கட்டுப்பாடும் குறைந்து போகும். தேர்தலில் வெற்றி பெற்று விட்டதால் இம்மாதிரி சில்லறை அனுகூலங்களை வழங்குவதற்கான உரிமை தமக்கு இருக்க வேண்டுமென நினைக்கலாகாது. பதவியிலுள்ள கட்சி இக்கருத்தைக் கைவிட வேண்டும். அவசியம் ஏற்படுகையில், கசப்பான புத்திமதியைச் சொல்ல வேண்டிய உரிமையும் கடமையும் நண்பர்களுக்கு உண்டு.

★

பாங்குகளை அரசாங்க உடைமையாக்கியதை வைத்துக் கொண்டு மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் பிரசாரத்தில் ஈடுபடுவதென ஸ்ரீமதி இந்திரா காந்தி முடிவு செய்துவிட்டார். இது மிக வருந்தத் தக்கது. தேசத்திலுள்ள பெரிய பாங்குகள் அனைத்தையும் சர்க்கார் எடுத்துக் கொள்வது ஒரு ஸ்தாபனத்தைத் தேச உடைமையாக்குவதோடு நின்றுபோகிற விஷயமல்ல. இது மக்களின் சொத்தைக் கட்டாயமாகக் கைப்பற்றிக் கொள்ளும் தன்மையுடையது. இத்தகைய நடவடிக்கையை அடுத்த பொதுத் தேர்தலுக்குரிய விஷயமாக்கி யிருக்கலாம். அல்லது குறைந்த பட்சம் பார்லிமெண்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளு முன் பொது ஜன அபிப்பிராயத்தை அறிவதற்காக மசோதாவைச் சுற்றறிக்கையாக அனுப்பியிருக்கலாம். இரண்டு சபையினரும் சேர்ந்த பொறுக்குக் கமிட்டி பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் மறுக்கப்பட்டு விட்டது. இம்மாதிரி இதற்கு முன் நடந்ததே இல்லை; இப்படிச் செய்வதற்கு எந்த நியாயமும் கிடையாது.

நமக்கு நம்பிக்கை உள்ள பாங்கில் ஒரு நபர் தம் பணத்தைப் போட்டிருக்கிறார் என்றால் அதை அவருடைய சம்மதமில்லாமல் வேறு ஒரு பாங்கோ அல்லது சர்க்காரோ எடுத்துக் கொள்ள முடியாது. அந்த பாங்கை விட நான் அதிக நம்பிக்கைக்கு உரியவன் என்றோ, அல்லது அதை இன்னும் திறம்படப் பயன்படுத்துவதற்குத் தன்னால் இயலுமென்றோ உரிமை கொண்டாடிக் கைப்பற்றுவது தகாது. மசோதா வேகமாக நிறைவேறி ராஷ்டிரபதியின் அங்கீகாரத்தையும் பெற்றுவிடலாம். ஆனால் பல பிரச்னைகள் எழப் போகின்றன. செய்யக் கூடாதவை என்றும், உத்தரவாதம் அனைவை என்றும் கருதக்கூடிய பல அரசியல் சாஸன ஷரத்துகளை மசோதா மீறியதாக இருக்கிறது என்று கருதப்படலாம். சுப்ரீம் கோர்ட்டின் முழு பரிசீலனைக்கு அவை வரக்கூடும். 'ரிட்' மனுக்களின் மூலம் விவகாரம் எழலாம்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு காங்கிரஸ் தீர்மானத்தின் மூலம் முடிவான கொள்கைகளையே தாம் நடத்தி வைப்பதாகப் பிரதம மந்திரி கூறுகிறார். 'சோஷலிஸ பாணியிலுள்ள' சமுதாய அமைப்பைப் பற்றி ஆவடியில் நிறைவேறிய தீர்மானத்தை அவர் பிரஸ்தாபிக்கிறார் போலும்! 'சோஷலிஸ பாணி'யில் உள்ள அமைப்பு என்பது வேறு, சோஷலிஸம் வேறு என்று அப்பொழுதே அபுக்கலாம் ஆஸாத் விளக்கம் கூறியதுண்டு.

★

குஜ்னெட்ஸாவ் என்ற ரஷ்ய நாவலாசிரியர் ரஷ்யாவிலிருந்து வெளியேறி, பிரிட்டனில்

புதிய மந்திரிகள்



திரு நெடுஞ்செழியன் திரு என். வி. நடராஜன் திரு வேழவேந்தன்

அஜீசம் புகுந்திருக்கிறார். ரஷ்ய சமுதாயக் கொள்கையின் அடிப்படையை அவர் தெளிவாகக் கண்டித்துள்ளார். 'மார்க்ஸிஸம்—லெனினிஸம்' அடியோடு உதவாக்கரையான பழைய விஷயமாகி விட்டது; அதை நம்பு வோர் அப்பாவிகள் என்று அவர் கூறுகிறார்.

ரஷ்ய சித்தாந்த அடிப்படைகளையும், அவற்றினின்று உருவான கொள்கைகளையும் அவர் மதிப்பிட்டுக் கூறியிருக்கிறார். கம்யூனிஸத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மட்டுமின்றி அவற்றின் விளைவாக உருவான வாழ்க்கை முறையும் ரஷ்ய தேசத்தை அகரத்தனமாக அழுத்தி வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை, அவர் விவரமாக வருணித்துள்ளார். இந்த விளக்கம் நமது அன்புமிக்க பிரதம மந்திரிக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும்.


சோவியத் பிரசாரத்தின் கவர்ச்சியில் லயித்துப் போய், இந்தியாவை ஒரு கற்பனைச் சுவர்க்கமாக மாற்றுகின்ற பெரிய திட்டத்தை நமது பிரதம மந்திரி தொடங்கியிருக்கிறார். முதற் படியாகப் பதினன்கு பாங்குகளிடம் மக்கள் ஒப்படைத்த தமது சேமிப்புக்களை அவர் ஒரேயடியாகக் கைப்பற்றி விட்டார். அரசாங்கக் கோஷ்டியினர் தம் மனம் போனவாறு அதைப் பயன்படுத்துவர்.

பிரதமர் இப்படிச் செய்தது ஒரு போர்த்தந்திர நடவடிக்கை என்று சிலர் நினைக்கிறார்கள். அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீமதி காந்தியைச் சர்வாதிகாரியாகக் கொண்ட காங்கிரஸ் கட்சியையே மீண்டும் பதவியில் அமர்த்துவதற்காக வோட்டர்களைப் பல வகைகளில் திருப்திப்படுத்த இந் நடவடிக்கை பயன்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நான் வேறு விதமாக நினைக்கிறேன். நெடுநாள் சிரமப்பட்டு வறுமையில் உழலும் தேசத்துக்கு வரலாறு போற்றும் வகையில் தாம் நன்மை செய்வதாகப் பிரதமர் நினைக்கிறார். பிரதம மந்திரியை ஊக்கி வைக்கும் சக்தி எதுவாக இருந்த போதிலும் விளையும் கெடுதல் என்னவோ உறுதி. சமுதாயம் தனி நபர்களை நம்பி வாழ்கிறது. சமுதாயம் என்பது ஒரு கொள்கை. தனி நபர் என்பவரே பிரத்யட்சமாக இருப்பவர். தனது வரம்பற்ற அதிகாரத்தின் மூலம் தனி நபரை அரசாங்கம் அழித்து விட்டால் விரைவில் அதன் விளைவுகள் தேசத்தைப் பாதிக்கும். இப்பொழுது நடப்பது வரலாறு காணாதது. அதற்கு உதாரணம் காட்ட முடியாது. இது ஹிமாலயத் தவறு. ஆட்சிக் கலையை மட்டுமின்றித் தேசப் பொருளாதாரத்தையும் உருவாக்குகிறவர்கள், இதைத் தெளிந்தறிந்து கண்டித்துள்ளனர். ஆனால் மன முதிர்ச்சியும் அநுபவமும் இல்லாத ஒரு கூட்டம் பார்லிமெண்டில் துதி பாடி, பிரதமரைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறது. இவர்களை விட நல்ல ஆலோசகர்களின் புத்திமதியைப் பெற வேண்டியவர் நமது பிரதமர்.

அட்டைப்பட விளக்கம்

செவ்வாய் அழகி








அம்புலியில் மனிதன் அடியெடுத்து வைத்ததை அடுத்து அமெரிக்க விண்வெளி விஞ்ஞானிகள் புதிய திட்டங்களைத் தீட்டியிருக்கின்றனர். 1985ம் ஆண்டிற்குள் பூமியைப் போலவே சூரியனைச் சுற்றி வரும் ஏனைய கிரகங்கள் அனைத்துக்கும் விஞ்ஞானக் கருவிகளுடன் கூடியவையும் மனிதர்கள் இன்றியே இயங்குபவையுமான விண் கலங்களை அனுப்பி ஆராயவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த உலகங்களில் உயிரினங்கள் உண்டா? உயிரினங்கள் தோன்றும் ஆதி ரகசியம் என்ன என்பன போன்ற கேள்விகளுக்கு விடை அறிய விஞ்ஞானிகள் முற்பட்டிருக்கின்றனர்.

விஞ்ஞானக் கருவிகள் புகைப்படக் காமிராக்கள் ஆகியவற்றுடன் சென்று செவ்வாய் கிரகத்தை ஆராய்ந்திருக்கும் மரைனர் - 7 விண்கலம் உலகில் உயிரினங்கள் தோன்றக் காரணமாயிருந்த வாயுக்கள் செவ்வாய் கிரகத்திலும் நிலவுவதாக உறுதியாகத் தெரியப்படுத்தி யிருக்கிறது.

ஏனைய கிரகங்களில் உயிரினங்கள் உண்டோ இல்லையோ; இறுதியில் எப்படி நிரூபணம் ஆனாலும் சரி, 'அம்புலிக்கு அப்பால்' தொடர் கதையில் வருகிற செவ்வாய் கிரக கதாபாத்திரங்கள் உயிர்த் துடிப்பு மிக்கவர்களாய் விளங்கி வாசகர்கள் உள்ளத்தில் நிலைபெறுதல் நிச்சயம்!


1வது சிறந்த தேர்வு
மர்பி
முஸாபிர்
ரூ.283
மர்பியின் மற்ற மிகச் சிறந்த தயாரிப்புகள்:
மாடல் TB 0816
3 பாண்ட் ரூ. 415.00
மினி மாஸ்டர் 3
2 பாண்ட் ரூ. 220.00
மினி பாப்
2 பாண்ட் ரூ. 175.00
ம்யூஸிஷியன்
மீடியம் வேவ் ரூ. 125.00
• கச்சிதமானது: அடக்கமானது: அழகியது. இந்த சக்திவாய்ந்த 3-பாண்ட் டிரான்ஸிஸ்டரில் உலகின் எந்த நிலையத்தையும் தெளிவாகத் தொந்தரவின்றிக் கேட்கலாம்.
• டெலஸ்கோபிக் அன்டென்னாவும், உட்பொருத்தப்பட்ட சக்தி வாய்ந்த ஏரியலும் கொண்டது.
• எளிதில் கிடைக்கும் பெரிய சைஸ் டார்ச் பாட்டரிகளில் அமோகமாக இயங்குகிறது.
மர்பி ரேடியோ, இந்தியாவின் மிகப் பெரிய அதி நவீன டிரான்ஸிஸ்டர் பாக்டரியில் தயாரிக்கப்பட்டது. ரேடியோ தயாரிப்பில் 20 வருட ஆராய்ச்சி, அநுபவம் மற்றும் தொழில் நுட்பத் திறனைப் பின்பலமாகக் கொண்டிருப்பது.
உன்னத ஒலிநயம், சிறந்த அமைப்பு, சகாய விலை
விலைகள் எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டவை. மற்ற வரிகள் தனி.
மர்பி — இல்லத்தை மகிழ்விக்கிறது!



பக்கத்து வீட்டுப் பிரமுகர்!

சென்னை மயிலாப்பூர் பகுதியில் விவேகானந்தா கல்லூரிக்கு அருகில் பாலூர் கன்னியப்ப கிராமணித் தெரு இருக்கிறது. அந்தத் தெருவில் ஒன்பதாம் இலக்க வீட்டில் வசிப்பவர் திரைப்பட நடிகர் முத்துராமன். பக்கத்து எட்டாம் நம்பர் வீட்டில் குடியிருப்பவர் ஸ்ரீ டி. கே. நாராயணன். டாடா நிறுவனத்தில் பணியாற்றுபவர். தூரப் பார்வையுடன் ஆரம்பித்துப் பிறகு திரு முத்துராமனை மிக நெருக்கமாக அணுகிப் பார்க்க நமக்கு உதவுகிறார் திரு நாராயணன்.

ஊரிலே இருக்கிற நாட்களிலே, அதாவது 'அவுட்டோர் ஷூட்டிங்'குக்காக வெளியூர் போகாத நாட்களிலே முத்துராமன் நிச்சயம் மாடியில் தேகப் பயிற்சிக்காக நடை போட்டுக் கொண்டிருப்பார். தேகப் பயிற்சியும் செய்வார். அவருக்கு விளையாட்டுக் கலைகளிலே ரொம்ப ஆர்வம் அதிகம். ஓய்வு கிடைக்கும் மாலை நேரங்களில் அவரை ஏதாவது ஒரு ஸ்டேடியத்தில், கால்பந்து, ஹாக்கி, வாலிபால் ஆட்டங்கள் நடக்கும் இடத்தில் பார்க்கலாம்.

வரவேற்பு அறையில் முத்துராமன் சார் உட்கார்ந்திருந்தாரானால் தெருவில் போவோர் வருவோருக்கு நேராகவே தெரியும். யாரும் தாராளமாக வந்து அமர்ந்து பேசுவதை விரும்பவும் செய்கிறார். 'அவர் இருக்கிறாரா? பார்த்து வருகிறேன்!' 'பேசுவாரா? கேட்டு வருகிறேன் !' என்று தூது நடக்க அவர் யாரையும் அமர்த்தியிருக்கவில்லை. விவேகானந்தா கல்லூரி மாணவர்கள் பலர் ரொம்ப சகஜமாக அவருடன் வந்து அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

அந்த முன் அறையில்தான் டெலிபோனும் இருக்கிறது. காசு போட வேண்டிய அவசியமில்லாத 'பப்ளிக் டெலிபோன்' அது. யார் வீட்டுக்குக் 'கால்' வந்தாலும் முகம் கோணாது ஆளனுப்பிப் பேச வேண்டியவரை அழைத்து வரச் செய்வார். இந்த நல்ல தன்மையைத் தெரிந்து வைத்திருந்த குறும்புக்காரத் திரை உலக நண்பர் ஒருவர், சமீபத்தில் ஒரு நாள், இல்லாத ஒரு நபரின் பெயரைச் சொல்லி அவரை அவசரமாக அழைத்து வர வேண்டி, இவர் தூக்கத்தையே கெடுத்தார். இந்த அனுபவத்தையும் இவர் ரசிக்கத்தான் செய்தார் !

இந்தத் தெருவில் காலை நேரத்தில் மாட்டுச் சொந்தக்காரர்கள் தாறுமாறாக மாடுகளை நிறுத்திப் பால் கறக்க ஆரம்பித்தார்களானால் போக்கு வரத்து இடைஞ்சல் படும். முத்துராமனுக்கு எப்போதாவது முகம் கோணுவது இந்த வேளைகளில்தான். ''ஹூம்! டிராபிக்கைக் கெடுக்கிற இந்த மாடுகளுக்கெல்லாம் சொந்தக்காரர் ஒரு டிராபிக் கான்ஸ்டேபிளாக இருக்கிறாரே ! யாரிடம் போய்ச் சொல்லுவது?'' என்று நண்பர்களிடம் அங்கலாய்த்துக் கொள்வார்.

இவருக்குத் தெய்வ பக்தி ரொம்ப அதிகம். காலையில் சில தோத்திரங்களைச் சொல்லி விட்டுத்தான் மற்றக் காரியங்களைக் கவனிக்கிறார். பூஜை அறை சுத்தமாகவும், தெய்விக மணத்துடனும் இருக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடிக நண்பர் நம்பியாருடன் இவரும் சபரிமலை ஐயப்ப தரிசனத்துக்குக் கிளம்பிப் போயிருந்தார். அதற்கான பூர்வாங்க நியதிகளை வெகு கவனமாகவும் கடைப்பிடித்து வந்தார்.

திரும்பும் போது இவரும் மற்றவர்களுடன் சேர்ந்து கோஷ்டியாகவே திரும்பினார். நம்பியார் வீட்டில் வந்து இறங்கினார்கள். அங்கு, சபரிமலை போய் இவர்களுடன் திரும்பிய சித்திராலயா கோபுவை அழைத்துப் போக அவருடைய கார் வந்திருந்தது. கோபு முத்துராமனை அவர் வீட்டில் கொண்டு சேர்த்தார்.

வீடு திரும்பியதும், சபரிமலைக்கு எடுத்துப் போய்த் திரும்பிய 'இரு முடி'யைப் பூஜையில் வைத்து வணங்க வேண்டும் என்பது ஐயப்ப சம்பிரதாயம். அன்று முத்துராமன் வீடு திரும்பியதும் அவருடைய பூஜை அறை வெறிச்சென்றிருந்தது. காரணம், இவர் திரும்பி வரும் தேதி பற்றி வீட்டில் சொல்லவில்லை. மனைவி பூஜை அறையைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும் என்பதற்காக பூஜைக்கான உபகரணங்களையெல்லாம்



அப்புறப்படுத்தியிருந்தார். 'அடடா! உடனடியாக 'இருமுடி'யைப் பூஜையில் வைக்க முடியாமற் போயிற்றே!' என்ற வருத்தத்துடன், வேகமாக பூஜை அறையைச் சீர்ப்படுத்த முனைந்தார். பிறகு தம்முடன் திரும்பி வந்த சாமான்களில் அந்த 'இருமுடி'யைத் தேடிய போது அதைக் காணோம். முத்துராமன் திகைத்துப் போனார்.

அப்போது சித்ராலயா கோபுவின் கார் திரும்பி வந்து இவர் வீட்டு வாசல் முன் நின்றது. அவசரத்தில் கோபுவின் சாமான்களுடன் கலந்து சென்றிருந்த அந்த 'இருமுடி' இப்போது பத்திரமாகத் திரும்பி வந்திருந்தது.

'பூஜை அறை சீராக இல்லாத நிலையில் ஐயப்பன்தான் அந்த 'இருமுடி'யை வீட்டுக்குள் அனுமதிக்கவே இல்லை. சீரானதும் தானாக வந்து சேர்ந்தது' என்று நினைத்து மெய்மறந்து நின்றார் முத்துராமன்.


இவர் நடித்து வெளியாகும் திரைப்படங்களை இந்தத் தெருவிலுள்ள பெண்மணிகளில் பலர் வழக்கமாக முதல் ஒன்றிரண்டு தினங்களிலேயே பார்த்து விடுவார்கள். பிறகு பகல் வேளைகளில் இவர் வீட்டுத் திண்ணையில் ஒரு மாதர் மகாசபை கூடி விடும்! இவர் மனைவியையும் வைத்துக் கொண்டு விமர்சனம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். விரிவான விளக்கமான விமர்சனமாகவும் இந்தப் பேச்சு அமையும். இந்தப் பேச்சு ஓரளவு முத்துராமன் காதுக்கும் எட்டும்.

''ஏன் சில படங்களில் சிறு சிறு பாத்திரங்களையும் ஏற்றுக் கொள்கிறீர்கள்?'' என்று பல அன்பர்கள் இவரிடம் கேட்டதுண்டு. நானேகூடக் கேட்டிருக்கிறேன். அதற்கு அவர் சொல்லும் பதில் இதுதான். ''கதாநாயகன் பாத்திரத்தைத் தயாரிப்பாளர்கள் உருவாக்குகிறார்கள். ஆனால் உப பாத்திரங்களை நடிகர்கள்தான் உருவாக்குகிறார்கள். ஒரு தனித் தன்மையைப் புகுத்திக் காட்ட உப பாத்திரங்களைப் போல் ஹீரோ பாத்திரம் நடிகனுக்கு வாய்ப்பளிக்காது. அதனால்தான், நான் ஹீரோ சான்ஸ்தான் வேண்டும் என்று சொல்லாமல் எந்தப் பாத்திரத்தையும் ஏற்கிறேன். இந்தக் கருத்தை என் மனத்தில் சிறு வயதில் விதைத்தவர் குருசாமி அய்யர் என்பவர். பிற்காலத்தில் அதைப் பயிராக்கியவர் எஸ். வி. சகஸ்ரநாமம். சேவா ஸ்டேஜ் நிறுவனம் எனக்கு ஒரு சிறந்த கல்லூரியாகவே விளங்கியது'' என்பார் உணர்ச்சிப் பரவசத்துடன்.

டைரக்டர் ஸ்ரீதரிடம் இவருக்கு அபார மதிப்பு. இவர் 'வில்லனா'க நடித்த 'வடிவேலு வாத்தியார்' நாடகத்தைப் பார்த்த பிறகுதான் இவரைத் தாம் தயாரித்த 'நெஞ்சில் ஓர் ஆலயத்'தில் கதாநாயகனாக இழுத்துப் போட்டார். ஸ்ரீதரின் நம்பிக்கையை முத்துராமன் வீண் போக்கவில்லை. திரை உலகிலே நிரந்தரமான இடம் பிடித்தார்.

இவர் தம் பையன்களை ரொம்பக் கண்டிப்பாகவே வளர்க்கிறார் என்றுதான் நான் சொல்லுவேன். எல்லாம் அந்த மணிக்கணக்கின்படி நடக்க வேண்டும். தெரு முனையிலே இருக்கிற மைதானத்திலே விளையாடிக் கொண்டிருக்கும் பையன்கள் மணி ஆறு அடித்தவுடன் 'டக்' என்று வீடு திரும்புவது எனக்குத் தெரியும். குழந்தைகள் எல்லாம் ரொம்ப தங்கம்! வம்புதும்புக்குப் போக மாட்டார்கள்.

சில நாட்களுக்குமுன் ஒரு நிதி வசூல் கோஷ்டியினர் இவரைச் சந்தித்தார்கள். நகரத்தின் மறு கோடியில் எழுப்பப்பட்டிருக்கும் ஓர் ஆரம்பப் பள்ளிக்கு முத்துராமன் அவர்கள் பெயரைச் சூட்ட முடிவு செய்திருப்பதாகவும், கட்டடத்தைப் பூர்த்தி செய்து விழாக் கொண்டாடக் கணிசமான நிதி உதவி வேண்டும் என்றும் கேட்டார்கள். ''நான் இன்னும், பள்ளிக்குப் பெயர் தானம் கொடுக்கும் அளவுக்கு வளரவில்லை. எனக்கு அது பிடிக்கவும் பிடிக்காது. தயவுசெய்து என்னை இந்த விவகாரத்தில் இழுக்காதீர்கள்'' என்று சொல்லி அவர்கள் பிடியிலிருந்து தப்ப, கொஞ்ச நிதி உதவி செய்து அனுப்பி வைத்தார். மறு வாரம் ஒரு படப் பிடிப்பில் இவர் சந்தித்த மனோரமாவும், இதே பள்ளிக்கூடப் பெயர் சூட்டுபவர்கள் தன்னிடம் வந்து 'பெயர் தானம், நிதி தானம்' கேட்டதாகவும் சொன்னார். வேறு இரண்டு நடிகர்களும் இதே கதையைச் சொன்னார்கள். பள்ளிக்கூடத்தின் பெயராலும் மோசடி நடத்த முடிகிறது என்பதை இப்போதுதான் முத்துராமன் தெரிந்து கொண்டார்.



''உண்மை எது, போலி எது என்று சந்தேகம் ஏற்படும் போது நல்ல முறையில் உதவி செய்யும் வாய்ப்பைக்கூடத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது'' என்று சொல்லும் முத்துராமன் இப்போதெல்லாம் தான தருமம் கேட்டு வருபவர்களிடம் ஜாக்கிரதையாகவே இருக்கிறார்.

இவருடைய கார் ஷெட் மூன்று வீடுகள் தள்ளியிருக்கிறது. இவர்தான் அங்கு போய்த் தம் காரை எடுத்துக் கொண்டு கிளம்புவார். தெருச் சிறுவர்கள் அப்போது ஒரே குரலில் 'குட்மார்னிங்' சொல்லுவதை இவர் மிகவும் ரசிப்பார்.

ஒரு சினிமா நடிகர் என்ற ஜபர்தஸ்து, தோரணை, கர்வம் எல்லாம் இவரிடம் கிடையாது. ஒரு சராசரி குடும்பத் தலைவர் என்ற முறையில் அக்கம்பக்கத்தினரிடம் கோவில் கும்பாபிஷேகத்திலிருந்து குழாயில் ஜலம் வரும் அளவு வரை பேசும் சுபாவமுடையவர் முத்து ராமன். இதனால் இவர் எங்கள் தெருவில் ஒரு 'பாப்புலர்' புள்ளி!

பேட்டி: **கோமதி சுவாமிநாதன்**




சுபிட்சம் பெருகச் சுழலும் எண்கள்!

ம. இராஜாராம்


தொலைபேசிகளையும் ஓய்ச்சலில்லாமல் பேசித் தொலைக்கும் பெண்களையும் இணைத்து நகைச்சுவைச் சித்திரங்கள் ஏராளமாய் எழுதப்படுகின்றன. டெலிபோனில் பேசுவதென்பது மிக மிகச் சகஜமாகி விட்ட நிலையில், நாட்டில் சுபிட்சம் பெருக, தொழிலும் வர்த்தகமும் விரைவான கதியில் வளமுற அது எந்த அளவுக்கு உதவுகிறது என்பது குறித்து எத்தனை பேர் சிந்திக்கிறார்கள்?


பளபளக்கும் சந்தன மேனியுடன் 'பிரியதர்சினி' வீற்றிருந்தாள். அவளுடைய வழவழப்பான பேக்லைட் மேனியைத் தீண்டிக் கையில் எடுத்துப் பார்த்தேன். பேக்லைட் என்பது பிளாஸ்டிக்கில் ஒரு வகை. உஷ்ணத்தால் பாதிக்கப்படாதது; இலேசானது என்பதால் இதைத் தொலைபேசிக் கருவியின் கூட்டுக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதற்கான மூலப் பொருள் பவுடர் உருவத்தில் வெளி நாட்டிலிருந்து வருகிறது. பெங்களூரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலிருக்கும் தூரவாணி நகரில் அமைக்கப்பட்டிருக்கும் இண்டியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸில் (ஐ. டி. ஐ.) 'பிரியதாசினி' வடிவம் பெறுகிறாள். பிரியதர்சினி தானா? பிரிய பாஷிணி இல்லையா? என்று யாரோ தமாஷாகக் கேட்டார்களாம்.— பேச உபயோகிக்கும் கருவிக்கு 'பாஷிணி' என்கிற பெயர்தானே பொருத்தம்?

விதவிதமான ஒன்பது நிறங்களில் இப்போது தொலைபேசிகள் செய்யப்படுகின்றன. சுவரில் மாட்ட வசதியான தொலைபேசிக் கருவியும் இப்போது புதிதாகச் செய்கிறார்கள். "நாங்கள் டெலிபோன் கருவிகள் மட்டுமே செய்கிறோம் என்பதே பலருடைய எண்ணம். அதிலேயே எத்தனையோ விதங்கள்: பத்து வழிகளில் உள்ளுக்குள் தொடர்பளிக்கும் தொலைபேசிகள்; ஸ்விட்சிங் தொலைபேசிகள்; இவற்றைச் சார்ந்த பலவிதமான எக்ஸ்சேஞ்ச் கருவிகள், டெலிபிரிண்டர் எக்ஸ்சேஞ்ச், ரயில்வேக்கான விசேஷ செய்தித் தொடர்புக் கருவிகள், வீதிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் சிக்னல் விளக்குகள் — இவை மட்டுமல்ல, பலவித எலெக்ட்ரானிக் கருவிகளும் தயாரிக்கிறோம். ஆஸிலேட்டர், கேதோட் ரே ஆஸிலோஸ்கோப், ஃப்ரீக்வென்ஸி கௌண்



- ஆட்டோமாடிக் எக்ஸ்சேஞ்ச் தயாராகிறது.
- தொலைபேசி கன்வேயர் பெல்ட்டில் நகர்ந்து வர அதன் பல பாகங்களை இணைக்கும் இடத்தின் ஒரு பகுதி.
- பரிசோதனைச் சாலையின் ஒரு பகுதி.
- பார்வையற்ற ஒரு தொழிலாளர் இயந்திரமொன்றை இயக்குகிறார்.
- ஆட்டோமாடிக் கிராஸ்-பார் எக்ஸ்சேஞ்ச் சோதனை செய்யப்படும் பகுதி.
- மானேஜிங் டைரக்டர் திரு உமாசங்கர்.





டர் (அலைவரிசையைக் கணக்கிடும் உபகரணம்) மைக்ரோ வேவ் கருவிகள்; இன்னும்...''

தொலைபேசியின் ரிஸீவரைக் காதில் வைத்துக் கொள்கிறோம். 'கொர்' ரென்று தொடர்ந்து ஒலி கேட்கிறது. இது 'டயல் டோன்' அதாவது, உங்கள் தொலைபேசி சரியாக இருக்கிறது—நீங்கள் எண்களைச் சுழற்றலாம் என்று அறிவிக்கும் ஒலி. நமக்கு வேண்டிய எண்ணில் அச்சமயம் வேறு எவரேனும் தொடர்பு கொண்டிருந்தால் 'எங்கேஜ்டு டோன்' கேட்கிறது. இல்லாவிட்டால், அங்கே மணியடிக்கும் 'ரிங் - பேக் டோன்' கேட்கிறது. மறுமுனையில் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் தொடர்பு கிடைக்கிறது. நாம் ரிஸீவரைக் கையில் எடுத்ததுமுதல் தொடர்பு கிடைக்கும்வரை டெலிஃபோன் எக்ஸ்சேஞ்சில் நடப்பவைகளைப் பற்றி நாம் நினைப்பதில்லை. பேசிவிட்டு வைத்து விடுகிறோம்.





நம் காதில் விழும் ஒவ்வொரு ஒலியையும் எழுப்பவும், சுற்றுகிற ஒவ்வொரு எண்ணுக்கும் தகுந்த ஸ்விட்சுகள் இணையவும் எக்ஸ்சேஞ்சுகளில் வரிசை வரிசையாக உபகரணங்கள் — ஸ்விட்ச் ராக்ஸ் — நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளில் நம் தலையைச் சுற்ற வைக்கும் அளவுக்குக் கம்பிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இக் கம்பிகளைத் தனியாக எடுத்து இணைத்தால் பல மைல் தூரத்துக்கு இவை நீளும். இந்த ஆட்டோமாடிக் எக்ஸ்சேஞ்சுகளையும் ஐ. டி. ஐ. தயாரிக்கிறது.

மொத்தம் பதினாறு பணிமனைகளில் வேலை நடக்கிறது. பவர் ப்ரெஸ்ஸின் ஒருபுறம் வர்ணப் பொடியைக் கொட்டினால் மூன்று அல்லது நான்கு நிமிடங்களில் அது தொலைபேசியின் உடலாக மாறி மறுபுறம் வருகிறது. ஃபீனல் ஃபார்மால்டிஹைடு என்னும் 'தெர்மோ செட்டிங்' பவுடரை, 400 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்குச் சூடாக்கிய மோல்டுகளில் கொட்டி, சதுர அங்குலத்துக்கு 3000 பவுண்டு அழுத்தம் கொடுக்கும்போது தனித் தனி

டெலிஃபோன் பாகங்கள் தயாராகின்றன. ஒவ்வொரு பாகமும் தயாராக முப்பது வினாடிகள் முதல் நான்கு நிமிடங்கள் வரை ஆகிறது. இன்னுமோர் இடத்தில் சிறுசிறு பாகங்களைச் சேர்க்கிறார்கள். ஒரு தொலை பேசிக் கருவி மொத்தம் சுமார் 400 சிறு பாகங்களால் ஆனது. டயல் பகுதியில் மட்டுமே 95 பாகங்கள் இருக்கின்றன. மேஜையின் இரு பக்கங்களிலும் வரிசையாக ஆண்களும் பெண்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். கன்வேயர் பெல்ட்டில் டெலிஃபோன் கூடு ஒவ்வொருவரிடமும் சென்று, ஒவ்வொரு பாகமாகப் பொருத்தப்பட்டு முழுமை யடைகிறது.

ஆட்டோமாடிக் எக்ஸ்சேஞ்சில் பழமையான ஸ்ட்ரௌஜர் (Strowger) முறையைத் தவிர, பெல்ஜியத்தைச் சேர்ந்த 'பெல் டெலிஃபோன் தயாரிக்கும் கம்பெனி'யுடன் சேர்ந்து கிராஸ்—பார் எக்ஸ்சேஞ்ச் கருவிகள் (Cross-bar exchange equipments) தயாரிக்கும் வேலையிலும் இப்போது ஐ. டி. ஐ. முழு கவனம் செலுத்துகிறது. இந்த முறையில் காலம், பொருள், மனித சக்தி யாவும் மிச்சப்படுகின்றன. பெங்களூர் — சென்னை நேரடி டெலிஃபோன் தொடர்பு போல மற்ற முக்கிய நகரங்களுக்கிடையிலும் நேரடித் தொடர்பு ஏற்படுத்துகையில், கிராஸ்—பார் எக்ஸ்சேஞ்சுகள் மிகவும் பயனளிக்கும்.

கிராஸ் — பார் எக்ஸ்சேஞ்சுக்கான பாகங்களுக்குத் துத்தநாகப் பூச்சு அளிக்குமிடத்துக்குப் போனேன். சமீபத்தில் நிறுவப்பட்ட இந்தப் புதிய அமைப்பு முழுக்க முழுக்கத் தானாக இயங்குகிறது. பிரம்மாண்டமான தொட்டிகளில் வெவ்வேறு சதவிகிதக் கலவைகளில் குறிப்பிட்ட நேரம் மூழ்கியிருந்து விட்டுப் பின்னர் தகடுகள் தாமாக அடுத்த தொட்டிக்கு நகர்ந்து செல்ல மின்சார இயக்கிகள் உள்ளன. இந்தியாவிலுள்ள மிக மிக நவீன அமைப்புக்களில் இதுவும் ஒன்று.

ஒரு நகரில் மிகவும் சுறுசுறுப்பான நேரம் எதுவென்பதை அந்நகரின் ஆட்டோமாடிக் எக்ஸ்சேஞ்சினுள் நுழைந்து பார்த்து அறிந்து கொண்டு விடலாம். சென்னையில் காலை 10 முதல் 12 வரையிலும், மறுபடியும் மாலை 3–30 முதல் 5 மணி வரையிலும் மவுண்ட் ரோடு எக்ஸ்சேஞ்சில் ஸ்விட்ச் ரூமினுள் நுழைந்தால், 'டோர், டோர்' என்று ஸ்விட்சுகள் இயங்கும் ஒலி பிய்த்து வாங்கும். ஸ்ட்ரௌஜர் டைப் எக்ஸ்சேஞ்சோடு, கிராஸ்—பார் எக்ஸ்சேஞ்சை ஒப்பிட்டால் பின்னதில் சத்தமே இராது. சென்னையில் மாம்பலத்தில் மட்டுமே கிராஸ்—பார் எக்ஸ்சேஞ்ச் உள்ளது.

சுமார் 13,000 பேர் — இவர்களில் 400 பெண்கள் — வேலை செய்யும் இந்தத் தொழிலகமும் இதைச் சார்ந்த குடியிருப்பும் அமைந்திருக்கும் இந்த 407 ஏக்கர் நிலம் 1948க்கு முன்பு எப்படி இருந்திருக்கும்? ஐ. டி. ஐ. யின் முதல் பணியாளரான திரு விசுவநாதன் பல சுவையான தகவல்களைச் சொன்னார்.

''ஒரே சவுக்குத் தோப்பு. கால் அழுந்தும் செம்மண் புழுதி. கால் வைக்கும் இடங்களிலெல்லாம் விஷப் பாம்புகள். மாலை ஆறு மணிக்கு மேல் மனிதர்கள் வரவே பயப்படும் இடம். மரங்கள் வெட்டப்பட்டன. தரை மட்டமாக்கப்பட்டது. ஓரிரு அறைகளும் இரண்டு பணிமனைகளும் கட்டப்பட்டன...''

முதல் மானேஜிங் டைரக்டர் காலத்தில், தொழிலாளர்களுக்கு வேண்டிய உடனடி வசதிகள் — கான்டீன், தண்ணீர் வசதி — இவைகளோடு தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் முதலியன கட்டுவதில் கவனம் செலுத்தப்பட்டதாம். இரண்டாமவர் காலத்தில் மருத்துவமனை, வீட்டு வசதி, பள்ளிக் கூடம், பஸ் முதலிய வசதிகள் செய்து கொடுப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாம். அதன் பின்னரே உற்பத்தியில் முழு மூச்சுடன் ஈடுபட்டதாம் ஐ. டி. ஐ.

1965ல் இந்தியத் தொழிற்சாலைகளில் சிறந்ததென ஐ. டி. ஐ. பரிசு பெற்றபோது அதை வாங்க டெல்லிக்கு திரு விசுவநாதன் தான் போயிருந்தாராம். 'நானும் கதை பொழுதி அச்சில் வந்திருக்கிறது' என்று இவர் என்னிடம் பேச்சோடு பேச்சாகக் கூறினார்.

நம் நாடு சுதந்திரம் பெற்ற பின் முதன் முதலாக நிறுவப்பட்ட பொதுத் துறை நிறுவனம் இந்தத் தொலைபேசி உற்பத்தி சாலை. 1948ல், இங்கிலாந்து நாட்டின் ஆட்டோமாடிக் டெலிஃபோன் அண்டு எலக்ட்ரிக் கம்பெனியுடன் கூட்டாக உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. மொத்த முதலீட்டில் இந்திய அரசாங்கம் 90 சத விகிதமும், மைசூர் மாகாண அரசாங்கம் ஏழரைச் சத விகிதமும், ஆட்டோமாடிக் டெலிஃபோன் அண்டு எலக்ட்ரிக் கம்பெனி இரண்டரை சதவிகிதப் பங்குகளும் எடுத்துக் கொண்டன.

இன்று ஐ. டி. ஐ. இங்கிலாந்து, ஐக்கிய அரபுக் குடியரசு, பெல்ஜியம், போலந்து போன்ற மேற்கத்திய நாடுகளுக்கும், பர்மா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற கிழக்கத்திய நாடுகளுக்கும், பாகிஸ்தான், இலங்கை, சிக்கிம், பூடான், நேபாளம் போன்ற அண்டை நாடுகளுக்குமாக — முப்பதுக்கும் அதிகமான ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குத் தன் தயாரிப்புக்களை ஏற்றுமதி செய்கிறது.

தொலைபேசிக் கருவிகள் மட்டுமல்லாமல் முழு எக்ஸ்சேஞ்சுகள், தொலைதூரச் செய்தித் தொடர்பு கருவிகள், லோடிங் காயில்கள், பாங்க் மல்டிப்பிள்ஸ், ஸ்விட்சுகள், கன்டென்ஸர் என்றிவ்வாறு பல பகுதிகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கிழக்கு ஆப்பிரிக்காவில் தார்—எ—ஸலாம் நகரத்தில் 5000 லைன் எக்ஸ்சேஞ்சு ஒன்றைத் தயாரித்து நிறுவவும், குமாஸி என்ற பல்கலைக் கழக நகரத்தில் 600 லைன் எக்ஸ்சேஞ்சு ஒன்றை நிறுவவும் ஐ. டி. ஐ.க்கு ஆர்டர்கள் கிடைத்துள்ளன. உலகச் சந்தைப் போட்டியில் இது ஒரு குறிப்பிடத்தக்க வெற்றி.


இதுவரையில் சுமார் 155 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தயாரிப்புக்கள் ஏற்றுமதியாகியிருக்கின்றன. 1967–68ல் மட்டும் ரூ. 50 லட்சம் மதிப்புள்ள தயாரிப்புக்கள் ஏற்றுமதி யாயின. 1967–68ம் ஆண்டில் 2,32,284 தொலைபேசிக் கருவிகள், 1,72,393 ஸ்ட்ரௌஜர் டைப் எக்ஸ்சேஞ்சுகள், 35,000 லைன் கிராஸ்-பார் எக்ஸ்சேஞ்சுகள், ரூ. 352 லட்

மட்டையடி மர்மம்!

கிரிக்கெட் பிரியர்களுக்கு இதோ ஒரு புதிர். படத்தில் மட்டையைப் பிடித்து அடிக்கிறார் இங்கிலாந்து ஆட்டக்காரர் பாரி நைட், அண்மையில் நடந்த லார்ட்ஸ் டெஸ்டில். இப்படி மட்டையை வீசியதால் அவர் அடைந்த லாபம் அல்லது நஷ்டம் என்ன ?

1. விக்கெட்
2. காட் - அவுட்
3. கிளீன் போல்ட்
4. பவுண்டரி
5. எல். பி. டபிள்யூ

உங்கள் ஊகம் சரிதானா என்பதை 24ம் பக்கம் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.



சம் மதிப்புள்ள டிரான்ஸ்மிஷன் கருவிகள் முதலியன தயாரிக்கப்பட்டன.

1967 — 68ல் வியாபார லாபம் சுமார் 3.52 கோடி ரூபாய்கள். இது அதன் முந்தைய வருஷத்தை விட 40 சதவிகிதம் அதிகம்.

தன்னைச் சார்ந்த சிறு தொழிலகங்கள் சிலவற்றையும் ஐ. டி. ஐ. ஆதரித்து வளர்க்கிறது. இதில் அதிக அக்கறை காட்டுகிறார் ஐ. டி. ஐ.யின் மானேஜிங் டைரக்டரான திரு உமாசங்கர். இந்தத் துணைத் தொழிலகங்களில் முக்கியமானது மஹிளா உத்தியோக ஸஹகார ஸங்க லிமிடெட் என்கிற அமைப்பு. 1965ல் நிறுவப்பட்ட இத் தொழிலகத்தில் வேலை பார்க்கும் 320 பெண்களும் ஐ. டி. ஐ தொழிலாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். மற்றும் சில துணைத் தொழில் நிறுவனங்களாவன: சமூக நல பெண்கள் கூட்டுறவு பண்டகசாலை; கண் மடைந்தோர் சங்கம்; மைசூரிலிருக்கும் தோமாதர் கூட்டுறவு சாலை. இவற்றோடு ஜம்மு—காஷ்மீரிலும் ஒரு சிறு துணைத் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே இணைப்புக் கம்பிகள், ஸ்ப்ரிங்கள் முதலியன— இப்போது இயங்கி வரும் எக்ஸ்சேஞ்சுகளுக்குத் தேவையான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

காரியாலயப் பகுதியிலிருந்து தொழிற்சாலைக்குப் போகும் நுழைவாயிலின் இரு புறமும் இரு புகைப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. "இவர்கள் யார்?" என்று என்னை அழைத்துச் சென்றவரிடம் கேட்ட போது அவர், "இவ்வருடம் சிறந்த யோசனைகளைத் தெரிவித்தவர்கள் இவர்கள். ஒவ்வொரு வருடமும் இப்படியே, உற்பத்தி சம்பந்தமாகச் சிறந்த யோசனைகளைத் தெரிவிப்பவர்களைக் கௌரவிக்கிறோம்" என்றார். இத்திட்டத்தின் கீழ் உபயோகமான யோசனைகளைத் தெரிவிக்கும் தொழிலாளர்களுக்கு ரூ. 25 முதல் ரூ. 1000 வரை பரிசளித்து, தேசிய சேமிப்புப் பத்திரங்களாக வழங்கப்படுகின்றன. இதுவரை இப்படிப் பரிசு பெற்றவர்கள் எத்தனையோ பேர்கள். இதனால் உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றமும், அந்நியச் செலாவணி சேமிப்பும், செலவுக் குறைப்பும் ஏராளம்.

ஐ. டி. ஐ. தொழிற்சாலையில் பார்வை யிழந்தோர் முப்பதுபேர் வேலை செய்கிறார்கள். இவர்களில் இருவர் பெண்கள். 1954 முதலே இத் தொழிற்சாலை பார்வை இழந்தோரை வேலைக்குச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் வேலை செய்யும் பிரம்மாண்டமான இயந்திரங்களிலிருந்து இவர்களுக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு 'பிரெயில்' எழுத்துப் புத்தகங்கள் முதலியன அளிக்கப்படுகின்றன. 'பிரெயில்' கைக் கடிகாரம் வாங்கக் கடனுதவி செய்யப்படுகிறது. இவர்களில் பலர் இப்போது குடியும் குடித்தனமுமாக இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் சமீபத்தில் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் வேலை செய்கையில் இவர்கள் கவனத்தை வேறெதுவும் கவர முடியாததால் இவர்கள் பெரும்பாலான சமயங்களில் மற்றவர்களை விடத் திறமையாகவும் அதிகமாகவும் கூட வேலை செய்கிறார்களாம்.

ஐ. டி. ஐ.யின் எதிர்காலத்துக்கான திட்டங்கள் யாவை? இப்போது தயார் செய்யப்படும் அளவான இரண்டு லட்சம் டெலிபோன் கருவிகளிலிருந்து எண்ணிக்கையை 1974க்குள் நாலரை லட்சம் கருவிகளாக உயர்த்தத் திட்டம். மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 46 கோடி ரூபாய் தயாரிப்புகளே வெளி வந்தன. நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் 170—180 கோடி ரூபாய் தயாரிப்புக்களை வெளிக் கொணரத் திட்டம்.

ஐ. டி. ஐ.யின் இன்னொரு அங்கமாக ஓர் புதிய ட்ரான்ஸ்மிஷன் எக்விப்மெண்ட் தொழிற்சாலை நிறுவப்படவிருக்கிறது. இடம் முதலியன கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன. இன்னும் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

புகைப்படங்கள் உதவி: ஐ. டி. ஐ. பொதுஜனத் தொடர்புத் துறை.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் நாற்பத்திநான்கு

யானை மிரண்டது!

அமரர் கல்கி

சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி பார்த்திபேந்திரனைத் தனியாக அழைத்துச் சென்று சிறிது நேரம் அந்தரங்கமாகப் பேசினார். பின்னர், தம்முடன் வந்த படை வீரர்களுக்குத் தனித் தனியே சில கட்டளைகளைப் பிறப்பித்தார்.

பார்த்திபேந்திரன் இளவரசரிடம் விடைபெற்றுக் கொண்டான். "ஐயா! நான் வந்த காரியம் நிறைவேறாமல் வெறுங்கையோடு திரும்புகிறேன். இதற்காகக் கரிகாலர் என்னை மிகவும் கோபித்துக் கொள்ளப் போகிறார். ஆயினும் என்ன செய்வது? தாங்கள் பிடிவாதமாக இருக்கிறீர்கள். என்பேரில் குற்றமில்லை. இதற்கு இங்குள்ளவர்கள் எல்லோரும் சாட்சி!" என்றான்.

இளவரசர், "அவ்வளவு அவசரமாகப் போக வேண்டுமா? தாங்களும் சேநாதிபதியோடு தொண்டைமானாறு வரை வந்துவிட்டுப் போகக் கூடாதா?" என்று கேட்டார்.

"அந்தப் பாதகத்துக்கு நான் உடந்தையாயிருக்க மாட்டேன். நான் வந்த கப்பல் திரிகோண மலையில் நிற்கிறது. அங்கே போய்க் கப்பல் ஏறிக் கூடிய சீக்கிரம் நான் காஞ்சிக்குப் போக வேண்டும். கரிகாலரிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும்!" என்றான் பார்த்திபேந்திரன்.

பின்னர் வந்தியத்தேவனைப் பார்த்து, "வல்லத்தரையரே! என்னுடன் நீ காஞ்சிக்கு வரவில்லையா?" என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறிது திடுக்கிட்டு நின்றுவிட்டு, "இல்லை; இளவரசருடன் போக விரும்புகிறேன்" என்றான்.

"நல்லது; என்னுடன் வராததற்காகப் பிறகு வருத்தப்படுவாய்!" என்று சொல்லி விட்டுப் பார்த்திபேந்திரன் புறப்பட்டான். சேநாதிபதியின் கட்டளையின்படி அவனுடன் இன்னும் சில வீரர்களும் கிளம்பிச் சென்றார்கள்.





வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானிடம், ''அந்தப் பல்லவன் கூறியதன் பொருள் என்ன? தன்னுடன் வராததற்காக நான் வருத்தப்படுவேன் என்று ஏன் கூறினான்? உமக்கு ஏதாவது தெரிகிறதா?'' என்று கேட்டான்.

''சேநாதிபதியும் அவனும் கலந்து பேசி ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள்! அதன் விவரம் இன்னதென்று தானே சீக்கிரத்தில் தெரியும். உண்மையில், இப்போது ஏற்பட்டிருக்கும் சங்கடத்துக்கு மூலகாரணம் இந்தக் கொடும்பாளூர்க் கிழவர்தான் !'' என்றான்.

''அது எப்படி? சேநாதிபதி என்ன செய்திருக்க முடியும்?''

''எல்லாம் அவருடைய வேலைதான். அவருடைய குடும்பப் பெண் ஒருத்தி பழையாறையில் வளர்கிறாள் என்பது உனக்குத் தெரியும் அல்லவா ?''

''நன்றாய்த் தெரியும். வானதி தேவியைத்தானே சொல்கிறீர் ?''

''ஆமாம்; அந்தப் பெண்ணை இளவரசருக்குக் கலியாணம் பண்ணிக் கொடுத்து இலங்கை அரசராக இவருக்கு முடிசூட்டிவிட வேண்டும் என்று சேநாதிபதிக்கு ஆசை. புத்த குருக்களைக் கொண்டு இலங்கைக் கிரீடத்தை அளிக்கும்படி ஏவியவர் இவர்தான். இவருடைய முயற்சியை இரகசியமாக வைத்திருக்கவாவது தெரிந்ததா? அதுவும் இல்லை. செய்தி தஞ்சைக்கு எட்டிவிட்டது. அதனால்தான் முதன் மந்திரி அநிருத்தர் இலங்கைக்கு வந்தார்; என்னையும் இளவரசரிடம் அனுப்பி வைத்தார். வந்தியத்தேவா ! எது எப்படியானாலும் நம்முடைய உயிரை நாம் பத்திரமாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இளவரசர் இலங்கைச் சிம்மாசனத்தை ஏற்க மறுத்தது பற்றி நீயும் நானும் தஞ்சையில் சாட்சி சொல்லும்படி நேரிடலாம் !''

இதற்குள் சேநாதிபதியின் காரியங்கள் முடிந்து விட்டன. அவருடன் வந்திருந்த படை வீரர்களில் நாலு பேரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வெவ்வேறு திசையில் புறப்பட்டுச் சென்றார்கள்.

கடைசியாக இளவரசரின் கோஷ்டியும் புறப்பட்டது. இளவரசர், சேநாதிபதி, வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான் இவர்களுடன் மேற்கூறிய நாலு வீரர்களும் உயர்ந்த ஜாதிக் குதிரைகள் மீதேறி வடதிசை நோக்கிப் புறப்பட்டார்கள்.

இவர்களைப் பின்தொடர்ந்து பூங்குழலி ஏறியிருந்த யானை, ஜாம் ஜாம்

என்று கம்பீரமாக நடந்து வந்தது. பூங்குழலியைத் தவிர அதன் மீது யானைப் பாகன் ஒருவன் மட்டுமே ஏறிக் கொண்டிருந்தான்.

கொஞ்ச தூரம் இராஜபாட்டை வழியாக அவர்கள் சென்றார்கள். ஆனால் இராஜபாட்டையில் பிரயாணம் செய்வது சுலபமாக இல்லை. வழியெங்கும் ஜனக்கூட்டமாயிருந்தது. இளவரசர் அவ்வழியில் வருகிறார் என்பதும் எப்படியோ ஜனங்களுக்குத் தெரிந்து போயிருந்தது. இலங்கைத் தீவின் வட பகுதியில் அப்போதெல்லாம் தமிழர்களே அதிகமாக வசித்து வந்தார்கள். அங்கங்கே ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று, "இளவரசர் அருள்மொழிவர்மர் வாழ்க!" "சேநாதிபதி கொடும்பாளூர் வேளார் வாழ்க!" என்று கோஷித்தார்கள். சில இடங்களில் ஜனங்கள் குதிரைகளைச் சூழ்ந்து கொண்டு பின்தொடர்ந்து வந்தார்கள். வரவரப் பின்தொடர்ந்து வரும் கூட்டம் அதிகமாகிக் கொண்டு வந்தது. குதிரைகள் வேகமாகப் போக முடியவில்லை.

இளவரசர் சேநாதிபதியுடன் இதைப் பற்றி விவாதித்ததின் பேரில் இராஜபாட்டையிலிருந்து விலகிக் காட்டு வழியில் போவதென்று தீர்மானமாயிற்று. ஜனங்களை மெதுவாகக் கழித்துக் கட்டிவிட்டு அவர்கள் காட்டு வழியில் பிரவேசித்தார்கள். காட்டு வழியில் இயற்கை இடையூறுகள் காரணமாக வேகமாகப் போக முடியவில்லை. கொஞ்ச தூரம் போனதும் தாமரைத் தடாகம் ஒன்று தென்பட்டது. அதன் கரைக்கு வந்ததும் எதிர்க் கரையில் ஒரு பெரிய ஜனக் கும்பல் நிற்பது தெரிந்தது. இவர்களைப் பார்த்தவுடனே அந்த ஜனக் கும்பலின் மத்தியிலிருந்து தாரை, தப்பட்டை, கொம்பு, பேரிகை முதலிய வாத்தியங்களின் பெரு முழக்கம் கிளம்பிற்று.

"கொஞ்சம் இருங்கள்; நான் போய் அவர்கள் யார் என்று பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று கூறிவிட்டுச் சேநாதிபதி குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு முன்னதாகச் சென்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து, "இளவரசர் இந்த வழி வருவது எப்படியோ பக்கத்துக் கிராமவாசிகளுக்குத் தெரிந்து போயிருக்கிறது. இளவரசருக்கு மரியாதை செய்யத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள்!" என்றார்.

ஜனங்கள் நெருங்கி வந்தார்கள். இளவரசரைச் சுற்றிச் சுற்றி வந்து அடங்காத ஆர்வத்துடன் பார்த்தார்கள். பல வகை ஜயகோஷங்களையும் வாழ்த்தொலிகளையும் கிளப்பினார்கள். அவற்றில், "ஈழத்தரசர் அருள்மொழி வர்மர் வாழ்க!" என்ற கோஷம் மட்டும் பிரதானமாயிருந்தது.

இளவரசர் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அந்த ஜனக் கூட்டத்துக்குத் தலைவன் என்று தோன்றிய ஒருவனை அருகில் அழைத்தார். "இவர்கள் எதற்காக எனக்கு ஈழத்து அரசப் பட்டம் கட்டுகிறார்கள்?" என்று கேட்டார். அவன் மிகப் பணிவுடன், "அரசே! பன்னெடுங் காலமாக இந்த ஈழநாடு நிலையான அரசு இல்லாமல் அவதிப்பட்டு வருகிறது. பொன்னியின் செல்வர் ஈழ நாட்டின் மன்னர் ஆக வேண்டும் என்பது எங்கள் கோரிக்கை. இந்நாட்டில் வாழும் எல்லா ஜனங்களுடைய விருப்பமும் அதுதான். தமிழர்கள், சிங்கள



வர்கள், சைவர்கள், பௌத்தர்கள், துறவிகள், இல்லறத்தார் எல்லாரும் அதையே விரும்புகிறார்கள்" என்று கூறினான்.

இளவரசருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் விருந்து அளிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தை ஏற்றுக் கொள்ளாமல் போக முடியவில்லை. விருந்துண்ட பிறகு விடைபெற்றுப் புறப்படுவதற்கு வெகுநேரமாகி விட்டது.

இளவரசருக்கு உபசாரங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் தனித்துப் பேசிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"தம்பி! பார்த்தாயா? இதெல்லாம் சேநாதிபதியின் சூழ்ச்சி என்று தெரிய

வில்லையா? முன்னாலேயே அவசரமாகச் செய்தி அனுப்பி இந்த உபசாரங்களையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''சேநாதிபதியின் ஏற்பாடுதான் என்று ஒருவாறு தெரிகிறது. ஆனால் இந்தச் சூழ்ச்சியின் நோக்கம் என்னவென்று தெரியவில்லையே? இப்படியெல்லாம் இந்தத் தீவில் வாழும் ஜனங்கள் சொல்வதைக் கேட்டு இளவரசர் நேற்று வேண்டாம் என்று மறுத்த சிம்மாசனத்தின் பேரில் இன்றைக்கு ஆசை கொண்டு விடுவார் என்ற எண்ணமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''அது ஒரு நோக்கமாயிருக்கலாம். அதைக் காட்டிலும் முக்கியமானது நம் பிரயாணத்தைத் தாமதப் படுத்துவது தான்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''பிரயாணத்தைத் தாமதப்படுத்துவதினால் சேநாதிபதி என்ன பலனை எதிர்பார்க்கிறார்?''

''அது எனக்கும் தெரியவில்லை; ஆனால் சீக்கிரத்தில் தெரிந்துதானே ஆக வேண்டும்? இளவரசருடைய முகத்தைப் பார்! அவருக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லையென்று தெரிகிறதல்லவா?''

வந்தியத்தேவன் இளவரசரின் முகத்தைப் பார்த்தான். ஆத்திரமான வார்த்தைகளைப் பேசும் போதுகூட மலர்ந்து விளங்கிய அவருடைய முகத்தில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தன. புருவங்கள் நெரித்திருந்தன. கண்கள் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டின.

அதே சமயத்தில் பூங்குழலி அத்தாமரைக் குளத்தின் இன்னொரு கரையில் தன்னந் தனியாக உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எதிர்பார்த்தபடி அவளுக்கு இந்தப் பிரயாணம் உற்சாகம் தருவதாக இல்லை.

பிரயாணத்தின் போது இளவரசருடன் தனித்திருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமென்று நினைத்தாள். அவர் தன்னுடனே அளவளாவிப் பேசுவார் என்று எண்ணினாள். தன் மனத்தில் பொங்கும் உணர்ச்சியில் ஒருசிறிதேனும் வெளியிடலாம் என்று ஆசைப்பட்டாள். அதற்கெல்லாம் சமயம் கிட்டாது போலிருக்கிறது. இளவரசரைச் சுற்றி ஒரே கூட்டமாகவே இருக்கிறது.

அவரை எதிரிகளிடம் கொண்டுபோய் ஒப்புவித்த பழி ஒன்றுதான் மிஞ்சும் போலும். அந்தப் பழி தனக்கு எதற்காக ஏற்பட வேண்டும்? ஏன் இங்கிருந்தபடி ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிடக் கூடாது? சேநாதிபதியின் கோபத்திலிருந்தாவது தப்பியபடி ஆகும்!

சே! சேநாதிபதியின் கோபம் என்னை என்ன செய்து விடும்? யாருடைய கோபந்தான் என்ன செய்து விடும்? அதற்கெல்லாம் நான் பயப்படவில்லை. ஆனால் என்னுடைய எண்ணமெல்லாம் ஏன் மண்ணோடு மண்ணாக வேண்டும்? இந்த நெஞ்சில் உள்ள தீ எத்தனை நாள் இப்படி என்னைத் தகித்துக் கொண்டிருக்கும்? — இந்த உடம்பில் உயிர் எதற்காக இருக்கிறது? திடீரென்று ஓர் இடி விழுந்து என்னைக் கொன்று விடக் கூடாதா? — இப்படி எத்தனையோ ஆயிரம் தடவை ஆசைப்பட்டாகிவிட்டது. பயன் ஒன்றுமில்லை. இந்த உயிர் தானாகப் போகப் போவதில்லை. நானாக ஏதேனும் செய்து கொண்டால் தான் இந்த உயிர் போகும்!....

ஆ! இது என்ன? கனவு காண்கிறேனா? இல்லை, கனவு இல்லை! அங்கே அந்தப் பாழும் மண்டபத்துக்குப் பக்கத்தில் இளவரசருடைய சிநேகிதர் என் வீட்டிலிருந்து பிடுங்கி எறிந்த கத்தி இதோ வந்து என்னருகில் விழுந்திருக்கிறதே? இதை யார் எறிந்திருப்பார்கள்? யாரோ அவருடைய பகைவர்கள்தான் எறிந்திருப்பார்கள்! என்னைக் கொல்லுவதற்குத்தான் எறிந்திருப்பார்கள்! என்ன துரதிர்ஷ்டம்! என் மேலே விழாமல் சற்று நகர்ந்து விழுந்து விட்டதே! — இதுவும் நல்லதற்குத்தான். கையில் இந்தக் கத்தி இருக்கட்டும். அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய பிறகு, அவரை அந்தப் பாதகர்களிடம் கொண்டு போய் ஒப்புவித்த பிறகு, அவர் எதிரிலேயே இந்தக் கத்தியினால் குத்திக் கொண்டு இறந்து விடுகிறேன். சீச்சீ! எதற்காக அவர் மனத்தை அப்படிப் புண்படுத்த வேண்டும்? அவர் கப்பலில் ஏறிப் போன பிறகு, படகில் ஏறி நடுக் கடலில் சென்று அங்கே குத்திக் கொண்டு சாகலாம். என் அருமைக் கத்தியே! நீ திரும்பி வந்தாயல்லவா? உன்னை அனுப்பியவர்களுக்கு வந்தனம்.

ஒரு வேளை இளவரசர் மேலே எறிய எண்ணி இதை எறிந்திருப்பார்களோ? ஆம்; அவருக்கு வழியில் எத்தனையோ அபாயங்கள் நேரலாம் என்று சேநாதிபதிகூடச் சொன்னாரே?... அப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கக் கூடாதா? அவர் பேரில் குறி பார்த்து எறிந்த கத்தி என் நெஞ்சில் விழக் கூடாதா? அப்படி விழுந்து அவருக்காக நான் உயிர் துறக்கும்படி நேரக்

கூடாதா? அப்படி நேர்ந்தால், நான் இரத்தம் பெருக்கி உயிர் துறக்கும் சமயத்தில்!....

பூங்குழலியின் மனத்தில் ஒரு விசித்திரமான தோற்றம் ஏற்பட்டது. அவளுடைய மார்பில் கத்தி பாய்ந்திருந்தது. அதிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. இளவரசர் ஓடி வந்தார். "ஐயோ! எனக்காக உயிர் துறக்கிறாயா?" என்று கேட்டார். பூங்குழலியின் உள்ளம் பூரித்து நெஞ்சிலிருந்து இரத்தம் அதிகமாகப் பீறிட்டு வந்தது. இளவரசர் அவளை வாரி எடுத்துத் தம் மடியில் போட்டுக் கொண்டார். அவளுடைய நெஞ்சிலிருந்து பெருகிய இரத்தம் அவர் உடம்பையும் உடைகளையும் நனைத்தது. பூங்குழலி கலகலவென்று சிரித்தாள். "இளவரசே! இப்போதாவது என் நெஞ்சில் உள்ளது என்னவென்று தெரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டாள். "அடி பாவி! அது எனக்கு முன்னமே தெரியுமே? இதற்காகவா உயிரை விடுகிறாய்?" என்று இளவரசர் அலறினார். பூங்குழலிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. உரத்த சத்தம் போட்டுச் சிரித்தாள்!....

"ஏ, பைத்தியமே!" என்ற குரலைக் கேட்டுப் பூங்குழலி நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் வந்தியத்தேவன் நின்று கொண்டிருந்தான்.

"இளவரசர் ஏற்கனவே கோபமாயிருக்கிறார்; பிரயாணம் தாமதப்படுகிறது என்று. உன்னால் வேறு தாமதம் வேண்டாம். சீக்கிரம் எழுந்து வா!" என்றான் வந்தியத்தேவன்.

பூங்குழலி சிரித்துக் கொண்டு எழுந்து ஓடிப் போய் யானையின் மீது ஏறிக் கொண்டாள். கத்தியை நெஞ்சுடன் அணைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

* * *

காட்டு வழியில் மேலும் கொஞ்ச தூரம் சென்ற பிறகு எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பிரயாணிகளின் வலது பக்கமிருந்த அடர்ந்த காட்டிலிருந்து 'விர்' என்ற சத்தத்துடன் ஓர் அம்பு பாய்ந்து வந்தது. இளவரசரைக் குறி பார்த்து அது எய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த அம்பைவிட வேகமாக இளவரசர் குதிரையின் தலைக் கயிற்றை இழுத்துத் திருப்பினார். அம்பு அவருக்கு வெகு சமீபமாகச் சென்று அவருக்கு அப்பால் வந்து கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானுடைய தலைப் பாகையில் பாய்ந்து அதைக் கொத்திக் கொண்டு சென்றது.

ஆழ்வார்க்கடியான் தலையைத் தடவிக் கொண்டு வியப்புடன் பார்த்தான்.

சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி திடுக்கிட்டுப் போய் விட்டார்.

எல்லாருமே திகைத்து நின்றார்கள்.

பூங்குழலியோ அந்த அம்பு தன் பேரில் விழுந்து தன்னைக் கொன்றுவிடவில்லையே என்று வருத்தப்பட்டாள்.

சிறிது திகைப்பு நீங்கிய பிறகு சேநாதிபதி, "இளவரசே! பார்த்தீர்களா? தங்களைப் பாதுகாப்பின்றித் தனியே அனுப்பியிருந்தால் எவ்வளவு பிசகான காரியமாயிருக்கும்?" என்று சொல்லிவிட்டுக் காவலுக்கு வந்த வீரர்களைக் காட்டுக்குள் புகுந்து தேடச் சொன்னார். அவர்கள் சிறிது நேரம் தேடிவிட்டுத் திரும்பி வந்து, "யாரும் அகப்படவில்லை" என்றார்கள்.

சேநாதிபதி மேலே பிரயாணத்தைப் பற்றி ஏற்பாடு செய்யத் தொடங்கினார்.



"இளவரசரை நடுவில் நிறுத்தி நாம் நாலுபுறமும் சூழ்ந்து வரவேண்டும்" என்று கூறி, வியூகம் வகுக்க ஆரம்பித்தார்.

அப்போது இளவரசர், "சேநாதிபதி! ஒரு வேண்டுகோள்!" என்றார்.

"இது என்ன வார்த்தை? கட்டளையிடுங்கள்!" என்றார் சேநாதிபதி.

"நான் உயிரோடு தஞ்சை செல்ல விரும்புகிறேன். நான் குற்றமற்றவன் என்பதை என் தந்தையிடம் மெய்ப்பிக்க விரும்புகிறேன்...."

"தங்கள் தந்தை தங்களை ஒரு நாளும் சந்தேகிக்க மாட்டார், இளவரசே!"

"தந்தை மட்டுமல்ல; மக்கள் எல்லாரும் ஒப்புக் கொள்ளும்படி நிரூபிக்க விரும்புகிறேன். அந்தக் காரியத்தை

நிறைவேற்றிய பிறகு என் உயிரைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டேன். அதற்கு முன்னால் வழியிலேயே உயிர் துறக்க விரும்பவில்லை.''

''ஐயா! தங்கள் உயிருக்கு ஆபத்து வருவதாயிருந்தால் அந்த க்ஷணமே இந்தக் கொடும்பாளுர் வாளை என் நெஞ்சிலே செலுத்திக் கொள்வேன்.''

''அதில் ஒன்றும் பயனில்லை. சோழ நாடு மகத்தான நஷ்டம் அடையும்.''

''தங்களை இழப்பதைக் காட்டிலும் பெரிய நஷ்டம் சோழ நாட்டுக்கு வேறு என்ன இருக்க முடியும்? தங்களுக்கு ஆபத்து வருவதற்குக் காரணமாயிருந்து விட்டு அப்புறம் இந்தக் கொடும்பாளுர்க் கொடும்பாவி ஒரு கணமும் உயிரை வைத்துக் கொண்டிருப்பேனா?''

''அப்படியானால் என் உயிரை நான் காப்பாற்றிக் கொள்ளுவது இன்னும் முக்கியமாகிறது.''

''அதைக் காட்டிலும் முக்கியமானது இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை.''

''அதற்கு எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.''

''சொல்லுங்கள், ஐயா!''

''குதிரை மேல் பிரயாணம் செய்யும் வரையில் சற்றுமுன் வந்த அம்பைப் போல் வேறு அபாயங்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும்.''

''நடந்து போகலாம் என்று சொல்லுகிறீர்களா? அல்லது....''

''எனக்கு யானைகளின் பாஷை நன்றாய்த் தெரியும்; யானைகள் நான் சொன்னபடி கேட்கும் என்று தாங்கள் அறிவீர்கள் அல்லவா?''

''ஆம், ஐயா! யானைப்பாகன் வேஷம் பூண்டு இந்த இலங்கைத்தீவில் பெரும் பகுதியைத் தாங்கள் சுற்றிப் பார்த்திருப்பதும் எனக்குத் தெரியும்.''

''ஆகவே நான் சொல்கிறது என்னவென்றால், மறுபடியும் சிறிது நேரம் நான் யானைப் பாகன் ஆகிறேன். இப்போது யானையை நடத்துகிறவன் கொஞ்ச தூரம் என் குதிரை மேல் ஏறிக் கொண்டு வரட்டும்.''

இதைக் கேட்ட சேநாதிபதி சிறிது மனத் தடுமாற்றமடைந்ததாகத் தோன்றியது. இளவரசருடைய யோசனைக்கு யாராவது ஆட்சேபம் சொல்லமாட்டார்களா என்று ஆவலுடன் சுற்றுமுற்றும் பார்த்தார். ஆனால் எல்லாரும் கம்மென்று இருந்தார்கள்.

''ஐயா! யானைப் பாகனுக்குக் குதிரை ஏறத் தெரியுமோ, என்னமோ?''

''தெரியாவிட்டால், நடந்து திரும்பிப் போகட்டும்.''

''அந்தப் பெண் பெரிய சங்கோசியாயிருக்கிறாளே? அவள் தங்களுக்குச் சரி சமமாக யானை மீது உட்காரமாட்டேன் என்று சொன்னால்....''

''கீழே குதித்து நடந்து வரட்டும்.''

''தங்கள் சித்தம், இளவரசே!''

இளவரசர் உடனே குதிரை மீதிருந்து குதித்தார். யானையின் அருகில் சென்றார். பூங்குழலியின் கரிய கண்கள் ஆர்வத்தினால் நீண்டு வியப்பினால் அகன்று அவரை நோக்கின. யானைப் பாகனை இறக்கி விட்டுத் தாம் யானை மீது பாய்ந்து அதன் கழுத்தில் உட்கார்ந்து கொண்டார்.

தடைப்பட்ட பிரயாணம் மறுபடியும் ஆரம்பமாகியது.

பூங்குழலி புளகாங்கிதம் அடைந்தாள். யானையின் முதுகின் மேலிருந்து மேகங்களின் மீது பாய்ந்தாள். வான வெளியில் உலவினாள். சொர்க்கத்தை எட்டிப் பார்த்து அதன் விவரிக்க முடியாத இன்ப சுகத்தின் இயல்பு இதுவென்பதை ஒருவாறு உணர்ந்து அறிந்தாள்.

ஆகா! இதுவென்ன தேவகானமா? இவ்வளவு இன்பமா யிருக்கிறதே? இல்லை, இல்லை, தேவகானத்துக்கு இவ்வளவு இனிமை ஏது? இளவரசர் அல்லவா பேசுகிறார்?

''சமுத்திரகுமாரி! என்னுடன் இந்த யானை மீது தனியாக இருப்பது உனக்கு அருவருப்பா யிருக்கிறதா?''

''ஏழு ஜன்மங்களில் நான் செய்த தவத்தினால் இந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கிறது, பிரபு!''

''திடீரென்று இந்த யானைக்கு மதம் பிடித்து இது ஓட ஆரம்பித்தால் நீ பயப்படுவாயா?''

''தாங்கள் பக்கத்தில் இருக்கும் போது வானம் இடிந்து விழுந்தாலும் பயப்பட மாட்டேன், ஐயா!''

''உன் படகை எங்கே விட்டு விட்டு வந்திருக்கிறாய், பூங்குழலி?''

''யானை இறவுத் துறைக்குச் சமீபத்தில், ஐயா!''

''இக்கரையிலா, அக்கரையிலா?''

''அக்கரையிலேதான் படகை நிறுத்தத் தனி இடம் கிடைத்தது. அங்கேயே படகை நிறுத்திவிட்டு வந்தேன்.''

''யானை இறவுத் துறையை எப்படிக் கடந்து வந்தாய்?''

''நான் வரும் போது கடல் நீர் மிகவும் குறைவாயிருந்தது. ஆகையால் பெரும்பாலும் நடந்து வந்தேன். கொஞ்சம் நீந்தியும் வந்தேன்.''

''இப்போது இந்த யானை கடலில் இறங்கிச் சென்றால் பயப்படுவாயா?''

"கடலிலே என்னைத் தள்ளிவிட்டாலும் கவலையில்லை; நான்தான் சமுத்திரகுமாரி ஆயிற்றே? தாங்கள் தானே பெயர் கொடுத்தீர்கள்?"

"உன் படகு இருக்குமிடம் சென்றதும் அதில் நாம் ஏறிக்கொள்வோம். நீ தான் படகு தள்ளிக் கொண்டு வர வேண்டும். இரண்டு பேரையும் வைத்துத் தள்ள முடியும் அல்லவா?"

"பத்து வயது முதல் துடுப்புப் பிடித்த கரங்கள் இவை, பிரபு! அரண்மனைப் பெண்களைப் போல் மலரினும் மிருதுவான கரங்கள் அல்ல. தங்கள் சிநேகிதர் வந்தியத்தேவரை வைத்துத் தள்ளியதை அவர் சொல்லவில்லையா?"

"சொன்னார்! ஆனால் இன்று அதைவிட வேகமாகத் தள்ள வேண்டும். தொண்டைமான் ஆற்றின் முகத்துவாரத்தில் கப்பல்கள் வந்து நிற்கும் இடத்துக்கு அதிசீக்கிரமாகப் போய்ச் சேர வேண்டும்."

"இளவரசே! அவ்வளவு கொடூரமான காரியத்தை என்னை ஏன் செய்யப் பணிக்கிறீர்கள்? தங்களைச் சிறையாகாமல் தப்புவிப்பதற்காக ஓடோடியும் வந்தேன். சிறைப்படுத்த வந்திருப்பவர்களிடம் தங்களைக் கொண்டு போய் ஒப்புவிக்கும்படி பணிக்கிறீர்கள்? இந்த ஏழையின் பேரில் ஏன் இவ்வளவு கொடூரம்?"

"பூங்குழலி! என் தந்தை — சக்கரவர்த்தி—நோய்ப்பட்டிருப்பது உனக்குத் தெரியும், அல்லவா?"

"தெரியும், ஐயா! வானத்தில் சில நாளாக வால் நட்சத்திரம் தோன்றுவது பற்றி ஜனங்கள் பேசிக் கொள்ளுவதும் எனக்குத் தெரியும்."

"எந்த நிமிஷத்திலும் என் தந்தையின் வாழ்நாள் முடிவுறக் கூடும் அல்லவா?"

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

"அவர் ஒரு வேளை இவ்வுலகை நீத்துச் செல்ல நேரிட்டால், அவருக்கு எதிராக நான் சதி செய்து இராஜ்யத்தைக் கைப்பற்ற முயன்றேன் என்ற எண்ணத்துடன் அவர் போவது நல்லதா?"

"சக்கரவர்த்தி தங்களைப் பற்றி ஒரு நாளும் அப்படி நம்ப மாட்டார். இது பழுவேட்டரையர்களின் சூழ்ச்சி!"

"அப்படிப்பட்ட பழுவேட்டரையர்களுக்கும்கூட நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க விரும்புகிறேன்..."

"எதற்காக, ஐயா?"

"உண்மையிலேயே எனக்கு இராஜ்யம் ஆளுவதில் ஆசையில்லை, பூங்குழலி!"

"வேறு எதில் தங்களுக்கு ஆசை?"

"படகில் ஏறி முடிவில்லாத கடலில் என்றென்றும் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்று ஆசை! கடல்களுக்கு அப்பால் இந்த ஈழ நாட்டைப் போல் எத்தனையோ நாடுகள் இருப்பதாகக் கேள்வி. அந்த நாடுகளுக்கெல்லாம் போகவேண்டும் என்று ஆசை. அந்தந்த நாட்டு மக்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று ஆசை!"

"விந்தை! விந்தை!"

"எது விந்தை?"

"என் மனத்தில் குடிகொண்டுள்ள ஆசையே தங்கள் மனத்திலும் இருப்ப



தைக் குறித்து ஆச்சரியப்படுகிறேன். தாங்கள் அப்படிக் கடல் பிரயாணம் தொடங்கும்போது என்னையும் அழைத்துப் போவீர்களா?"

"முதலிலே, இப்போது நான் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுகிறேன். அதற்கு நீ உதவி செய்வாய் அல்லவா?"

"தங்கள் சித்தம்!"

"நீ உட்கார்ந்திருக்கும் பீடத்திலிருந்து இரண்டு பக்கமும் கயிறுகள் தொங்குகின்றன அல்லவா? அவற்றை எடுத்து உன்னைக் கெட்டியாகக் கட்டிக் கொள்."

"எதற்காக, இளவரசே!"



விடை : பாரி நைட், மாட்ஸ் வீசிய பந்தில் கிளீன் போல்ட்! அவர் எடுத்த ரன்கள் 49.
படம் : உலகச் செய்திப்பட நிலையம்.

''யானை இப்போது மதங்கொண்டு ஓடப் போகிறது. ஜாக்கிரதை, பூங்குழலி !''

இவ்விதம் கூறிவிட்டு இளவரசர் யானையின் மத்தகத்தைக் கையினால் தடவிக் கொடுத்த வண்ணம் அதன் காதண்டை ஏதோ சொன்னார்.

யானையின் நடை வேகம் திடீரென்று அதிகமாயிற்று.

இளவரசர் யானையின் செவியண்டை குனிந்து மேலும் ஏதோ சொன்னார்.

அவ்வளவுதான் ! நடை, ஓட்டமாயிற்று. துதிக்கையைத் தூக்கிக் கொண்டு ஒரு தடவை பயங்கரமான பிளிறல் சத்தம் போட்டு விட்டு ஓடத் தொடங்கியது. சூறாவளி சுழன்று அடிக்கும் போது காடுகளின் மரங்கள் படும்பாடு அந்த யானையின் வேகத்தினால் பட்டன. சடசடவென்று மரங்களும் மரக் கிளைகளும் சரிந்து விழுந்தன. பூமி அதிர்ந்தது. எட்டுத் திக்குகளும் நடு நடுங்கின. மரங்களின் மீதிருந்த பறவை இனங்கள் சிறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டும் பீதி கொண்ட குரலில் கூவிக் கொண்டும் பறந்தன. காட்டில் மறைந்து வாழ்ந்த மிருகங்கள் வெளிப் புறப்பட்டு நாலாபுறமும் விழுந்தடித்து ஓடின.

'' ஐயையோ ! யானைக்கு மதம் பிடித்து விட்டது போலிருக்கிறதே ! இது என்ன விபரீதம் !'' என்று சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி கூவினார்.

இவ்வளவு தூரம் இளவரசர் சொல்லியிருந்தும் பூங்குழலியின் உள்ளமும் திகில் அடைந்தது. அவள் முகத்தில் பயப்பிராந்தியின் அறிகுறிதோன்றியது.

பூங்குழலி ஒரு பெரிய பயங்கரமான பிரம்மாண்டமான கடல் சுழலில் அகப்பட்டுக் கொண்டாள். அதே சுழலில் அகப்பட்டுக் கொண்டு இளவரசரும் சுற்றிச் சுற்றி வந்தார். யானையும் அப்படியே சுழன்றுசுழன்று வந்தது.

பூங்குழலி கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

புயற்காற்றினால் தள்ளப்பட்டு ஓடும் கரிய மேகத்தைப் போல் யானை போய்க் கொண்டே யிருந்தது.

கடைசியில் யானை இறவுத் துறையை அடைந்தது.

அங்கே இலங்கைத் தீவின் கீழ்ப்புறத்துக் கடலும் மேற்புறத்துக் கடலும் ஒன்றாய்ச் சேர்ந்தன. அந்த ஜலசந்தியின் மிகக் குறுகலான இடத்துக்குத்தான் யானை இறவு என்று பெயர். இலங்கைத் தீவின் வட பகுதியையும் மத்தியப் பகுதியையும் ஒன்று சேர்த்த அக்கடல் துறையில் யானை இறங்கியது. அனுமார் தூக்கி எறிந்த மலை கடலில் விழுந்தது போல விழுந்தது.

(தொடரும்)



நெருங்கி உறவாடும்,




நெஞ்சைக் கவரும் நறுமணமுள்ள


லக்மே டால்கம்

உங்கள் இதயம் கவரும் நறுமணத்தை மணிக் கணக்கில் வீசிக்கொண்டிருக்கும் டால்கம்—நெஞ்சை விட்டகலாத லக்மே! அந்த இணையற்ற இன்பத்தை அனுபவிக்கத் தாமதமேன்? இன்றே உங்கள் மேனியின் மீது இம்மணம் கமழும் லக்மே டால்கம் தூவுங்கள். அது பட்டுப் போன்று மென்மையானது; நேர்த்தியானது; இணைபிரியாதது. ஒரு கனிவு 'லக்மீ' சுரமாகத் துவக்க, இதை விட இன்பம் தருவது வேறென்ன இருக்கப் போகிறது?

இது இவ்வகை மணம் வீசி, உங்களை அன்புடன் அணைய வருகிறது. லேவெண்டர், வெட்டிவேர், ஜாஸ்மின், சந்தனம் ஆகிய நான்கும், மீடியம் மற்றும் எகானமி சைஸ்களில் வருகின்றன. ஐந்தாவதான ஃப்ளோரல் மிஸ்ட், பெரிய ஃபேமிலி சைஸில் வருகிறது. எல்லாமே நீங்கள் எளிதில் வாங்கக்கூடிய விலையில்; எல்லாமே இன்ப மணம்; எல்லாமே இன்ப மயம்!



ASP/L-50



23. கோபமும் சமாதானமும்

ராமன் கௌசல்யா தேவியின் மனைக்குச் சென்றான். அங்கே பிராமணர்கள், விருந்தினர்கள், ஸ்திரீகள் எல்லாரும் சந்தோஷமாகப் பட்டாபிஷேகத்தை எதிர் பார்த்துக் கூடி யிருந்தார்கள். மூன்றும் கட்டுக்குள் கௌசல்யா தேவி வெண் பட்டு உடுத்தி ஓமத் தீயில் நெய் விட்டுக் குமாரனுடைய க்ஷேமத்துக்காகத் தேவதைகளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். ராமன் வந்ததும் எழுந்து அவனை ஆலிங்கனம் செய்து உச்சி மோந்து யுவராஜா ஆகப்போகும் குமாரனுக்குத் தகுந்த ஓர் ஆசனத்தைக் காட்டி உட்காரச் சொன்னாள்.

''அம்மா! எனக்கு இந்த ஆசனம் தகாது. கீழே தர்ப்பைப் புல் பரப்பி உட்கார வேண்டிய தபஸ்வி நான். தங்களுக்கு வருத்தம் தரக் கூடிய சமாசாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். பொறுத்துக் கொண்டு என்னை ஆசீர்வதிக்க வேண்டும்'' என்று கூறிச் சுருக்கமாக நடந்த விஷயத்தை ராமன் கௌசல்யைக்குச் சொன்னான்.

''அரசர் இராஜ்யத்தைப் பரதனுக்கு அளிக்க விரும்புகிறார். நான் பதினான்கு வருஷம் தண்டகாரண்யத்தில் வனவாசம் செய்ய வேண்டும் என்று அரசருடைய ஆணை. உங்களிடம் சொல்லி விடைபெற்றுக் கொண்டு இன்றே நான் செல்ல வேண்டும்'' என்றான்.

இதைக் கேட்டதும் வாழை மரம் அறுபட்டுக் கீழே விழுவது போல் கோசலை தரையில் விழுந்தாள். லக்ஷ்மணனும் ராமனும் அவளை எடுத்துத் தடவிக் கொடுத்து உட்கார வைத்தார்கள்.

''என் இதயம் இரும்போ? கல்லோ? நான் இன்னும் உயிருடன் இருக்கிறேனே?'' என்று மகனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

லக்ஷ்மணனுக்குக் கௌசல்யா தேவியின் துக்கத்தைப் பார்த்துச் சகிக்கவில்லை. அரசன் மேல் கடுங் கோபம் மேலிட்டுப் பேச ஆரம்பித்தான்.

''கொடும் பாதகங்கள் செய்த துன்மார்க்கர்களுக்கு விதிக்கும் தண்டனையை ராமச்சந்திரனுக்கு இந்தக் கிழ அரசர் விதித்திருக்கிறார். என்ன குற்றம் ராமன் செய்தான் என்று கண்டு இந்தப் பிராயச்சித்தத்தை விதித்தார்? விரோதிகளில் கூட எவனும் ராமன் பேரில் ஒரு குற்றமும் சாட்டியதில்லை. மூடனாய்ப் போனார் நம் தந்தை. கிழ வயதில் காதலின் காரணமாகப் புத்தியை இழந்தார். இவர் அரசராக இருக்க இனித் தகுந்தவரல்ல. ஸ்திரீயின் பேச்சைக் கேட்டு அதருமம் செய்யும் ஒருவர் எப்படி அரசராக இருக்கலாம்? பகைவர்கள் கூட உன்னைக் கண்ட மாத்திரத்தில் உன்மேல் அன்பு செலுத்துவார்கள். உன்னை வனம் போகச் சொல்கிறார் மூடர். அண்ணா! நீயும் நானும் சேர்ந்து இவரைத் தகர்த்து விட்டு ராஜ்யத்தை இன்று முதல் ஆள்வோம். யார் நம்மை எதிர்க்கத் துணிவார்கள்? எதிர்க்கத் துணிந்தவர்களை ஹதம் செய்வேன். நீ எனக்கு அநுமதி கொடுத்தால்

போதும். நான் ஒருவனே பார்த்துக் கொள்ளுகிறேன். பரதன் ராஜ்ய பதவிக்கு வருவதாம், நீ வனம் புகுவதாம். உலகம் சிரிக்கும். இதற்குச் சம்மதிக்க வேண்டாம். நான் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நம்மை எதிர்ப்பவர்களை ஹதம் செய்து விட்டு எந்த இடைஞ்சலுமில்லாமல் நீ ஆட்சி புரிந்து வரும்படி நான் பார்ப்பேன். இந்தச் சக்தி எனக்கு உண்டு. சூரியன் உதிப்பதற்குப் பதிலாகப் பெரிய இருள் உண்டாகி விட்டது. பட்டாபிஷேகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்க, வனவாசம் என்கிறார் அரசர். இந்த அதருமத்தைப் பொறுத்துக் கொண்டு நயமாகப் பேசுவதில் பயனில்லை. என்னால் இதைச் சகிக்க முடியாது. என் தருமத்தை நான் நடத்தியே தீருவேன். அம்மா நீ பார்! ராமா, நீயும் பார் என் சக்தியை!'' என்றான்.

லக்ஷ்மணன் சொன்னது கௌசல்யைக்கு ஆறுதல் தந்தது. ஆயினும் புருஷனை ராஜ்யாதிகாரத்தினின்று நீக்கிவிட்டு, ராஜ்யத்தை ஆக்கிரமிப்பது முதலிய அதற்கு முன் என்றும் கேளாத பேச்சுக்களைக் கேட்டுப் பயந்தாள்.

''ராம! லக்ஷ்மணன் சொல்வதையெல்லாம் சரியாக ஆலோசித்துப் பார். காட்டுக்குப் போக வேண்டாம். போனால் நான் தனியாக எப்படி இங்கே சத்துருக்களிடையில் இருக்க முடியும்? உன்னுடன் நானும் வந்துவிடுகிறேன்'' என்றாள்.

தம்பி சொன்னதைச் சாந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் ராமன். லக்ஷ்மணனுடைய ரோஷம் பொங்கி வடிய வேண்டும். அதை முற்றிலும் அடக்க இயலாது என்று எண்ணிக் கோபம் தீரப் பேச விட்டான்.

பிறகு கௌசல்யா தேவியை நோக்கி, ''தாயே! என்னுடன் யாரும் காட்டுக்குப் போகும் பேச்சு வேண்டாம். வயோதிக அரசருக்கு நீங்கள் சிசுரூஷை செய்து கொண்டு பொறுமையுடன் இங்கேயே இருப்பது உங்களுடைய கடமை. மகாராஜனைப் புருஷனாகக் கொண்ட பட்டமகிஷி எவ்வாறு புருஷனை இழந்த ஒரு ஸ்திரீயைப் போல வனத்துக்கு என்கூட வரலாம்? அது தகாது. நான் வனவாசம் முடிந்து திரும்பி வரப் போகிறேன். எல்லாரும் சுகமாகப் பல்லாண்டு வாழ்வோம். தந்தையின் வாக்கு தருமமோ, அதருமமோ, சுயமாகச் சொன்னதோ, பிறர் சொல்லக் கேட்டு மோசம் போய்ச் சொன்னதோ, எப்படியாயினும் சரி, அதைச் சிரமேற் கொண்டு நிறைவேற்றுவது என் கடமை. இந்தத் தருமத்தை நான் புறக்கணித்து விட்டு எந்தப் பொருளைப் பெற்றும் எந்தப் பதவியை வகித்தும் சுகமோ, புகழோ பெற முடியாது'' என்று கூறி லக்ஷ்மணனைப் பார்த்து, ''லக்ஷ்மணா! நீ சொல்லும் யோசனை முற்றிலும் தவறு. உன் சக்தியை நான் அறிவேன். சந்தேகமேயில்லை. எல்லாரையும் தோற்கடித்து ஹதம் செய்து எனக்கு நீ ராஜ்யம் சம்பாதித்துக் கொடுப்பாய். என் மேல் உனக்கு இருக்கும் அன்பு எனக்குத் தெரியும். ஆனால் அது நம்முடைய வம்சத்துக்குத் தகாது. பிதிரு வாக்குப் பரிபாலனம் என்பது சிறந்த தருமம். அதை இழந்து வேறு எதைச் சம்பாதித்தாலும் ஈடு ஆகாது'' என்றான்.

இவ்வாறு இருவரையும் சமாதானப்படுத்த முயன்றான் ராமன். லக்ஷ்மணனுடைய கோபம் அவ்வளவு சுலபமாகத் தணியுமா? தன்னைப் பற்றிய விஷயமாக இருப்பின் ஒருவேளை கோபம் எளிதில் தணியும். ராமனுக்கு இந்தத் துக்கம் கொஞ்சமும் காரணமின்றி மிக அநியாயமாக நேர்ந்ததே என்கிற கோபம் அவனை விட்டு அகலவில்லை. படம் எடுத்துச் சீறும் நாகப் பாம்பைப்போல் கண்களினின்று கோபப் பொறிகள் பறந்து கொண்டிருந்த லக்ஷ்மணனைத் தனியாக உட்கார வைத்து ராமன், நிதானமாகப் பேசினான்.

''தம்பி, எனக்கு நீ வெளியில் நடமாடும் உயிரல்லவா? நான் சொல்வதைக் கேள். நீ தைரியசாலி. உன் கோபத்தையும் என்னைப் பற்றிய துக்கத்தையும் நீ அடக்கி யாளவேண்டும். இது உன்னைப் பிடித்துக் கொண்டு வெறியாட்டம் ஆட இடம் கொடுக்காதே. தருமம் என்பதைப் பலமாகப் பற்றிப் பிடித்து இப்போது ஏற்பட்ட அவமானத்தை ஒரு பெரிய சந்தோஷமாக மாற்றுவோம். பட்டாபிஷேகத்தை முற்றிலும் மறந்து விட்டு நம் கருத்தையெல்லாம் வேறு துறையில் செலுத்துவோம். நம்மைப் பெற்ற தந்தையின் நிலை இப்போது என்ன என்பதை நன்றாக ஆலோசிப்போம். அவருக்கு ஏற்பட்டிருக்கும் பயம் என்ன என்பதை நாம் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டோ கொடுத்து விட்ட ஒரு வரத்தை இல்லை என்று இப்போது சொன்னால், அசத்தியத்தில் இறங்கினதாகும்; பாவம் வந்து சுற்றிக்கொள்ளும்; இதுவரையில் அவர் நடத்திய சகல தருமமும் தானமும் புண்ணிய கருமங்களும் பயனின்றிப் போகும். இந்தப் பெரும் பயத்தினால் நம் தந்தை

வேதனைப்படுகிறார். அவருடைய பயத்தைத் தீர்ப்பதல்லவோ நம்முடைய கடமை? என்னைப் பற்றி வருந்துகிறார். எனக்கு வருத்தம் கொஞ்சமும் இல்லை. உனக்கும் வருத்த மில்லை என்று அவருடைய சந்தேகத்தை முற்றிலும் போக்கி அவருக்கு நாம் வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நமக்கு உயிர் கொடுத்த தந்தையின் பயத்தைப் போக்கி அவர் மனம் நிம்மதி யடையச் செய்வது புத்திரர்களாகிய நம்முடைய கடமை. பரலோகத்தைப் பற்றி நம்முடைய தந்தை பயப்படுகிறார். அந்தப் பயத்தை நாம் போக்க வேண்டும். இதுவரையில் நாம் அவருக்கு எள்ளளவு துக்கமோ அதிருப்தியோ தந்ததில்லை. இப்போது நாம் அவர் பரலோகத்தைக் குறித்துப் பயப்படுவதற்குக் காரணமாகி விட்டோம். அதைச் சுலபமாக நாம் தீர்க்கலாம். அப்படிச் செய்யாமல் அவருடைய சங்கடத்தை அதிகப்படுத்தலாமா? இந்தக் காரணத்தினால், லக்ஷ்மணா, பட்டாபிஷேகத்தைப் பற்றி முற்றிலும் என் மனம் விலகி வனம் போவதிலேயே ஈடுபட்டு விட்டது. நான் காட்டுக்குப் போய்ப் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விப்பதே என்னுடைய ஆசையும் மகிழ்ச்சியுமாகி விட்டது. இதைத் தாமதப்படுத்தினால் கைகேயிக்குச் சந்தேகம் உண்டாகும். ஆனபடியால் இன்றே வனம் சென்று அவளுடைய மனம் நிம்மதி யடையச் செய்ய வேண்டும். சத்தியப் பிரதிக்ஞையைப் பற்றிய பயம் தீர்ந்து போய் நம் தந்தை சுகமாக இருப்பார். நான் துயரமடைவேன் என்றல்லவா அவர் வேதனைப்படுகிறார்? எனக்குக் கொஞ்சமும் துக்கமில்லை என்று அவருக்குத் தெளிவானால் அவருடைய வேதனை அவரை விட்டு விலகும். இதனாலே தான் நான் அவசரப்படுகிறேன். கைகேயியைப் பற்றி நாம் கோபித்துக் கொள்ளக் கூடாது. நம்மிடத்தில் அவள் இது வரையில் எவ்வளவு பிரீதி வைத்திருந்தாள்! திடீர் என்று இம்மாதிரியான எண்ணம் அவளுக்கு உண்டானது விதியின் காரியம். நாம் அவளை நிந்திக்கலாகாது. மக்கள் ஏதேதோ சங்கற்பம் செய்வார்கள். ஆனால் விதி வேறு விதமாகத் தீர்த்து விடுகிறது. இது கைகேயினுடைய காரியமே அல்ல. விதி அவளை ஓர் அறிவில்லாத கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறது. பழியைச் சுமக்கும் துக்கம் அவளுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அவளிடத்தில் நாம் வைத்து வந்த அன்பு அப்படியே இருக்க வேண்டும். வஞ்சக எண்ணம் அவள் உள்ளத்தில் முந்தியே இருந்திருந்தால் அவள் நடவடிக்கை வேறு விதமாக இருந்திருக்கும். திடீர் என்று இந்த விதம் நிர்த்தாட்சண்யமாக 'ராமனே நீ வனம் செல்' என்று அவள் தன் வாயாலேயே சொல்லுவதற்குக் காரணம் தெய்வச் செயலே; சந்தேகமில்லை. அவள் மேல் நாம் கோபம் கொள்ளலாகாது. அவள் எவ்வளவு மேன்மைக் குணம் பொருந்தியவள்! நம்மைப் பெற்ற தாயைப் போல் பார்த்து வந்தவள்! பண்பாடு அடைந்தவள். புருஷன் எதிரில் இம்மாதிரி கூச்சமின்றி ஏன் நடந்துகொண்டாள்? இதற்குத் தெய்வத்தின் செயலல்லாமல் வேறு காரணம் இருக்க முடியாது. விதியை யார்தான் எதிர்க்க முடியும்? மகா தீரர்களான ரிஷிகள் கூடத் தங்கள் தவத்திலிருந்து திடீரென்று வழுவிப் போயிருக்கிறார்கள். தெய்வத்தால் வந்ததை எதிர்க்கும் ஆற்றலைக் கைகேயி எப்படிப் பெறுவாள்? நம்முடைய மனோ தைரியத்தால் இந்த அனர்த்தத்தை நாம் சந்தோஷ நிகழ்ச்சியாகச் செய்து விடுவோம். அதுவே நம்முடைய வீரத்துக்கு அடையாளம். லக்ஷ்மணா! வனம் செல்வதற்குச் சங்கற்பம் முறைப்படி செய்து பெரியோர்களுடைய ஆசியைப் பெற்றுக் கொண்டு நான் உடனே போக வேண்டும்; தாமதம் கூடாது. அபிஷேகத்துக்கென்று கொண்டு வந்திருக்கும் கங்கை ஜலத்தைக் கொண்டு வா! அதையே வனவாச விரத சங்கற்பத்துக்கு உபயோகித்துக் கொள்ளுகிறேன். இல்லை! வேண்டாம்! அந்த ஜலம் பட்டாபிஷேகத்துக்கு உபயோகப்பட வேண்டிய ராஜாங்கப் பொருள். அதை நான் எப்படித் தொடலாம்? நாமே கங்கை சென்று ஜலம் கொண்டு வருவது நலம். தம்பி! விசனப்படாதே! ராஜ்யம் சம்பத்து இவற்றைப் பற்றிச் சிந்தனை செய்யாதே. வனவாசமே எனக்கு மேன்மையான பாக்கியம். நம்முடைய சிறிய அன்னை பேரில் கோபிக்க வேண்டாம். அபிஷேக காரியங்களைத் தடுத்தது அவளல்ல. தெய்வம் வகுத்ததை அவள் பேரில் போடலாகாது.'' இவ்வாறு ராமன் சாந்தமாகத் தம்பிக்குத் தன் அந்தராத்மாவின் கருத்தை விவரமாக எடுத்துச் சொன்னான்.

இந்த இடத்திலெல்லாம் வால்மீகி உபயோகித்திருக்கும் பதம் ''தைவம்''. சமஸ்கிருத இலக்கியங்களில் ''தைவம்'' என்றால் ''விதி'' என்று பொருள். தைவம், திஷ்டம், பாக்கியம், நியதி, விதி இந்தப் பதங்களெல்



ஹகோபா என்பது இந்தியாவிலேயே மிக அதிகமாக
எம்ப்ராய்டர்ட் துணிகள் தயாரித்து ஏற்றுமதி செய்யும் ஃபேன்ஸி கார்ப்பொரேஷன் லிமிடெட்
16, அப்போலோ ஸ்ட்ரீட், பம்பாய்-1. அவர்களின் எம்ப்ராய்டர்ட் துணிகளுக்கான
பதிவு செய்த வியாபாரச் சின்னமாகும்.

லாம் எதிர்பாராததும் காரணமறியாததுமான நிகழ்ச்சிக்கு ஒரு பொருள் கொண்ட பல மொழிகள். தன்னுடைய முயற்சியோ அல்லது பிறருடைய சூழ்ச்சியோ இல்லாமல் நிகழும் நிகழ்ச்சியை இந்தப் பெயர்களிட்டுச் சொல்வார்கள். ''எல்லாம் ஈசுவரனுடைய செயல்'' என்கிற கொள்கையினால் 'விதி'க்கும் ஈசுவர சங்கல்பத்துக்கும் குழப்பம் ஏற்படுவது இயற்கை. ஆனால் ராமன் இந்தச் சந்தர்ப்பத்தில் தம்பிக்குச் செய்த உபதேசத்தில் கைகேயினுடைய காரியத்தைத் தேவர்கள் தங்களுக்காகச் செய்த சூழ்ச்சி என்று அறிந்து சொல்லவில்லை. சாதாரண மக்கள் வாழ்க்கையில் 'விதியால் நடந்தது, வருத்தப்படாதே; யார் பேரிலும் குற்றம் சொல்வதற்கில்லை' என்று ஆறுதல் சொல்வது போல் சொன்னான். அவ்வளவே.

கம்ப ராமாயணத்திலும், 'யாவராலும் மூட்டாத காலக்கடைத் தீயென மூண்டெழுந்த' இளையோனைப் பார்த்து ராமன் சொல்லுகிறான்:

நதியின் பிழையன்று
நறும்புன லின்மை: அற்றே
பதியின் பிழையன்று:
பயந்து நமைப் புரந்தான்
மதியின் பிழையன்று:
மகன்பிழை யன்று: மைந்த!
விதியின் பிழை: நீஇதற்கு
என்னை வெகுண்டதென்றான்.

* * *

ராமன் சொன்ன சமாதானம் தம்பியின் கோபத்தைக் கொஞ்ச நேரம் அடக்கிற்று. ஆனால் மறுபடியும் மிக வேகத்துடன் கோபம் பொங்கி விட்டது. ''இது விதியின் வேலை. சிற்றன்னையின் மதி கெட்டதற்கு அது காரணமாயிருக்கலாம். ஒப்புக் கொள்ளுகிறேன். அவளை நான் கோபிக்கவில்லை. ஆனால், விதியினால் அனர்த்தம் நடந்து விட்டது என்று சும்மா இருந்துவிடலாகாது. அனர்த்தத்தைச் சீர்ப்படுத்தி நியாயத்தை ஸ்தாபிப்பது க்ஷத்திரியனுடைய தருமம். வீர புருஷன் விதிக்கு அடங்கிப் போவதா? ராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று நகரமும் நாடும் பறைசாற்றி விட்டு, எப்போதோ கொடுத்து மறந்து போன வரங்களை இப்போது கிளப்பி உன்னைக் காட்டுக்குப் போ என்று ஒரு வஞ்சகர் உத்தரவிட்டால் அதை விதி என்று எடுத்துக் கொண்டு அடங்கிப்போவது புருஷ லக்ஷணமல்ல. கீழான ஜனங்களே விதிக்குத் தலை வணங்குவார்கள். நம்மைப் போன்ற வீரர்கள் விதியை எதிர்த்து வெற்றி பெற வேண்டும். வீரியமில்லாதவர்களே விதிக்குத் தலை வணங்குவார்கள். நான் அப்படிச் செய்ய முடியாது. இன்று பார்ப்பீர்கள் விதியின் பலத்துக்கும் வீர புருஷனுடைய பலத்துக்குமுள்ள வித்தியாசத்தை. விதி என்கிற மத யானையை நான் அடக்கித் திருப்பிக் கொண்டு வரப் போகிறேன். உம்மை வனம் செல்லும்படி சூழ்ச்சி செய்தவர்களையே நான் காட்டுக்கு அனுப்பப் போகிறேன். உமக்கு வனம் போகும் ஆசை இருந்தால் அதைப் பிறகு நிறைவேற்றிக் கொள்ளலாம். அதற்குத் தகுந்த காலம் உண்டு. பல்லாண்டு ராஜ்யத்தை ஆண்டு நம்முடைய முன்னோர் செய்து காட்டியபடி ராஜ்யத்தைப் புத்திரர்களிடத்தில் ஒப்புவித்து விட்டு வனம் சென்று தவம் செய்யலாம். இப்போது உம்முடைய ஆட்சியை யாரேனும் எதிர்த்தால் அவர்களைத் தொலைத்துவிட நான் இருக்கிறேன். என் இரு புயங்களை அழகுக்காகவா பெற்றேன்! இந்த வில்லும் இந்தப் பாணங்களும் இடுப்பில் தொங்கும் இந்தக் கத்தியும் அலங்காரத்துக்கா? அல்லது இவை நாடகமேடை வேஷப் பொருள்களா? நான் உம்முடைய வேலைக்காரன். உத்தரவு தர வேண்டும். பிறகு பார்க்கவும், இந்த வேலைக்காரனுடைய வேலையை!''


இவ்வாறு மறுபடியும் கொழுந்து விட்டெரியும் தீப்போல் கிளம்பிய லக்ஷ்மணனுடைய ஆத்திரத்தை ராமன் மெதுவாகத் தணித்தான்.

''நம்முடைய பெற்றோர் உயிருடன் இருக்கும் வரையில் அவர்களுடைய சொற்படி நடப்பது நம்முடைய கடமை. பிதாவின் கட்டளையை மீறும் காரியம் என்னால் முடியாது. அவர் சொன்ன சொல்லை நிறைவேற்றித் தந்து அவரைச் சத்தியப் பிரதிக்ஞராக்குவது நமது முதல் கடமை. பெற்ற தாய் தந்தையரை அவமதித்து, தருமமே உருவமான பரதனையும் கொன்று விட்டா ராஜ்யத்தைச் சம்பாதிப்பது? அப்படிச் செய்து விட்டாலும் அதனால் ஏதேனும் சந்தோஷம் அடைய முடியுமா? நான் சொல்லுவதைக் கேள்'' என்று சொல்லி லக்ஷ்மணனுடைய கண்ணில் பெருகிய கண்ணீரைக் கையால் துடைத்துச் சமாதானப் படுத்தினான்.

ராமபிரான் தன் கையால் கண்ணீரைத் துடைத்த பிறகும் கோபம் நிற்குமா? லக்ஷ்மணன் சாந்தமானான்.

(தொடரும்)

மூன்று காட்சிகள்



முதல் காட்சி:


அன்று அத்தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்த போது, மனத்துக்கு வேதனை தரும் ஒரு காட்சியைப் பார்த்தேன். சாரி சாரியாகக் குஷ்டரோகிகள் தெருவின் ஓர் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தனர். முடிவில்லாத ஒரு வரிசையாகத் தோன்றியது. இவர்கள் எல்லாரும் எங்கே போகிருர்கள் என்று விசாரித்தேன். அந்தத் தெருவில் ஜைன மதத்தைச் சேர்ந்த ஒரு பெரும் பணக்காரர் இருக்கிருர். அவர் வாரத்தில் ஒரு நாள் குஷ்டரோகிகளுக்குத் தர்மம் செய்வது என்று வைத்துக் கொண்டிருக்கிருர். அந்தத் தர்மத்தைப் பெறத்தான் இப்படி வாரந்தோறும் இவர்கள் போகிருர்கள் என்று தெரிய வந்தது.

அந்தக் கொடை வள்ளலுக்கு, குஷ்டரோகிகளின்பால் இரக்கம் இருப்பின், அத்தனை குஷ்டரோகிகளையும் தம் வீடு நோக்கி வரச் செய்து, அச்சாலையின் பொது சுகாதாரத்தையே பாதிக்கும்படி செய்வானேன்? குஷ்ட நிவாரண சங்கம் என்று குஷ்ட நோயாளிகளுக்கு மருந்து முதலியன கொடுத்து உதவச் சங்கம் இருக்கிறதே. அது போன்ற சங்கங்கள் மூலமாக உதவி செய்தால் என்ன?



இரண்டாவது காட்சி:

அமெரிக்க டாக்டர் ஒருவரிடம் ஓர் ஏழை வைத்தியத்துக்குச் சென்ருர். "ஐயா ; என்னிடம் பணம் இல்லை. தாங்கள் எனக்கு இலவசமாக வைத்தியம் செய்யும்படி கோருகிறேன்" என்ருர்.



அதற்கு அந்த டாக்டர், "ஐயா! என் வைத்தியத் தொழிலை யாருக்கும் இலவசமாகச் செய்வதில்லை. இங்கிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு தர்ம ஸ்தாபனம் இருக்கிறது. அவர்களிடம் உங்கள் நிலையைத் தெரிவியுங்கள். அவர்கள் ஒரு கடிதம் தருவார்கள். அதை எடுத்து வாருங்கள். நான் வைத்தியம் செய்கிறேன்" என்ருர்.

அதேபோல் நோயாளி அந்த ஸ்தாபனத்துக்குச் சென்ருர். அங்கிருந்தவர்கள் இவர் உண்மையிலேயே பணம் இல்லாதவர் என்பதைப் பல கேள்விகள் கேட்டு உறுதி செய்து கொண்டார்கள். பின்னர், ஒரு கடிதம் கொடுத்தார்கள். அதை எடுத்துப் போய் டாக்டரிடம் கொடுத்தார். டாக்டர் மகிழ்ச்சியுடன் வைத்தியம் செய்து நோயாளியை அனுப்பி வைத்தார். பின்னர், தாம்

1. சிவ-விஷ்ணு ஆலயத்திலசாம்பார் சாதம் செய்யும் இடம். சாதம் கோரி விடப்படுகிறது. விநியோகத்துக்கு முன்.
2. சாதத்துக்கு டிக்கெட் கொடுக்கப்படுகிறது.
3. சிவ - விஷ்ணு ஆலயம் முகப்பு.

வைத்தியம் செய்ததற்குரிய ஊதியத்துக்கு அந்தத் தர்ம ஸ்தாபனத்துக்கு ஒரு 'பில்' அனுப்பி வைத்தார்.

தனி நபர் மற்றொரு தனி நபரிடம் பகிரங்கமாக உதவி கோருவதோ பெறுவதோ இழிவாகக் கருதப்படுகிறது மேல்நாடுகளில். ஆயினும், மக்களுக்குப் பல உதவிகள் தேவைப்படுகின்றன என்பதை அவர்கள் உணர்ந்து அவற்றை ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்கிறார்கள்.

மூன்றாவது காட்சி :

காஞ்சி காமகோடி பெரியவர்கள் கூறிய திட்டம் மாம்பலம் சிவ-விஷ்ணு ஆலயத்தில் சிறப்பாக நடப்பதைக் காண்கிறோம்.

தினம் ஒரு பிடி அரிசியைக் கோவிலுக்குப் போகும்போது அங்கு செலுத்திவிட வேண்டியது. தினம் கோவிலுக்குப் போக முடியவில்லை எனில் வீட்டிலேயே தினம் பிடி அரிசி எடுத்துப் போட்டுச் சேமித்து வர வேண்டியது. வாரத்துக்கு ஒரு முறை கோவிலுக்குப் போகும் போது அதனை அங்கு செலுத்திவிட வேண்டியது. இப்படிச் சேமிக்கப்பட்ட அரிசியை சிவ விஷ்ணு ஆலயத்தில் சமைத்து, ஆண்டவனுக்கு நிவேதனம் செய்து விட்டுச் சாம்பார் சாதம் பொட்டலங்களாகக் கட்டி, ஏழை எளிய மக்களுக்குப் பத்து பைசாவுக்கு விற்கிறார்கள்.

கோவிலுக்கு வருவது அரிசி மட்டும்தான். சாம்பாருக்குப் பருப்பு, புளி, உப்பு, காய்கறிகள் விறகு எல்லாம் தேவைப்படுகின்றன. சமைக்கும் பரிசாரகர்களுக்கும் சிறிது ஊதியம் வேண்டுமல்லவா ? இவையெல்லாம் பத்து பைசாவுக்கு விற்பதில் கிடைத்து விடுகிறது. ஒரு பெரிய ஆள், வயிறு நிறையக்கூடிய சோறு பத்து பைசாவுக்குக் கிடைக்கிறது. ஒரு சிறு முயற்சி செய்து தினம் பத்து பைசாவாவது சம்பாதித்தால்தான் இந்தத் தெய்வப் பிரசாதம் கிடைக்கும் என்றிருக்கிறது.

ஏராளமான பிச்சைக்காரர்கள் தெருத் தெருவாகப் போய்ப் பிச்சை கேட்கும் வழக்கம் நம் நாட்டில் குறைய வேண்டும். தர்ம ஸ்தாபனங்கள் மூலம் ஏழைகளுக்கு உதவி அளிக்கும் மனப்பான்மை வளர வேண்டும். ஒரு சிறிதாவது நாள்தோறும் உழைத்தால்தான் வயிறு நிறையும் என்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட வேண்டும்.

— எஸ். வி. எஸ்.



முதல் சந்திப்பு

5. குறை தீர்க்கும் கடமை

ஒரு சிறுமியிடமிருந்து காந்திஜி வளையலைக் கேட்டு வாங்கியதைக் கவனித்தாள் பதினைந்து வயதுள்ள பெண். உடனே உள்ளே ஓடிச் சென்று, தன் சங்கிலி, மாலை அட்டிகை எல்லாவற்றையும் கழற்றி வைத்து விட்டு வந்தாள். அவைகளைக் காந்திஜி கேட்டு வாங்கிக் கொண்டுவிடப் போகிறாரே என்று பயம். இந்தப் பெண் பின்னர் தன் செய்கைக்காக வருத்தப்பட்டாள், வெட்கப்பட்டாள். இவர்தான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரின் மகள் ஸ்ரீமதி அம்புஜம்மாள்.

காந்தியடிகள் இவர் வீட்டில் தங்கியிருந்த பொழுது மிஸ் மேயோ என்கிற அமெரிக்க சீமாட்டி எழுதிய ''இந்திய மாதா'' (Mother India) என்கிற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார்.

''இந்தப் புத்தகத்தைப் படிக்கிறீர்களே, எப்படி இருக்கிறது?'' என்று அம்புஜம் கேட்டார்.

''இன்றிரவுக்குள் படித்து முடித்துவிட்டு நீயே என்னிடம் வந்து சொல்.''

அப்புத்தகத்தைப் படித்துவிட்டு காந்திஜியிடம் சென்றார் அம்புஜம்.

''பெரும்பாலும் அபத்தக் களஞ்சியம். என்றாலும் சில உண்மைகள் இருக்கின்றன. இந்தியப் பெண்களில் படித்தவர் சிலரே. அதுவும் தேச சேவையிலோ சமூக சேவையிலோ ஊக்கம் உள்ளவர் மிகச் சொற்பம்'' என்றார் அம்புஜம்.

''அப்படியானால் அந்தக் குறையைத் தீர்ப்பது உன்னைப் போன்ற படித்த பெண்களின் கடமை அல்லவா ? உன் சகோதரிகள் அறியாமையில் ஆழ்ந்து கிடப்பதை நீ சும்மா பார்த்துக் கொண்டிருக்கலாமா ?'' என்றார் காந்திஜி.

முதல் சந்திப்பிலேயே அம்புஜம்மாள் காந்தியடிகளின் அபிமானத்தைப் பெற்ற சமூக சேவகியாகி விட்டார். — ரஜன்




அம்புலிக்கு அப்பால்....
கதை: புஷ்பா
19
படம்: விஜயா
நாங்கள் வழி தப்பி வந்தவர்கள்....


தொடரும்…



நலந்தானா?

'கண்ணன் வந்தான்' நாடகத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய அந்தக் குழு நலமாகவே இருக்கிறது என்பதை அண்மையில் அரங்கேறிய நலந்தானா நிரூபிக்கிறது.

ஒரு முஸ்லிம், ஒரு நசிந்து, ஒரு கிறிஸ்துவன் ஆகியவர்கள் நண்பர்களாக விளங்குகிறார்கள். இந்த மத வேறுபாடுகள் காரணமாக உணர்ச்சிப் போராட்டங்கள் ஏதேனும் நிகழப்போகிறதோ என்று எதிர்பார்ப்பவர்கள் ஏமாற்றமே அடைகிறார்கள் என்றாலும் கதையில் புதுமையான திருப்பங்கள் இருப்பது திருப்தி அளிக்கவே செய்கிறது.

ஓர் இளம் பெண்ணைப் பூவும் பொட்டுமாக இறக்க விடாமல் விதி சதி செய்யும் போது அவளிடம் 'உள்ள தெய்வீகம் விதியையே வெற்றி கொள்வதை அழகாகச் சித்திரிக்கிறது கதை. சிறு கதை அமைப்பில் சிறந்து விளங்கக் கூடிய கதை. ஆனால் நாடகத்தில் பார்க்கும்போது, கணவன் இறந்ததை மனைவியிடம் மற்றவர்கள் மறைப்பதை அறிவு நம்பினாலும் மனம் ஏற்கத் தயங்குகிறது. எனினும் இதுவே வியட்நாம் வீடு சுந்தரம் சில அருமையான வசனங்களைத் தீட்ட இடம் தருகிறது. மயிலாப்பூர் கிளைபன் ஆர்ட்ஸில் நாடகம் அரங்கேறிய போது அவுட்டுச் சிரிப்புக்களுடன் அடிக்கடி வசனத்தை ரசித்துப் பார்வையாளர்கள் கூன் கொட்டியதும் கேட்டது.

ஒய். ஜி. பி.க்கு அதிக வேலை இல்லை. மற்றவர்களை முன்னுக்குத் தள்ளி விடுகிறார். குறைந்த நேரமே தோன்றினாலும் அவர் நடிப்பில் நிறைவு இருந்தது.

ஏ. ஆர். எஸ். டைரக்ஷனுக்குத் துணை புரிந்திருக்கிறார். ஆனால் அவர் நடிப்பு அவருக்குத் துணை நிற்கவில்லை. கண்ணன் வந்தானில் நாம் கண்ட அதே ஜூனியர் வக்கீல் தான். வேஷம் மாறினால் போதாது; பாவம் மாற வேண்டுமே!

நடிப்பிலும் நகைச்சுவையிலும் பாராட்டுக்களை அள்ளிக் கொண்டு போகிறவர்கள் 'கண்டு மகேந்திரா'வும் அவன் அப்பாவாக நடித்த சேதுராமனும்தான். கதாநாயகியாக நடிக்கும் புஷ்பா பழுது சொல்ல இடமில்லாமல் சமாளிக்கிறார். ஆனால் சந்திரமௌளி எதிர் பார்த்த அளவு சோபிக்கவில்லை.

சபாபதி நாள் முதல் இந்த நாள் வரை பத்திரிகைகளிலும் பேச்சு வாக்கிலும் அடிபட்டுப் புளித்துப் போன ஹாஸ்ய வெடிகளை மட்டும் நுழைக்காமல் இருந்திருந்தால் நலந்தானா மேலும் சோபித்திருக்கும். 'ஒரிஜினல்' ஹாஸ்யமே மூலதனமாக நாடகத்தில்



நிறைய இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை. வெள்ளைப் புடவை கூட கதை கூட கல்கியில் முன்பு மொழி பெயர்க்கப்பட்டு வந்த ஹிந்திக் கதைதான்.

அரங்க அமைப்பு, நிர்வாகம் எல்லாம் பாராட்டும்படியாக இருக்கின்றன. தொழில் நடிகர்கள் அல்ல என்பதை மறக்காமல் பார்த்தால் நலந்தானாவின் மதிப்பு நம் எண்ணத்தில் மலை போல் உயரும்.

குடந்தையில் குமரன் கோயில்

கும்பகோணமாகிற குடந்தையில் ஸ்ரீ பழனியாண்டவருக்கு ஓர் ஆலயம் உள்ளது. குடந்தைக் கீழ்க் கோட்டத்தில் மேற்குப் பார்த்து எழுந்தருளியுள்ள இம் முருகன் வரப்பிரசாதி எனப் புகழ் கொண்டவன். இப்பெருமானின் ஆலயத்துக்கும், இவனது பரிவாரமாம் ஸ்ரீ செல்லப்ப விநாயகருக்கும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரருக்கும் திருப்பணி செய்ய ஸ்ரீ கருப்பையா மூப்பனார் முதலிய பெருமக்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. புண்ணிய கைங்கரியம் பூர்த்திபெற ஆஸ்திகர் உதவ வேணும். நிதி அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ வி. முத்துகிருஷ்ண பத்தர், பொக்கிஷதார், பழனி ஆண்டவர் ஆலய ஜீர்ணோத்தாரணக் குழு, குடந்தை கீழ்க் கோட்டம், கும்பகோணம்.



அத்தியாயம் 3

சனிக்கிழமைக் காலை ரமணியின் வீட்டுக்குச் சாமான்களை எடுத்துக் கொண்டு வந்து விட்டான் சங்கரன். ரமணி வீட்டில் இல்லை. ஆக்ராவுக்குப் போயிருந்தான்.

அவன் ஒழுங்காகச் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கும் போது கோபு வந்தான்.

''சாமான் இவ்வளவுதானா, மாமா?''

''ஒண்டிக் கட்டைக்கு எவ்வளவு சாமான் வேணும்?'' என்றான் சங்கரன்.

''ஒண்டிக்கட்டை எப்பொழுதுமே ஒண்டியா இருக்கணும்னு அவசியமில்லையே...'' சங்கரன் திரும்பிப் பார்த்தான். கோபுவின் அம்மா கதவருகே நின்று கொண்டிருந்தாள்.

''நமஸ்காரம்... ஆக்ரா போயிருக்கிறாரா அவர்?''

''ஆமாம்... ஏதாவது வேணுமா?''

''ஒன்றும் வேண்டாம்... அநுதாபம் கூட...'' அவன் சிரித்துக் கொண்டே தன் காலைக் காட்டினான். அவள் பார்க்கில் சந்தித்துக் கூறியதை அவன் மறக்கவில்லை என்பதை நினைவுறுத்த விரும்பினான்.

''ஏன் இப்படிக் குரூரமாப் பேசணும்?''

தான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என்று பட்டது சங்கரனுக்கு. கோபுவின் அம்மாவின் குரலில் தொனித்த அருவருப்பு அவனை வெட்கமுறச் செய்தது.

அவள் உள்ளே போய்விட்டாள்.

சங்கரன் கோபுவைப் பார்த்தான்.



"இந்த மாதிரியெல்லாம் பேசினால் அம்மாவுக்குப் பிடிக்காது" என்றான்.

"எந்த மாதிரி?"

"உங்களுக்குக் கால் நொண்டிங்கிறதைச் சொல்லியா காட்டணும்?"

"நான் சொல்லிக் காட்டலியே.... எனக்கும் அநுதாபம் வேண்டாம்னேன், அவ்வளவுதான்."

சங்கரன் கட்டிலில் உட்கார்ந்தான். சுவரில் ஒரு குட்டிப் பல்லி நடை பயின்று கொண்டிருந்தது.

கோபு, சங்கரன் மூட்டையாகக் கட்டி வைத்திருந்த புஸ்தகக் கட்டை அவிழ்த்தான்.

"அம்மாவுக்குப் புஸ்தகம்னா உயிரு" என்றான் கோபு.

இந்திரா பார்த்தசாரதி

''அப்படியா?''

அப்பொழுது கோபுவின் அம்மா சங்கரனிடம் காப்பித் தம்ளரை நீட்டினாள்.

''காப்பியா, எதுக்கு?'' என்றான் சங்கரன்.

''இதெல்லாம் சின்ன விஷயம்....'' என்றாள் அவள். சங்கரனுக்கு என்னவோ போலிருந்தது. தம்ளரைப் பேசாமல் வாங்கிக் கொண்டான்.

''எவ்வளவு புஸ்தகம் பாரும்மா...!'' என்றான் கோபு.

அவள் கோபு பிரித்துப் போட்ட புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள்.

''உங்களுக்குப் புஸ்தகம்னா உயிருன்னான், கோபு...''

''ஆ...மா...ம்... ஏதோ கொஞ்சம் படிப்பேன்....''

அவள் ஆல்பர்ட் காமூவின் 'அவுட்சைட'ரைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''காமூவைப் பிடிக்குமா உங்களுக்கு?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் சங்கரன்.

'' கேள்விப் பட்டிருக்கேன்..... எங்கப்பா புரொஃபஸரா இருந்தார். நான் வெறும் கட்டுத்தறி...''

அவள் 'அவுட் சைடரை'க் கீழே வைத்து விட்டுத் தாமஸ் மானின் ' தி மாஜிக் மௌன்டினை' எடுத்தாள்.

''எந்த ஊரிலே ப்ரொஃபஸர்?''

''இருந்தார்... மெட்ராஸ்லே. அவர் போய் நாலு வருஷமாறது. அவரோட பர்ஸனல் லைப்ரரி மெட்ராஸிலே பிரசித்தம்.... அவர் போனப்புறம்....'' அவள் வாக்கியத்தை முடிக்கவில்லை.

''போனப்புறம்?'' என்றான் சங்கரன்.

''நான் ஒரு பொண்ணு அவருக்கு... கோபுவோட அப்பா புஸ்தகங்களை நல்ல லாபத்துக்கு வித்துட்டார்...''

''மிஸ்டர் ரமணிக்குப் புஸ்தகங்கள்லே அவ்வளவு இன்டெரஸ்ட் கிடையாது போலிருக்கு...''

அவள் பதில் கூறவில்லை.

''மிஸ்டர் ரமணி எப்போ வருவார்?'' என்று கேட்டான் சங்கரன்.

'' தெரியாது. சொல்லி விட்டுப் போகும் வழக்கம் கிடையாது.''

''ஆக்ராவுக்குப் போயிருக்கார்னு ராத்திரி வந்துடுவார் இல்லியா?''

''வரட்டும், வராமலே போகட்டும், ஐ டோன்ட் கேர்'' என்றான் கோபு.

சங்கரன் கோபுவின் அம்மாவைப் பார்த்தான். அவள் அவனைக் கண்டிக்காமல் இருந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கோபு தன் சட்டையைத் தூக்கிக் காண்பித்தான்.

''இங்கே பார்த்தேளா?''

வலை பின்னினாற் போன்ற எலும்புக் கூடு. சதையை மேலே பூசி அசிரத்தையாக மெழுகி விட்டாற் போல் இருந்தது.

''பார்த்தேளா, இங்கே?''

''இதுக்கு என்ன இப்போ...?''

''நேத்து ராத்திரி எங்கப்பா என்னை இங்கேதான் உதைச்சார்...'' அவன் தன் மார்பைச் சுட்டிக் காட்டினான்.

சங்கரனுக்கு வயிற்றை என்னவோ செய்தது.

''ஏன் தெரியுமா?'' என்று கேட்டான் கோபு. கோபுவின் அம்மா அப்பொழுது எழுந்து உள்ளே போனாள்.

''நீ இப்படிச் சொல்லறது உங்கம்மாவுக்குப் பிடிக்கல்லேன்னு நினைக்கிறேன்...''

சங்கரன் சொன்னதைக் கோபு கவனித்ததாகத் தெரியவில்லை.

''ஏன் தெரியுமா?... நேத்துக் காலையிலே நீங்க இருந்தபோது வந்தானே ஒரு 'டான்ஸ் மாஸ்டர்...' அவன் ராத்திரியும் வந்தான். அவன் தன்னுக் குடிச்சுட்டுக் கஜல் பாடறேன்னு, வாள் வாள்னு ராத்திரி பூரா கத்த ஆரம்பிச்சுட்டான். நான் போய் விளக்கை அணைச்சேன். எங்கப்பாவுக்கும் நல்ல போதை.... என்னை இப்படி அடிச்சார். தடுக்க வந்த அம்மாவுக்கும் அடி...''

கோபுவின் குரல் உயர்ந்து கொண்டே வந்தது. கண்களில் ராட்சஸ வெறி. அவனைப் பார்ப்பதற்குப் பையனாக இல்லை. இருபது வயது கூடிவிட்டாற் போலிருந்தது.

''அம்மாவையும் அடிச்சார், அம்மாவையும் அடிச்சான்...'' மரியாதை குறைந்து கொண்டே வந்தது.

''கோபு...'' என்று உள்ளிருந்து குரல் வந்தது. அம்மாவின் குரலைக் கேட்டதும் அவன் அடங்கி விட்டான். ஆத்திரம் அழுகையாக மாறிவிட்டது.

அவன் எழுந்து உள்ளே போனான்.

சங்கரனுக்குச் சங்கடமாக இருந்தது. ரமணி, வீட்டில் இப்படியொரு விகலரூபமான வெறுப்பை வளர்த்து வருகிறானே!....

கோபுவின் அம்மாவும் தன் கணவனை வெறுக்கிறாளோ? சந்தேகமேயில்லை... கோபு முதல் நாளே தன்னிடம் இப்படிப் பேசும் போது அவள் அவனைத் தடுக்கவில்லை. அவள் தன் கணவனை வெறுப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. அவள் வளர்ந்த ஒரு சூழ்நிலையை, இறந்த காலமென்ற

ஓர் இனிய கனவை விலை பேசி விற்று விட்டான் ரமணி, அந்தப் புஸ்தகங்களை விற்றதன் மூலம்... இதனால் ஏற்பட்ட கோபமா?... இப்படி ஒரு பிள்ளை பிறப்பதற்கு அவன்தான் காரணம் என்ற ஆத்திரமா?... ரஸனை முரண்பாடா?... ''பூவை மோந்துகூடப் பார்க்க மாட்டாள் என் அம்மா, வாடி விடுமோவென்று...'' என்று இவளைப் பற்றிக் கோபு சொன்னான். வாஸ்தவந்தான். ஆனால் இவளுடன் எலும்புக் கூட்டைக் காலால் உதைக்கும் ரமணி போன்ற அநாகரிகத்தை எப்படிச் சம்பந்தப்படுத்திப் பார்க்க முடியும்?...

ரமணிக்கும் அவன் மனைவி மீது வெறுப்பு இருக்கத்தான் வேண்டும். வெளியே பல வேஷங்கள் போட்டாலும், வீட்டில் அவன் சுயரூபம் அவன் மனைவிக்குத் தெரிகிறது. தன் மீதுள்ள வெறுப்புத்தான் மனைவி மீது, அவளுடைய எல்லையற்ற பரிவுக்கு உரிமை பூண்ட மகன் மீது, திரும்பியிருக்க வேண்டும்.... அவள் கணவனை வெறுக்கும் அளவுக்கு மகனை விரும்புகின்றாள். மகன் தந்தையை வெறுக்கும் அளவுக்குத் தாயை விரும்புகிறான்...

சங்கரன் சாமான்களை ஒழுங்காக எடுத்து வைத்த பிறகு அறையைப் பூட்டிக் கொண்டு சாப்பிடச் சென்றான். சாப்பிட்டு விட்டுத் திரும்பும்போது சுந்தரத்தைக் கண்டான்.

''ஸோ.... ரமணி வீட்டுக்குப் போயாச்சாக்கும்!''

சங்கரன் தலையை யசைத்தான்.

''ஜாக்கிரதை... போலீஸ்லே மாட்டிக்காதே...''

''போலீஸா? எதுக்கு?''

''தெரியாதா ரமணியைப் பத்தி 'லேடஸ்ட்'? யுனெஸ்கோவிலே அவன் சிநேகிதன் யாரோ இருக்கான். அவனைப் பிடிச்சு யுனெஸ்கோ 'லெட்டர் ஹெட்'லே, ராஜஸ்தான் சர்க்காருக்குக் கடிதாக எழுதியிருக்கான், சரித்திர காலக் கட்டடங்களை 'ரிப்பேர்' செய்ய ஒரு புதுத் திட்டம் இருக்குன்னு. அவ்வளவுதான். அந்த மடையங்க அவனை ஜெய்ப்பூருக்குக் கூட்டிண்டு போய் ஒரு வி. ஐ. பி. மரியாதை கொடுத்து, ஊர் ஊரா அழைச்சுண்டு போய்க் காண்பிச்சிருக்காங்க.... இப்போ அவன் ஃப்ராட் வெளியாயிடுத்து...''

சங்கரன் கேட்டான்: ''இதிலே அவனுக்கு என்ன லாபம்?''

''லாபம் ஒண்ணுமில்லே... ஆனால் தான் ஒரு பெரிய மனுஷன்னு காட்டிக்க ஓர் ஆசை...''



''அது சரி! உன் மனைவி எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கினதுக்கும், நீ இடுப்பில் நியூஸ் பேப்பரைச் சுற்றிக் கொண்டிருப்பதற்கும் என்ன சம்பந்தம்?''

தன் மனைவியோடு தன்னை வைத்து எண்ணும்போது தான் மிகவும் சாதாரணமானவன் என்று உணர்ந்ததனால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையோ?... அல்லது, ஒரு 'பர்வர்ஷனாக'வும் இருக்கலாம்....

''என்ன நினைக்கிறே நீ?'' என்று கேட்டான் சுந்தரம், அவன் யோசிப்பதைப் பார்த்ததும்.

''ஒருவேளை, பர்வர்ட்டோ?...''

''ஏமாத்தறது 'ஃப்ராட்' இல்லையா?''

''இப்போ யார்தான் யாரை ஏமாத்தலே? தைரியம் வேணும். அவ்வளவுதான்.''

''நீ ஒரு 'ஸினிக்'... அவன் ஒரு 'ஸினிக்' இரண்டு பேருக்கும் பொருத்தம்தான்...''

'ஸினிக்'... சுந்தரம் சொல்லுவது ஒருவேளை பொருத்தமாக இருக்கலாம்... ரமணி 'ஸினிக்' தானோ?... உலகில் நல்லது எதையும் காணாதவன் 'ஸினிக்'. உலகை விடத் தாம் உயர்ந்தவர்கள் என்று நினைப்பவர்கள் இறுதியில் 'ஸினிக்' ஆக மாறிவிடுவது இயல்பு. ஆனால் ரமணி அவ்வாறு நினைப்பதற்குக் காரணமே இல்லையே... அல்லது உலகம் தன்னை விட உயர்ந்தது என்று உணர்ந்ததனால் ஏற்படும் ஏமாற்றத்தினாலும் 'ஸினிக்' ஆக மாறி விடுவதும் உண்டோ? தன் மனைவியிடம் அவனால் 'ஹீரோ'வாகக் காட்டிக் கொள்ள முடியவில்லை!....

''அந்தப் பையன் இருக்கானே, ரமணியோட பிள்ளை, அவன் ஒரு 'பர்வர்ட்' தெரியுமா?'' என்றான் சுந்தரம்.

''அப்படியா? ரமணி, அவனுடைய குடும்பத்தைப் பத்தித் தகவல்கள் எல்லாம் உனக்கு அத்துப்படி போயிருக்கே!...''

''என் மாமா பிள்ளை அவனோட பள்ளிக்கூடத்திலே படிச்சானும். இந்தப் பையனுக்குப் படிப்பு ஏறல்லே... ஒரு சமயம் பள்ளிக்கூடத்திலே வாத்தியார் ஒரு கட்டுரை எழுதச் சொன்னாராம் வகுப்பிலே. இவன் ஒரு கதை எழுதினானும்...''

''கதை எழுதறவனெல்லாம் 'பர்வர்ட்'ங்கிறது உன் அபிப்பிராயமா?''

''நோ, நோ... இவன் எழுதின கதை என்னன்னு சொல்றதுக்குள்ளே... ஒரு 'இம்பொடன்ட்' பசு மாட்டோட உணர்ச்சிகளைச் சித்திரிச்சு ஒரு கதை எழுதினானும். கதையை எழுதிண்டே இருந்தானும். பக்கத்துப் பையன் பார்த்துட்டுச் சிரிச்சானும். வாத்தியார் பேப்பரைப் பிடுங்கிப் பார்த்துட்டுப் பையனுக்கு 'மொராலிட்டி' கிடையாதுன்னு ஹெட்மாஸ்டர்கிட்டே புகார் பண்ணினாராம்.''

சங்கரனுக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியைத் தந்தது. கோபு கதை எழுதுகிறானா?... அதுவும் 'இம்பொடன்ட் பசு மாடு...' இது அவனைச் சிந்திக்க வைத்தது.

''பையன் 'பர்வர்ட்'ங்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த வாத்தியார்களுக்கு ஏன் கற்பனையே இல்லே? பையனுக்கு 'மொராலிட்டி' கிடையாதுன்னு புகார் பண்ணினாராம். பார்த்தியா?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் சுந்தரம்.

''பொதுப்படையா பேசாதே! இந்தக் குறிப்பிட்ட வாத்தியார் அப்பாவின்னு சொல்லு. ஆனால் இது இப்போ பிரச்னை இல்லே. இந்தப் பையன் 'இம்பொடன்ட்' பசு மாட்டைப் பத்தி எழுதக் காரணம்? அதைப்பத்தித்தான் யோசிக்கிறேன்.''

''...ஃப்ராய்ட் சொல்றான்...''என்று ஆரம்பித்த சுந்தரத்தை இடைமறித்தான் சங்கரன். ''ஃப்ராய்ட், யங், ஆல்டர்னு பேரெல்லாம் கொண்டு வராதே, தயவு செய்து. இந்த 'ஆர்ம்-சேர் சைகாலஜிஸ்ட்'களைக் கண்டாலே பயமா இருக்கு...''

''போடா, 'சினிக்' '' என்றான் சுந்தரம் கோபத்துடன். தன் உற்சாகத்தைச் சங்கரன் தடை செய்து விட்டானே என்ற ஆத்திரம் அவனுக்கு.

சுந்தரம் கோபமாக இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டான் சங்கரன்.

''சரி, ரூமுக்கு வரயா?'' என்று அவன் கேட்டான்.

''நான் வரல்லே... நீ வேணும்னு என் ரூமுக்கு வா..'' என்றான் சுந்தரம்.

''புதுசா ஏதாவது புத்தகம் வாங்கியிருக்கியா?''

''வாங்கியிருக்கிறேன்... எலியா காஸான் புஸ்தகம், 'தி அரேன்ஜ்மெண்ட்' ''

''ஓ... அந்தப் புஸ்தகத்தைப் பத்திக் கேள்விப்பட்டேனே... பேமஸ் டைரக்டர் இல்லே, எலியா காஸான்?''

''எக்ஸாட்லி. ரொம்பத் துணிச்சலான புஸ்தகம். நாம் எல்லோரும் ஒவ்வொரு விதத்திலே வேஷம் போடறோம்... சும்மா வெங்காயத்தை உரிக்கிற மாதிரி, எல்லார் வேஷத்தையும் கலைக்கிறான்... 'இன்ஹிபிஷன்' இல்லாத அமெரிக்க சமூகத்தையே இவ்வளவு வேஷமான்னு நாம் நினைக்க வேண்டியிருக்கு... நம்ப சமூகத்தைப் பத்திக் கேட்கவே வேண்டாம்... ஆனால் தைரியமா இதைப் பத்தி எவன் எழுதுவான்...?''

''இம்பொடன்ட் பசு மாடுன்னுலே 'இம்மொராலிட்டி'ன்னு சொல்ரு...''

சுந்தரம் சிரித்தான். ''மாடுகளைப் பத்திப் பேசறபோதுகூட, 'மாரல், இம்மாரல்'ங்கிற நினைவெல்லாமா வரணும்? ஸயன்ஸ் சொல்லிக் கொடுக்கிறபோது மூஞ்சி சிவக்காமெ எப்படிச் சொல்லித் தராரோ இந்தவாத்தியார்!''

''சரி, என் காலே வலிக்கிறது. நான் வரேன். நாளைக்கும் நீ சைக்கிளிலே போகலேன்னு, 'பஸ் ஸ்டாண்டுக்கு'ப் புஸ்தகத்தைக் கொண்டா...''

''நோ...நோ... என் ரூமுக்கு வந்து வாங்கிண்டுபோ. ஆல்ரைட். பை பை!''

அன்றிரவு ரமணி ஆக்ராவிலிருந்து திரும்பி வந்ததும், சங்கரன் அறைக்கு வந்தான்.

கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்த சங்கரன் எழுந்தான்.

''ப்ளீஸ்... எழுந்திருக்க வேணும்...''

''தாங்க்யூ...'' சங்கரன் மறுபடியும் கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

ரமணி, சங்கரன் அடுக்கி வைத்திருந்த புஸ்தகங்களைப் பார்த்தான்.


'' எனக்கும் படிக்கணும்னுதான் ஆசை.... டயமே இல்லே...'' அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

சங்கரன் ஒன்றும் பேசவில்லை.

ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துப் புரட்டிக் கொண்டே ரமணி சொன்னான்: ''ஆக்ராவுக்குப் போயிருந்தேன்....''

''ஐ ஸீ...'' என்று இழுத்தான் சங்கரன். ரமணி, ''அன்னிக்கு வந்திருந்

உங்களுக்கே... பருவ மங்கையின் பைந்தளிர் மேனியெழில்.



இளமை கொஞ்சிப் புதுமெருகு மிளிரும் எழிலுக்கே... ஜெய் அழகு சோப்! சரும நெகிழ்ச்சிக்கான எண்ணெய்கள் கொழித்திட, ஆழ ஊடுருவிச் சுத்தமிடும் அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. வில்லை உள்ளளவும் எல்லை மீறிய செழிப்புடன் கமழும் அதன் மல்லிகை மணம் உங்களைக் கொள்ளைகொள்ளும். மறவாதீர்கள், நவீனமான உலோக ஜிகினாத் தாளுறை தரித்தது ஜெய் ஒன்றுதான்.

ஜெய்–நீங்கள் நினைப்பதை விடக் குறைவான விலை உள்ள அதி விசேஷ அழகுசாதன சோப்!

உங்கள் எழில் பெருக

ஜெய்
அழகு சோப்

உங்கள் மனங்கவர் மணங்கமழ்வது.



டாடா
தயாரிப்பு

Bensons/3170 TM

தான் இல்லே, சம்புராம் மகராஜ்... அவ னோட போயிருந்தேன்'' என்றான்.

''ஐ ஸீ''

''ஆக்ராவிலே உஸ்தாத் ஹமீத் கான்னு ஒருத்தனிருக்கான். பெரிய 'கஜல் சிங்கர்'!''

''ஐ ஸீ...!''

''மை காட்... சாரீரம் என்னமா பேசறது! நம்ம கர்நாடக சங்கீத சிம் மங்களும் இருக்கே, கால் கட்டையிலே இணைத்துத் தவளைமாதிரி கத்திண்டு...''

சங்கரன் கட்டிலை விட்டு இறங்கி நாற்காலியில் உட்கார்ந்தான்.

ரமணி அவன் நாற்காலியில் உட்காரக் கண்டதும் புன்முறுவல் செய்தான்.

''உங்களுக்குச் சங்கீதத்திலே 'இன் டெரஸ்ட்' கிடையாதோ?...''

''உண்டு...அதிகமில்லே!...''

''உஸ்தாத்துக்கு ஒரு தங்கை இருக்கா, தங்கத் தாம்பாளம் மாதிரி. என்னமா 'கதக்' ஆடறா!... நம்ப பொண்களும் இருக்கே. அபிநயம்னு குரங்கு சேஷ்டை பண்ணிண்டு...''

சங்கரனுக்கு அவனை அறையலாமா என்று தோன்றிற்று. எரிச்சலை அடக் கிக்கொண்டான்.

''ராஷ்டிரபதி முன்னாலே ஆடற துக்கு அந்தக் குட்டிக்கு 'சான்ஸ்' வாங் கித் தரலாமான்னு இருக்கேன்...''

ஏன் இந்தமாதிரி ரமணி பேசுகிறான் என்று தோன்றிற்று சங்கரனுக்கு.

''குட்டி படு ஜோர்...'' என்று ரமணி கண்ணைச் சிமிட்டினான்.

சங்கரன் சோம்பல் முறித்தான்.

''உங்களுக்கு இதெல்லாம் பிடிக் காதோ... ஐ ஆம் ஸாரி... நீங்க பிரும் மச்சாரி வேறே...அப்படித்தானே...?''

''ஆமாம்... நான் நொண்டி, ஒருத் தரும் எனக்குப் பெண்ணைக் கொடுக் கத் தயாராக இல்லே...''

ரமணி கொஞ்சம் திடுக்கிட்டான். சங்கரன் நிதானமாகப் புன்னகை செய்து கொண்டே இவ்வாறு கூறியது அவ னுக்குத் திகைப்பை உண்டு பண்ணியது.

''என்ன நொண்டிங்கிறீங்க? குருடும் செவிடும் கல்யாணம் பண்ணிக்கிற போது, உங்களுக்குக் கல்யாணம் ஆகா தென்ன? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லுங்கோ, நாலு குட்டிகளை நம்பர் போட்டு வரிசையா நிறுத் தறேன்... ஆர் யூ ரெடி?...''

சங்கரன் பதில் சொல்லவில்லை. பேசாமலிருந்தான். அவனுக்குப் பழைய ஞாபகங்கள் வந்தன.

அவன் பெண் பார்க்கப் போன இடத் தில் அந்தப் பெண்ணுக்கு ஏற்கனவே காதலன் இருந்தானாம். அது சங்கர னுக்குத் தெரியாது. அந்தக் காதலன் அவனைக் கேட்டான்: ''உனக்குக் கல் யாணம் எதுக்கு?.... பாண்டி விளையாடவா?'' ... ''குருடும் செவிடும் கல்யாணம் பண்ணிக்கிறபோது உங் களுக்குக் கல்யாணமாகாதா என்ன?'' இது ரமணியின் அநுதாபப் பேச்சு. சங் கரனுக்கு இனம் புரியாத கோபம் உண்டாயிற்று. யார் மீது என்றுதான் புரியவில்லை.

சங்கரன் வேண்டுமென்றே கொட் டாவி விட்டான்.

ரமணி எழுந்திருந்தான். ''ஐ ஆம் ஸாரி, தூக்கம் வரதா... தூங்குங்கோ. உஸ்தாத் ஹமீத் கான் தங்கைன்னு சொன்னேனே... அநேகமாக இங்கு வரு வாள். யூ கான் ஹாவ் யுவர் ஐ ஃபுல்!'' அவன் இதைச் சொல்லி விட்டு அசிங்க மாகச் சிரித்தான்.

கோபுவின் அம்மாவுக்கு இவன்மேல் வெறுப்பு ஏற்பட்டிருப்பதற்குக் கார ணம் இப்பொழுது புரிந்தது. அரை மணி நேரத்துக்குள்ளே தனக்கு இவ் வளவு எரிச்சல் ஏற்படுகிறதென்றால் கல்யாணம் ஆனதிலிருந்து இத்தனை வருஷங்களாக இவனைச் சகித்துக் கொள்ள வேண்டுமென்றால்... அவ னுடைய கீழ்த்தரமான, அசிங்கமான ரஸனைதான் பௌதிக உருவெடுத்து, கோபுவாய்த் தோன்றியதோ?

ரமணி போன பிறகு, சங்கரன் தூங்க முயற்சி செய்தான். தூக்கம் வரவில்லை. மீண்டும் மீண்டும் அவன் எண்ணங்கள் கோபுவின் குடும்பத்தைப் பற்றியே சுற்றிச் சுற்றி வந்தன. சுந்தரம் கூறியதுபோல் அமைதியான வாழ்க்கை அலுப்படைந்து விட்ட காரணத்தி னால் சலனத்தை நாடி இங்கு வந் திருக்கிறோமோ!... உள்ளத்தின் அடித் தளத்தில் ஒளிந்து கொண்டு தலைமறை வாக இருந்த சில உணர்ச்சிகள், தலை யைத் தூக்கி எட்டிப் பார்க்க முயன் றன. அவை அங்கே இல்லை என்று நினைத்துக் கொண்ட காரணத்தினால் அவை இல்லாமல் போய்விடுமா?...

ரமணியையும் அவன் மனைவியையும் சேர்த்து எண்ணிப் பார்த்தான் சங்கரன். ஒருவரை யொருவர் வெறுத்துக் கொண்டு வாழ்க்கை முழுவதும், அவர்கள் கணவன் மனைவியாக நடித் தால்தான் பாரதப் பண்பாட்டைக் காப்பாற்ற முடியுமா?

இதைப் பற்றித் தான் எதற்காக இப் பொழுது எண்ண வேண்டும்? அவ னுக்கு அப்பொழுது பாரதியின் வரிகள் நினைவுக்கு வந்தன. ''நல்லதோர் வீணை செய்தே... அதை நலங்கெடப் புழுதி யில் எறிவதுண்டோ?...'' **(தொடரும்)**


இருமலா?
க்ளைகோடின்
சாப்பிட்டதும் போய்விட்டதே!
சற்று முன்புதான் அவள் இருமலால் தவித்துக் கொண்டிருந்தாள் என்றால் நம்புவீர்களா? பிறகு க்ளைகோடின் சாப்பிட்டாள். க்ளைகோடின் அவள் இருமலை வெகுசீக்கிரம் பூரணமாக நிறுத்திவிட்டது.
பூரண இருமல் கட்டுப்பாட்டுக்கு க்ளைகோடினுக்கு இணை எதுவுமில்லை!
அவளுடைய கடுமையான இருமலை க்ளைகோடின் வெகுசீக்கிரம், பரிபூரணமாக நிறுத்தியது.
மூளையில்—இருமல் கேந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது
தொண்டையில்—சளி அடைப்பை அகற்றி எரிச்சலைச் சமனப்படுத்துகிறது
மார்பில்—இறுகிய தசைநார்களுக்கு இதமளித்து சுலபமாக சுவாசிக்க உதவுகிறது
நுரையீரல்களில்—அடைத்துக் கொண்டிருக்கும் கோழையைத் தளர்த்தி சளியை வெளியேற்றுகிறது
க்ளைகோடின்
டெர்ப் வசாகா
இருமல்களுக்கு, மிக அதிகமாக விற்பனையாகும் நம்பகமான வீட்டு நிவாரணி
everest/656c/ACW/tm

24

உண்மையில் அன்று அவனைத் திருப்பரங்குன்றத்துக்கு அவள் தான் அழைத்துச் சென்றாள்.



அவளுடைய தங்கை, தாய், தனது அம்மா ஆகிய எல்லோரும் சேர்ந்து அங்கு போகப் போவதாகவே ரங்கராஜன் எண்ணிக் கொண்டிருந்தான். கலாவிடமும் அப்படியே சொன்னான். ஆனால் அது சாத்தியப்படவில்லை. வியாழக் கிழமை போவானேன், ஒரு நாள் இருந்து வெள்ளிக் கிழமையே கோவிலுக்குப் போகலாம் என்றும், அதுதான் முறை என்றும் சொல்லி விட்டாள் கஸ்தூரியம்மாள். அவள் சொல்வதை விஜயாவினால் தட்ட முடியவில்லை. வியாழக் கிழமையே போயாக வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு எந்தவித நியாயமான காரணமும் அகப்படாத நிலையில், அம்மாவின் பேச்சைத் தட்டுவது எப்படி? கலாவும் ''நாளைக்குப் போகலாமே'' என்று சொல்லி விட்டாள். விஜயாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. விடிந்ததுமே அவன் பிரயாணத்துக்காக வலது காலை முன்னால் எடுத்து வைத்து விட்டான். 'இன்னும் அஞ்சு மணி நேரம் இருக்கே! இன்னும் நாலு மணி நேரம் இருக்கே!' என்று மணிக்கு மணி துடித்துக் கொண்டிருந்தாள். பிரயாணம் திடீரென்று நின்று விடுவதைத் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அவளுடைய மனம் அப்போது தன்னுடைய பலத்தையெல்லாம் பறி கொடுத்து விட்டு நின்றது. மன பலம் முழுவதையுமே ஆசை தன் பக்கம் இழுத்துக்கொண்டுவிட்டது. சிறிது நேரம் கைகளைப் பிசைந்தாள். ரங்கராஜன் தன் தாயோடு தயாராகக் காத்துக் கொண்டு நிற்பானே என்ற திகைப்பும் வேறு. அவர்களைப் போய்த் தடுத்து நிறுத்துவது எப்படி? முதல் முதலில் அந்த அம்மாளைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி விட்டுத் திடீரென்று எந்த முகத்தோடு போய்த் தடுத்து நிறுத்துவது?

விஜயா சோர்ந்து போய் ஒரு சோபாவில் வந்து விழுந்தாள். இரண்டு உள்



தீராத விளையாட்டு

கு. அழகிரிசாமி

ளங்கைகளாலும் கன்னப் பொறிகளைப் பொத்திக் கொண்டு அப்படியே சாய்ந்து விட்டாள். அவளால் தொடர்ந்து அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை. பிரயாணம் தடைப் பட்டதற்காகத் தான் மிகவும் கஷ்டப்படுவதைத் தன் தாயாரிடமும் தங்கையிடமும் காட்டிக் கொள்ள விரும்பாமல் சில நிமிஷங்களில் அந்த இடத்தை விட்டு எழுந்து வாசலுக்கு வந்து விட்டாள். பராமுகமாகத் தெருவைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சிறிது நேரத்துக்குள்ளாகவே ரங்கராஜன் அங்கே வந்து விட்டான். அவனைப் பார்த்ததும் விஜயாவுக்கு ஆச்சரியம் ஒரு பக்கம்; ஆனந்தம் ஒரு பக்கம்; பின்னணியில் திகைப்பும் ஒரு பக்கம்.

"வாருங்கோ!" என்று தூக்கத்திலிருந்து விழித்தவள் போல் வேகமாகச் சொல்லி வரவேற்றாள்.

அவன் திடீரென்று வந்து நிற்கிறான். புறப்படுவதற்கான தயார் நிலை அவன் முகத்திலும் இல்லை; உடைகளிலும் இல்லை. மேலும் நான்கு மணி அடிப்பதற்கு முன்பே வேறு வந்து விட்டான். அவனே பிரயாணத்தை ஒத்தி வைத்து விட்டானோ?

ஒரு கணத்துக்குள் அவளுக்கு இத்தனை சிந்தனைகள் தோன்றி விட்டன. ஆனாலும் அவற்றைக் காட்டிக்கொள்ளாமல், "போகலாமா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் விஜயா.

"அம்மா வரவில்லை" என்றான் ரங்கராஜன்.

"ஏன்?"

"அம்மாவை நான் கூப்பிடவில்லை."

"எதுக்காகக் கூப்பிடல்லே?"

"முக்கிய காரியம் ஒண்ணுமில்லே... அதை அப்புறம் சொல்கிறேன்."

விஜயா பதற்றத்துடன், "என்ன விஷயம், சொல்லுங்கோ" என்றாள்.

"அப்படி ஒண்ணும் முக்கியமான விஷயமில்லே. அம்மாவாலே இன்னிக்கு வர முடியாது. வீட்டிலே வேலை இருக்கு...."

"நிஜமா?"

"நிஜமாத்தான் சொல்றேன். இன்னொரு நாளைக்கு அழைச்சுக்கிட்டுப் போகலாம்."

"இங்கே எங்கம்மா நாளைக்குப் போகலாம்னு சொல்லிட்டா. கோவிலுக்கு வெள்ளிக்கிழமை போகாமல் வியாழக்கிழமை போறது முறையில்லே என்கிறாள்."

"அப்படியா? அப்படின்னா, நாம்ப இன்னிக்குப் போகல்லே."

அவன் ஏமாற்றமோ கவலையோ இல்லாமல் சாதாரணமாகவே பேசினான்.

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.



உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

புதிய, நவீன காஸ்மெடிக் டின்!



ஸ்டைலான புதிய டின்!



மற்றும் பாமாலிவ் டால்க் டிலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

அதைக் கண்டு அவனுக்கு ஒரு மாதிரி ஆத்திரமே வந்து விட்டது.

''கோயிலுக்குப் போகாவிட்டாலும் வேறே எங்கேயாவது வெளியே போய் விட்டு வந்தால்தான் என் மனசுக்கு நிம்மதி இருக்கும்'' என்று சொல்லி விட்டு விறு விறு வென்று உள்ளே போனாள். போகிற போக்கிலேயே ''உள்ளே வந்து உட்காருங்கோ'' என்று சொல்லிவிட்டு மறைந்தாள். ரங்கராஜனும் சோபாவில் போய் உட்கார்ந்தான்.

உள்ளே போன விஜயா சிறிது நேரத்தில் உடை மாற்றிக் கூந்தலையும் வாரி, நாகரிகமாகக் கொண்டை போட்டுக் கொண்டு வெளியே வந்தாள். அவளைத் தொடர்ந்து அவளுடைய தாயும் தங்கையும் வெளியே வந்தார்கள்.

எடுத்த எடுப்பில் ''வெளியே போய் விட்டு வரலாமா?'' என்று ரங்கராஜனைக் கேட்டாள் விஜயா. அவன் திகைத்துப் போய் விழித்தான்.

''திருப்பரங்குன்றத்துக்கு நாளைக்குப் போவோம். இப்போ சும்மா வெளியே போய்விட்டு வரலாமே? அம்மாகிட்ட உத்தரவு வாங்கிக்கிட்டுத்தான் உங்களைக் கூப்பிடுகிறேன்.''

''கலா?''

''அவள் வரலையாம். நாளைக்குத்தான் வர்றாளாம்.''

''ஏன்?''

''ஏனோ? நாளைக்கு வெட்கம் வராது போலிருக்கு!'' என்றாள் விஜயா.

கஸ்தூரியம்மாள் சிரித்தாள். உடனே உள்ளேயும் போய்விட்டாள்.

அடுத்த நிமிஷமே விஜயா அப்பாவுக்குப் போன் பண்ணிக் காரை வரவழைத்தாள். டிரைவரைத் திரும்பப் போகச் சொல்லிவிட்டு அவளே காரை ஓட்டுவதற்கு முன்னால் சென்றாள். ரங்கராஜன் பயந்து விட்டான். தடுமாறிக் கொண்டு நின்ற அவனை, ''காரிலே ஏறிக்கோங்க. இன்னிக்கு நானே கார் ஓட்டப் போகிறேன்'' என்று அவசரப்படுத்தினாள்.

இன்னது செய்கிறோம் என்ற பிரக்ஞையே இல்லாமல் காரின் முன் சீட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டான் ரங்கராஜன். கலாவிடம் அவன் விடை பெற்றுக் கொண்டது அந்தக் கணத்திலேயே மறந்து விட்டது.

கார் தெற்கு ஆவணி மூல வீதியில் திரும்பிய பிறகுதான் ரங்கராஜனுக்கு உயிர் வந்தது. எதிரே அவனுக்குத் தெரிந்தவர்கள் — அப்பா உட்பட — யாருமே வரவில்லை.

குறிக்கோள் ஏதுமின்றி ரயில்வே ஸ்டேஷனை நோக்கிக் கார் போய்க் கொண்டிருந்தது.

''விஜயா! நாம்ப எங்கே போகிறோம்? தயவு செய்து சொல்லலாமா?'' என்று பய நடிப்புடன் ஒரு பள்ளிக் குழந்தையைப் போல் கேட்டான் ரங்கராஜன்.

''நாம்ப எங்கே போறோம்னு எனக்கே தெரியல்லே. எங்கே போகலாம்னு நீங்கள் தயவு செய்து சொல்லலாமா?'' என்று அவள் கேட்டாள்.

விஜயாவின் உணர்ச்சி வேகம் உல்லாசமாக மாறிவிட்டது.

''எனக்கு இப்போ திசையே தெரியல்லே, விஜயா!''

''திருப்பரங்குன்றத்துக்கே போனால் என்ன? வியாழக் கிழமை போனால் முருகன் கோபிச்சுக்க மாட்டானே!''

''அங்கேயே போவோம். எல்லாம் அவன் சித்தம்'' என்று சொல்லிவிட்டு அவன் இலேசாகச் சிரித்தான்.

திருப்பரங் குன்றம் மலை' என்று வழங்கப்பட்டு வந்தாலும் அது பெரியதொரு குன்றுதானே ஒழிய மலையல்ல. அங்கொன்று இங்கொன்றாகச் சில குத்துச் செடிகளும், வளர்ச்சி குன்றிய இரண்டொரு காட்டு மரங்களும்தான் இருக்குமிடம் தெரியாமல் இருக்கின்றன. இப்படிப்பட்ட மலையில் ஏறி எந்த இயற்கை வளத்தைக் காண முடியும்? எந்த அருவியில் நீராட முடியும்? எந்த மலர்களின் சுகந்தத்தை நுகர முடியும்? எந்த ஒரு புலனுக்குமே இன்பம் தர முடியாத இந்த மலையிலும் பலர் ஏறுவதுண்டு. உயரமான ஓர் இடத்தில் போய் நிற்பதிலும், அங்கே நின்று கொண்டு சுற்றுப்புறத்தைப் பார்ப்பதிலும் மனித ஜாதிக்கு எப்பொழுதுமே ஓர் ஆசை.

அன்று கல்யாணங்களுக்கு வந்தவர்களோடு, டூரிஸ்ட் பஸ்ஸில் வந்தவர்களும் மலைப் பாதையில் மேல் நோக்கி ஏறிக் கொண்டிருந்தார்கள். சிலர் பாதையை விட்டு விலகி நின்று கீழே தரைப் பகுதியைப் பார்த்துக் களித்துக் கொண்டிருந்தார்கள். டூரிஸ்ட் பஸ்ஸில் வந்தவர்கள் சிலரிடம் தொலை நோக்கிக் கண்ணாடிகளும், காமிராக்களும் இருந்தன. அந்தக் கருவிகளைப் பயன்படுத்தி உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் அதிக உல்லாசத்தோடும், கும்மாளத்தோடும் காணப்பட்டவர்கள் பெண்களே. நவநாகரிகமான உடையுடனும், மற்ற நவீன ஒப்பனைகளுடனும் வந்திருந்த அந்த இளம் பெண்கள் எவ்வளவோ அழகாகத்தான் இருந்தார்கள். ஏறக்குறைய பாதிப் பேர் பத்தரை மாற்றுத் தங்கம்

போன்ற மேனி வண்ணம் படைத்தவர்களே. இந்த அழகிகளும்கூடத் தங்கள் கோஷ்டியைக் கடந்து மலையில் ஏறிச் சென்ற ரங்கராஜனையும் விஜயாவையும் ஒரு வியப்புடன் பார்த்தார்கள். இமை தட்டாத அனைவர் கண்களும், பார்த்த பார்வையிலேயே, 'எவ்வளவு பொருத்தமான ஜோடி!' என்று பாராட்டி விட்டன.

யானையின் முதுகைப் போல்—ஆனால் மிகப் பெரிய அளவில் — நீண்டு, அகன்று மேடிட்டு நின்ற ஒரு பாறையில் போய் ரங்கராஜனும் விஜயாவும் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்ததும் பாறை சுட்டது. மிகவும் ஏமாற்றத்துடன், இவ்வளவு உயரம் ஏறி வந்தும் உட்கார இடமில்லையே என்று தனக்குள் கஷ்டப்பட்டாள் விஜயா.

'' 'காலையில் கல்; மாலையில் புல்' ஒன்னு தெரியாமலா சொல்றாங்க!'' என்று சொல்லிக் கொண்டே ரங்கராஜன் எழுந்து நின்றான்.

அப்போது மஞ்சள் வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. அவன் தன் முகத்தை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாகத் திருப்பும் போது அதில் சூரிய ஒளி பாய்ந்து பாய்ந்து படரும் அழகையும், சூரியனுக்கு நேராக முகம் திரும்பும் போது கண்கள் கூசும் கூச்சத்தையும், பூக்களில் மொய்க்கும் வண்டுகளின் கால்களைப் போல் அவன் கண்ணிமைகள் குவிந்து விரியும் அலாதிக் காட்சியையும் பார்த்துக் கொண்டு அவன் எதிரே ஒரு நிமிஷம் மௌனமாக நின்றான் விஜயா. பிறகு, ''கண்ணை மட்டுமில்லே, இந்த நீளமான கண்ணிமையையுமே அம்மாகிட்டே இரவல் வாங்கிக்கிட்டிருக்க!'' என்றாள்.

''இந்த உயிருமே அவள் போட்ட பிச்சைதான்!'' என்று ஓர் உல்லாசமாகவே சொன்னான் ரங்கராஜன்.

விஜயா அப்புறமும் சொன்னாள்-முகத்தில் சிறிது லஜ்ஜையும் சிறிது முரட்டுத் துணிவும் தோன்றச் சொன்னாள்: ''சில ஆண்களின் அழகைக் கண்டு சில பெண்கள் மயங்கிட்டதாச் சொல்லியிருக்கிறாங்க....''

''அப்படிச் சொல்லியிருக்கிறாங்களே தவிர, எந்தப் பெண்ணும் அந்த மாதிரி மயங்கறது கிடையாது! அப்படித்தானே, விஜயா?'' என்றான் ரங்கராஜன்.

''தப்பு.... கொஞ்சம் இருங்க.... சரியாச் சொல்றேன். பெண்கள் ஆண்களின் அழகைக் கண்டு மயங்கினாலும் மயங்குவாங்களே ஒழிய, பொறாமைப் படவே மாட்டாங்க. ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணின் அழகைக் கண்டுதான் பொறாமை! ஆனால், இந்த இமைகளைக் கண்டால் பெண்களே பொறாமைப்படணும்!....''

விஜயா வெட்கத்தோடு வாயை மூடிக் கொண்டு சிரித்தாள்.

அவன் சொன்னான்: ''இதிலே ஆச்சரியம் ஒண்ணுமில்லையே! இது பெண்ணோட இமைதானே! அம்மாகிட்டே இரவல் வாங்கினதுன்னு நீதானே சொன்னே? இதைக் கண்டு உனக்கு ஏன் பொறாமை உண்டாகாதுன்னு கேட்கிறேன்.''

தன்னுடைய பரவசத்தைப் புரிந்து கொள்ளாமலே ரங்கராஜன் மேல் போக்காகப் பேசுவது அவளுக்குக் கொஞ்சம் சங்கடமாகவே இருந்தது. அதனால் பேச்சை மாற்றி, ''பாறை சுட்டாலும் பரவாயில்லே. ஒரு நிமிஷம் இப்படி உட்காருங்க'' என்று சொல்லி விட்டுத் தன் பையிலிருந்து ஒரு சிறு காமிராவை வெளியே எடுத்தாள்.

ரங்கராஜன் ஆச்சரியத்தோடு விழித்துப் பார்த்து, ''இந்தப் பைக்குள் என்னவெல்லாம் வச்சிருக்கே, விஜயா? ஒவ்வொண்ணா எடுத்துக்கிட்டிருக்கியே! மந்திரவாதி பையிலேகூட இத்தனை சாமான்கள் இராது போலிருக்கே!'' என்றான்.

''அப்படி ஒண்ணும் அதிகமா இல்லே. ரொம்ப காலத்துக்குப் பிறகு இந்தப் பையை வெளியே எடுத்துக் காமிராவையும், சாக்லேட்டுக்களையும் உள்ளே போட்டுக்கிட்டு வந்தேன்...''

''அவ்வளவுதானா?''

''நீங்களே பாருங்க. ஒரு 'நெயில் கட்டர்' துருப் பிடிச்சுப் போய்க் கிடக்குது! கையகலத்திலே ஒரு கண்ணாடி! ஒரு கர்ச்சீப்!.....''

''வேறே? பவுடர், கியூட்டக்ஸ்...''

விஜயா விளையாட்டுணர்ச்சியே இல்லாமல், ''அதுகளை நான் பையிலே போட்டுச் சுமந்ததே கிடையாது. பையை நீங்களே பாருங்க... ஒரு முந்நூறு ரூபா இருக்கு. எப்பவோ போட்டு வச்ச மூணு நூறு ரூபாய் நோட்டு. எனக்கு ஞாபகம்கூட இல்லே'' என்றாள். உடனே, ''சரி, இந்த வெய்யில் போயிடறதுக்கு முன்னாலே படம் எடுத்துடறேன். கொஞ்சம் உட்காருங்க'' என்று அவசரப் படுத்தினாள்.

ரங்கராஜன் உட்கார்ந்தான். அவள் அருகிலும், தூரத்திலும், பக்கவாட்டிலும் நின்று ஏழெட்டு 'ஷாட்டு'களுக்கு மேல் எடுத்து விட்டாள்.

''இனி நீங்கள் எழுந்திருக்கலாம்.''

ரங்கராஜன் சொன்னான்: ''எனக்குப் படம் எடுக்கத் தெரியாமல் போச்

சென்னு இருக்கு விஜயா. உன்னைப் படம் எடுக்க முடியல்லையே!''

''பரவா யில்லே. நஷ்டம் ஒண்ணுமில்லே. எனக்கு அப்படிப் பொறுமைப் படுகிற மாதிரி கண்ணும் இல்லே, கண் இமையுமில்லே. இந்த அழகைப் படம் பிடிச்சுத்தான் பார்க்கணும்!...''

''உனக்குக் கண் அழகா இல்லேன்னு யாராவது கண் இல்லாதவனைப் பார்த்துச் சொல்லு. என்கிட்டே சொல்லாதே.''

இருவரும் சிரித்துக் கொண்டு அங்கிருந்து மேலே நடந்தார்கள்.

ரங்கராஜனுக்கு அந்த முந்நூறு ரூபாய் ஞாபகத்துக்கு வந்தது.

''விஜயா! நீ வச்சிருக்கிற இந்த முந்நூறு ரூபாயை என்ன செய்யப் போறே?'' என்று அவன் கேட்டான்.

''எனக்கே தெரியாது. வேணும்னு, அப்பாகிட்டே திருப்பிக் கொடுக்கலாம்....''

''எதுக்குன்னு தெரியாமலும், தன் கிட்ட இருக்கிற ஞாபகம் கூட இல்லாமலும் பணத்தை வச்சிண்டிருக்கிறதனாலே என்ன பிரயோசனம்? அதை விட அதை யாருக்காவது கொடுத்து உதவலாமே! எத்தனை ஏழைகள் கஷ்டப்படறாங்க நாட்டிலே.''

''அத்தனை ஏழைகளுக்கும் இந்த முந்நூறு ரூபாய் எப்படிப் போதும்? நம்ப நாட்டிலே ஒரு ஏழையா, ரெண்டு ஏழையா?....''

''ஒரே ஒரு ஏழைக்காவது கொடுக்கலாமே!''


''ஏன் கொடுக்கணும்? அவனை இன்னும் சோம்பேறியாக்கறதுக்கா? சோம்பேறிகளைக் கண்டாலே எங்க அப்பா விஷமா வெறுப்பார்.''

''சோம்பேறியா இல்லாமல் சுறுசுறுப்பாக உழைக்கிறவங்களும் கூட ஏழையா இருக்கிறாங்க விஜயா!''

''உழைக்கிறவன் ஏழையா இருக்கவே மாட்டான். அப்படி இருந்தால் அவன்கிட்டே வேறே ஏதாவது ஒரு குறை இருக்கும்....''

''பணத்தைக் கொடுக்காமல் இருக்கிறதுக்கு இப்படியெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டு பிடிக்கிறதிலே பணக்காரங்க மகா புத்திசாலிகள்! அவங்களுக்கு மற்ற விஷயங்களிலே புத்தி இருக்கிறதோ, இல்லையோ, இந்த விஷயத்திலே அவங்களோட பேசி யாராலும் ஜெயிக்கவே முடியாது....''

''நீங்க சொல்றது நிஜமாகவே இருக்கலாம். அப்படியே இருக்கட்டும். அதெல்லாம் இப்போ எதுக்கு? இங்கே எந்த ஏழையும் வந்து கையை நீட்டிக்கிட்டு நிற்கல்லையே?.... இந்த வெளிச்சம் போறுது. இன்னொரு நாள் உங்கள் கண்களை மட்டும் தனியா ஒரு படம் எடுக்கணும்னு இருக்கு...''



- ஜெயச்சந்திரன்.

ரங்கராஜன் தமாஷ் பேச்சை விட்டு விட்டான். அவளோடு என்னென்ன பேசவேண்டும், அவளிடம் எதை எதைக் கேட்டு அறிய வேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்தானோ அவற்றை இந்த அபூர்வமான சந்தர்ப்பத்தில் கேட்டு விடவேண்டும் என்று எண்ணி, அதற்குத் தோற்றுவாயாகத் தன் கண்களின் அழகை அவள் திரும்பத் திரும்பப் புகழ்வதையே வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினான்.

''விஜயா! நீயும் உங்க வீட்டிலே எல்லோருமே என்கிட்ட இவ்வளவு பிரியமா இருக்கிறதுக்கு என்ன காரணம்? என்னை உங்களுக்கு முன்னே பின்னே தெரியாதே? அப்படி இருந்தும் இவ்வளவு பிரியமா எங்க வீட்டோட பழக உனக்கு எப்படித் தோணினது?''

''இதை எதுக்குக் கேட்கிறீங்க? அதுவும் திடீர்னு இப்படிக் கேட்பானேன்?''

''ரொம்ப நாளாவே கேட்கணும்னு இருந்தேன்....''

''பிரியம் ஏற்படறதுக்கு ஒரு காரணமே இருக்க முடியாது!...''

''எனக்கு இது சமாதானமாகாது. 'கண்டதும் காதல்!' என்கிற கதையா இருக்கு நீ சொல்றது!''

''உங்களுக்கு எங்க மேலே எதனாலே பிரியமோ, அதனாலேதான், உங்க மேலேயும் எங்களுக்குப் பிரியம்!''

''இல்லையே! இந்தப் பிரியத்துக்கும் உறவுக்கும் நீதானே வழி திறந்தது? இல்லையா விஜயா? கோயிலிலே தங்கத் தோடே முதல் முதலிலே பேசினையே...''

''ஐயோ, அப்போ நான் பட்ட பாடு! நீங்க சாத்தூருக்குப் போயிட்டீங்க. தங்கம் உங்ககிட்ட என்ன

சொன்னுளோ, ஏது சொன்னுளோன்னு எனக்குத் நினைப்பு. உங்க விட்டோட பழக முடியாமல் போய் விடுமோ என்கிற பயம்! அதனுலேதான்... அது தான் காரணம்... நீங்க சாத்தூரிலிருந்து திரும்பி வந்தப்போ, உங்க நமஸ்காரத்துக்குப் பதில் நமஸ்காரம் பண்ணக் கூட எனக்குத் தோணலே...''

ரங்கராஜன் அடி எடுத்து வைப்பதை நிறுத்தித் திரும்பி நின்று கொண்டு, அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டான்: ''விஜயா! நாம்ப இங்கே தனியா இருக்கிரும். மனசிலுள்ளதை வாய் விட்டுப் பேசலாம். உன்னே நான் மட்டுமில்லே. எங்க அம்மாவுமே உயிரா நினைக்கிருள். நீ வேறு, நாங்க வேறு இல்லே... சொல்லு விஜயா! அர்த்தமில்லாத ஓர் அற்பப் பயத்திலே என்னைப் பார்த்து நமஸ்காரம் பண்ண முடியாமல் போயிடாது. அப்போ உன் முகத்திலே அத்தனை கவலைக் குறியும் இருந்திருக்க வேண்டிய அவசியமில்லே. வேறே ஏதோ ஒரு காரணம். ஏதோ குடும்பக் கவலே...''

''எனக்கு என்ன குடும்பக் கவலே!''— விஜயா சிரித்து மழுப்பினுள்.

''கொஞ்சம் பொறு... அப்புறம் இன்னும் பல விஷயங்களையும் கேட்டுடறேன்.''

அவன் சிரித்தான்.

''உன் மனசிலே உள்ள கவலே என்னன்னு எனக்குத் தெரியணும். ஏன் தெரியுமா? உன் கவலையை அடியோட போக்குறதுக்குத்தான். அதுக்கு நான் எது வேணும்னுலும் செய்வேன்... நீங்க ஏன் பெரிய பங்களாவை விட்டுட்டு இந்தச் சின்னத் தெருவுக்கு வந்தீங்க? அதுவும் ஒரு ஜோஸ்யன் சொல்லைக் கேட்டுக்கிட்டு? அப்படியும் இருக்கலாம். ஆனல் வேறே ஏதோ ஒரு காரணமும் இருக்கணும்னு எனக்குத் தோணுது.... என்னவோ மனக் கஷ்டம்... இவ்வளவு பழகியும் அதை என்கிட்டேச் சொல்ல உனக்கு விருப்பமில்லே... எது எப்படியும் போகட்டும். இதை மட்டும் சொல்லு. என்கிட்டே உனக்கு இவ்வளவு பிரியம் எப்படி வந்தது? என் காலிலே கூட ஒரு நாள் விழ வந்துட்டே! நான் மெட்ராஸிலிருந்து வர்றதுக்கு ஒரு நாள் தாமதமாயிட்டதை உன்னுலே பொறுக்க முடியாமல் கோயிலுக்குப் போய் அர்ச்சனையும் பண்ணிக்கிட்டு வந்திருக்கிறே? ஏன் இப்படியெல்லாம் என்மேல் பிரியம் வரணும்? நான் ரொம்ப அழகா இருக்கிறதாத் திரும்பத் திரும்பச் சொல்றே. அதனுலேதான் பிரியமா? உன் பிரியம் அப்படி அற்ப சொற்பமான மாதிரியிலே இல்லே, விஜயா....''

''ஒண்ணு சொல்றேன். நீங்க நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி,.... எனக்கு முதல் முதல்லே, உங்ககிட்டே பிரியம் வந்ததாகக் கூடச் சொல்ல மாட்டேன்...''

''அம்மா கிட்டேதான்?...''

''அதுவும் இல்லே. உங்க முகத்தைப் பார்த்து, முகத்துக்கிட்டேதான் பிரியம் வந்தது. இந்த முகம்தான்...''

அவனுடைய முகத்தைத் தன் இரு உள்ளங் கைகளாலும் அணைத்துக் கொண்டு சொன்னுள்: ''சத்தியமாச் சொல்கிறேன். இந்த முகம்தான்... இந்த முகத்திலே வடிகிற பால்தான் என் மனசைக் குளிர வச்சு, எனக்கு எப்பவும் இல்லாத மாதிரி சந்தோஷத்தைக் கொடுத்தது...''

விஜயாவின் குரல் பேச முடியாமல் விக்கியது. கண்களிலும் நீர் திரண்டது.

ரங்கராஜன் அவளுடைய தோளில் கை வைத்து. ''விஜயா!...'' என்றுன். அந்த ஒரே ஒரு வார்த்தை சொல்லி நிறுத்திக் கொண்டான்.

''இந்த முகத்தைப் பார்த்து நான் எத்தனையோ விஷயங்களை மறந்திருந்தேன். இப்போ அத்தனையும் எனக்கு ஞாபகத்துக்கு வருது... கொஞ்ச நேரத்திலே நான் அழுதாலும் அழுதுடுவேன் போலிருக்கு...''

''அப்படின்னு நீ எதுவுமே சொல்ல வேண்டாம்..... வா, திரும்பலாம். இருட்ட ஆரம்பிச்சுட்டது.''

இருவரும் திரும்பினுர்கள். ரங்கராஜன் மௌனமாக இருந்தான்.

விஜயாவே பேச ஆரம்பித்தாள். ''உங்களுக்கு நான் சொல்லித்தான் ஆகணும். என்னிக்காவது ஒரு நாள் சொல்லணும்னுதான் இருந்தேன். இப்போ நீங்களே கேட்டுட்டீங்க''.

''உனக்கு மனக் கஷ்டமா இருக்கிறதை ஏன் சொல்றே?''

''சொல்லணும்னு எனக்குத் தோணறப்போ சொல்லத்தானே செய்வேன்?''

எத்தலும் குத்தலுமான பாறைகளில் ஜாக்கிரதையாகக் கால் ஊன்றிச் சாவதானமாக மலைப் பாதையில் இறங்கி வந்தார்கள். இவர்களைப்போல் மற்றவர்களும் இறங்கி நடந்து கொண்டிருந்தார்கள். மலையில் அதிக தூரம் மேலே போய்விட்ட இந்த இருவர் தான் எல்லோருக்கும் பின்னுல் வந்து கொண்டிருந்தார்கள்.

''விஜயா கொஞ்சம் இரு. இவங்க முன்னுலே போகட்டும். இவங்களோடே

போனால் நாம்ப எதுவுமே பேச முடியாது.''

அவன் நின்றான். இருவரும் அங்கே நின்று சுற்றுப்புறத்தையும் அடிவானத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கீழே வயல் வெளிகளுக்கு மேல் பறவைகள் கூண்டுகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தன. தெற்கே இருந்து ஒரு ரயில் வண்டி வந்து கொண்டிருந்தது. ரயில் வண்டியில் மட்டுமின்றி, கீழே ஊருக்குள்ளேயும் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அந்திக் கருக்கல் அதிவேகமாக இரவாக மாறிக்கொண்டிருந்தது. மேற்குத் திசையில் சுக்கிரனும் காட்சி யளித்தது.

சில நிமிஷங்களுக்குப் பிறகு இருவரும் இறங்கி வரும்போது, ரங்கராஜன் கேட்டான்: ''விஜயா! இன்னொரு விஷயம்: இதை நீ சொல்லலாம். நாம்ப ரெண்டு பேரும் இங்கே தனியா வந்தோம். இவ்வளவு நேரமும் இங்கே இருந்துட்டு இப்போ வீட்டுக்குப் போகப் போறோம். உங்க அப்பாவோ, அம்மாவோ ஒண்ணுமே நினைக்க மாட்டாங்களா?''

''நான் உங்களுக்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். அப்படி எதுவும் நினைக்கிறவங்களா இருந்தால் எங்க அம்மா உங்களோடே என்னை வெளியே வர விட்டிருப்பாளா? எங்க அப்பா நான் கேட்ட மாத்திரத்திலே காரை அனுப்பிச்சிருப்பாரா? உங்களோடே வெளியே போகப் போறேன்னு சொல்லியேதான் காரை அனுப்பச் சொன்னேன்...''

''என்னாலே நம்பவே முடியல்லே, விஜயா.''

''நம்பவும் முடியாது; விபரீதமாகக் கூட இருக்கும்...''

''அப்படி ஒண்ணுமில்லே...''

''ஏன்? உங்களைத் தந்திரமாக வசப்படுத்துறதுக்கு நாங்க வீட்டோடே முயற்சி பண்ணறதாகக் கூட நீங்க நினைக்க முடியும்...''

''அதுக்கு நீங்களும் அப்படி இல்லே. நானும் அற்பனா இல்லே.''

''கோபிச்சுக்காதிங்க. உங்களுக்கு எங்க வீட்டுக் கதையை முழுக்கவே சொல்லணும். உங்களுக்குத் தெரியாமல் என் மனசிலே எந்த ரகசியமும் இருக்க வேண்டாம். நான் கும்பிடுகிற இந்த முருகனுக்கு எல்லா ரகசியமும் தெரியும். அதைப் போல உங்களுக்கும் தெரியட்டும். உங்களையும் நான் கும்பிடுகிறேன்...''

ரங்கராஜனுக்கு நெஞ்சில் சுருக்கென்று தைத்தது போலிருந்தது.

காலா காலத்தில்....



''அப்போலோ'' ராக்கெட் தரையை விட்டுக் குறிப்பிட்ட நேரத்தில் கிளம்பவில்லை. கொஞ்சம் தாமதம் ஆயிற்றாம். எத்தனை நேரம் லேட்? 724 மில்லி செகண்ட் தாமதமாயிற்று.—அதாவது சுமார் முக்கால் செகண்ட்.

ஆதாரம்: டைம்
தகவல்: 'ரமேஷ்'

அவனுடைய இரு கைகளையும் பற்றிக் கொண்டு, ''விஜயா! இனியும் நான் மறைக்க விரும்பவில்லே. என்னை ஆண்டவனுக்குச் சமானமா நீ நினைக்க ஆரம்பிச்சிட்டப்புறம், நான் பொய் சொன்னால், அது அந்த ஆண்டவனையே அவமானப்படுத்தற மாதிரி விஜயா! இப்போ நீயும் எனக்குத் தெய்வம் தான். தெய்வ சந்நிதியிலே பொய் சொல்றது மகா அபசாரம்... நான் உன்கிட்டே கேட்டதிலே எத்தனையோ விஷயங்கள் எனக்கு ஏற்கனவே தெரியும். அது எவ்வளவு தூரம் உண்மை எவ்வளவு தூரம் பொய் என்கிறது தான் தெரியாது. அதைத் தெரிஞ்சுக்கத்தான் உன்னை அத்தனை கேள்வி கேட்டேன்'' என்றான்.

''எங்க கதையை உங்களுக்கு யார் சொன்னா?''

''என் சிநேகிதர் முத்துக்குமார்தான் சொன்னார். அவருக்குத் தெரிஞ்சவரையில், கேள்விப்பட்ட வரையில் சொன்னார்.''

விஜயாவின் தமையனுடைய தகாத செயல், அவன் வீட்டை விட்டு விரட்டப்பட்டது, விஜயாவின் பெற்றோர் கலப்புத் திருமணம் செய்து கொண்டது — இந்த மூன்று செய்திகளையும் முத்துக்குமார் தனக்குக் கூறியபடியே விஜயாவிடம் அவன் எடுத்துரைத்து, ''இதுதான் எனக்குத் தெரிஞ்ச சமாச்சாரம்'' என்று சொல்லி முடித்தான்.

''அவ்வளவும் உண்மை'' என்று சொல்லி முடித்த விஜயா திடீரென்று வழுக்கிச் சரிந்தாள். அவள் காலின் கீழ் அகப்பட்ட ஒரு கல் புரண்டு விட்டது. கீழே விழப் போன அவளை ரங்கராஜன் பிடித்துக் கொண்டான். அவனுடைய கைபலத்தில் அவள் பழையபடியும் நிமிர்ந்து நின்றாள்.

''கல் தட்டிவிட்டதா?''

''ஒண்ணுமில்லே. நீங்க இல்லேன்னா நான் விழுந்திருப்பேன்!... விழுந்து

காலைக் கையை ஒடிச்சுக்கிட்டும் இருப்பேன்'' என்று சொல்லிவிட்டு விஜயா சிரித்தாள்.

''அப்படி யெல்லாம் ஏன் சொல்றே? நமக்கு அந்த மாதிரி ஒண்ணும் வராது— அதுவும் முருகன் சந்நிதியிலே.''

''முருக பக்தர்களிலேயும் நொண்டிகளும் குருடர்களும் இருக்கிறாங்க! நம்ப தப்புக்கு முருகன் என்ன பண்ணுவான்?... நல்ல வேளை, இத்தோடே போச்சு! இல்லேன்னு நீங்க ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பீங்க. என்னைக் கார் வரையிலும் சுமந்துக்கிட்டில்லே போக வேண்டி ஆகியிருக்கும்!''

''விஜயா! உன்னைச் சுமக்கிறதுக்கு ஒருத்தன் பாக்கியம் செஞ்சிருக்கணும்.''

''என் கால் ஏன் ஒடியல்லேன்னு இருக்கு இப்போ!...''

ரங்கராஜன் அவளைக் கடிந்துகொள்ளவே தொடங்கி விட்டான். ''நீ இப்படிப் பேசறது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே. உனக்குக் கால் ஒடிஞ்சா என் மனசு இந்த ஜென்மத்துக்கெல்லாம் ஒடிஞ்சு போயிடும்...அத்தோடே, இப்படி விபத்துக்களை நமக்கு நடந்த மாதிரி கூட வேடிக்கையாப் பேசறது பாவம்.''

அவனுக்குத் திண்டுக்கல் பாலுவின் சகோதரி லாரி விபத்தில் கால் ஊனம் அடைந்த விஷயம் அப்போ நினைவுக்கு வந்து விட்டது.

''நொண்டிப் பெண்ணை நினைச்சுப் பார்க்கக் கூட இப்படிக் கஷ்டப்படுறீங்களே! இப்படி உங்க மனைவிக்கு ஒரு விபத்து ஏற்பட்டால் — அப்படி ஏற்பட வேண்டாம். ஏற்பட்டால்— என்ன செய்வீங்க?'' — மனைவியின் ஸ்தானத்தில் தன்னையே நினைத்துக் கொண்டு அவள் கேட்டாள்.

''அவளுடைய காலைச் சரிபண்ற துக்கு வேண்டிய சிகிச்சை யெல்லாம் செய்வேன். அப்புறமும் அது சரியாகலேன்னு, அவள் நொண்டியாத்தான் இருப்பான்னு, என் வாழ்நாள் எல்லாம் அவளைத் தலை மேலே தூக்கி வச்சுச் சுமப்பேன். இந்த ஜென்மம் எடுத்ததுக்கு அப்படி ஓர் ஆத்மாவுக்கு உதவி பண்ற யோக்கியதை யாவது எனக்குக் கிட்டுமில்லையா? இப்போ எந்த யோக்கியதையும் இல்லாமல் இருக்கிறேனே!''

அவனும் விஜயாவை மனத்தில் வைத்துக் கொண்டே ''தலை மேல் தூக்கி வைச்சுச் சுமப்பேன்'' என்று சொன்னான். அவள் அதைப் புரிந்து கொண்டு, ''உங்களை நான் ஏன் முருகனுக்குச் சமானமாகச் சொல்லக் கூடாது?'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்; இரண்டாவது தடவையாக அதை வாயாலும் சொன்னாள்.

இருவரும் மலையை விட்டு இறங்கிக் கோவிலை நோக்கி வந்தார்கள். கார் நிறுத்தி யிருந்த கடைக்கு முன் வந்ததும், கடைக்காரன், ''வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு முன்போலவே தேங்காய் பழம் முதலியவற்றை ஒரு கூடையில் வைத்து நீட்டினான். கோவிலுக்குப் போக வேண்டும் என்பதை அவர்களுக்கு ஞாபகப் படுத்தியவனே அவன்தான்.

இருவரும் கோவிலுக்குள் போகும் போது, ரங்கராஜனின் உள்ளத்தில் நெடுகிலும் இலை மறைவு காயாக இருந்து வந்த பயம் தலைதூக்கியது - தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது கோவிலில் நிற்பார்களோ என்று ஒவ்வொருவரையும் தான் பார்ப்பது தெரியாமல் ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டே சென்றான்... சுவாமியையும் அம்மனையும் தரிசித்துவிட்டு வெளியே வந்து, கடைக்காரனுக்குக் காசு கொடுத்துவிட்டு இருவரும் காரில் ஏறிக் கொண்டார்கள்.

கார் ஊரை விட்டு வெளியே வரும் போது, பாதை ஒரு நந்தவனத்தின் வேலி ஓரமாகத் திரும்பியது. அங்கே 'கம்' மென்று வீசிய முல்லை மலர்களின் நறுமணம் ஒரு பனி மூட்டம் போல் கார் முழுவதையுமே சூழ்ந்து கொண்டது.

சீக்கிரத்திலேயே பசுமலைக்கு வந்து விட்டார்கள். மதுரை நகரின் ஒளிக் கூடாரம் மிக அருகில் தெரிந்தது. இன்னும் சில நிமிஷங்களில் கார் மதுரைக்குப் போய்விடுமே என்று கவலைப் பட்டாள் விஜயா. பசுமலையின் எல்லையை விட்டு வெளியே வருவதற்குள் அவளுடைய மனசைப் போலவே கைகளும் கால்களும் பின்வாங்கின. காரை மெதுவாக ஓட்டிக் கொண்டு வந்து ஒரு வேப்ப மரத்தின் அடியில் நிறுத்தினாள்.

''ஏன்?'' என்று பயந்து போய்க் கேட்டான் ரங்கராஜன்.

''போகலாம். என்ன அவசரம்? இந்த நல்ல காத்து இன்னும் கொஞ்சம் உடம்பில் படட்டுமே. அங்கே போய் அனல் காத்திலேதானே இருக்கணும்?'' என்றாள் விஜயா.

''நானும் அப்படித்தான் நினைச்சேன்'' என்றான் ரங்கராஜன். (தொடரும்)

உங்கள் துணிகளுக்கும் வீடுகளுக்கும் நீங்கள் பின்னல் வேலை செய்து மகிழுங்கள் !







பயிற்சி பெறுவோருக்கும் ! பின்னல் வேலை பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தனையும்—இடக் கையால் பின்னுபவர்களுக்கான யோசனைகள் உட்பட !

ஸ்னோஃப்ளேக் புத்தகத்தைத் தேர்ந்தெடுங்கள்

உங்கள் துணிகளுக்கும் சரி, உங்கள் குடும்பத்தினருடையதற்கும் சரி புதுப் புதுக் கருத்தில் அழகிய டிசைன்கள். கூடவே, நீங்கள் 'டாய்லீஸ்,' 'லன்சியன் செட்,' 'செவால் செட்,' 'ட்ரேக்ளாத்' மற்றும் பலவற்றைப் பின்ன உதவும் எளிய யோசனைகள். உங்களருகிலுள்ள ⚓ ஆங்கர் கடையிலே இப்புத்தகத்தைக் கேட்டுப் பெறுங்கள்; அல்லது எங்களுடைய முழு காட்லாக்கைப் பெற இக்கூப்பனை அனுப்புங்கள்.

கோட்ஸ்

நூல் தயாரிப்பாளர்கள்.

தயவு செய்து உங்கள் இலவசக் காட்லாக்கை எனக்கு அனுப்பவும். அதில் கண்டுள்ள எண்ணற்ற குறைந்த விலை வண்ணப் புத்தகங்களிலிருந்து வேண்டியதைத் தேர்ந்தெடுக்க அது எனக்கு உதவும்.

பெயர் ____________________

முகவரி ____________________

____

ஜே & பி கோட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மார்கெடிங் செக்ஷன், 81 பாக்டன் ரோடு, பம்பாய் 1.

Bensons/2629 Tam

எங்கள் ஊருக்கு அன்று முதல் அமைச்சர் வருவதாக இருந்தது. இருபத்தைந்து வீடுகளுக்கு மேற்படாத எங்கள் சிற்றூருக்கு அவர் வருகை தரப் போகிறார் என்பதில் எங்களுக்கெல்லாம் மட்டில்லா மகிழ்ச்சி.

பக்கத்து நகரில் ஒரு கலை விழாவில் மாலை ஆறு மணி முதல் எட்டு மணி வரை அவர் கலந்து கொள்கிறார். திரும்பும் வழியில் ஓர் அரை மணி நேரம் எங்கள் ஊரில் தங்கி, ஒரு பொதுக் கூட்டத்தில் பேசவும் அவர் இசைந்துள்ளார்.

எங்கள் ஊர்ப் பிரமுகர்கள் மணியம் பரமசிவம் பிள்ளை, நெல் மண்டி பெரமையா, கந்தரேசக் குருக்கள், நாட்டு வைத்தியர் தருமலிங்கம் ஆகிய நால்வர் மட்டுமே.

ஒரு நாள்..



அன்னம்

எல்லோருக்கும் அறிமுகமான மற்றோர் ஆத்மா — பிச்சைக்கார ஆண்டி.

ஆண்டியை ஊரில் உள்ள அத்தனை பேருக்கும் தெரியும். வாழ்வில் அவன் ஆண்டியாகத் தான் திரியப் போகிறான் என்று அறிந்து தானோ என்னவோ அந்தப் பெயரை அவனுக்குச் சூட்டியிருந்தார்கள். எங்கள் ஊரில் யாருக்கு யார் மேல் கோபம் அல்லது ஆத்திரம் வந்தாலும் அதைத் தாங்கிக்கொள்ளும் ஆத்மா இவன்தான். அவன் செய்த பாவங்களின் வினையோ, அவன் தலையில் பிரமன் எழுதிய எழுத்தோ தெரியாது. அவலட்சணமான உருவம், கால் கை வழங்காத நிலை. அவன் நடப்பதே பரிதாபம்.

ஒவ்வொரு நாள் காலையிலும் ஒவ்வொரு வீட்டிலும் அவன் குரல் கேட்கும். அநேகமாக எனக்குத் தெரிந்த எல்லோரும் ''இல்லை'' என்ற பதிலை இறக்கியும் கூட்டியும், ஆத்திரத்துடனும் அலட்சியத்துடனும் கூறி வந்தார்கள். இருப்பினும் கூட அவன் உயிர்க் கூட்டில் இத்தனை நாள் ஜீவன் ஒட்டிக் கொண்டிருந்தது என்னவோ பேராச்சரியம் தான்!

மணியம் பரமசிவம் பிள்ளைக்கு மேலிடத்திலிருந்து தாக்கீது வந்து விட்டது. கூட்டத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அவர்தான் முன்னின்று செய்ய வேண்டும், அவரது மேற்பார்வையில் நடக்க வேண்டும் என்று உத்தரவு பிறந்து விட்டது.

மணியம் ஓடியாடி வேலை செய்யவில்லை. உயர்ந்த சுருதியிலும் மெலிந்த குரலிலும் அடிக்கடி தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு உத்தரவுகளையும் யோசனைகளையும் தாராளமாக வழங்கி வந்தார்.

ஊர் மத்தியிலிருந்த மொட்டைத் திடலில் ஓரிரு இடங்களில் காணப்பட்ட பச்சைப் பசும் புல் அகற்றப்பட்டது. அது இன்னும் வெறுமையாகத் தெரிந்தது. ஆற்றுப் படுகையிலிருந்து பத்து வண்டி மணல் கொண்டு வந்து அடித்தார்கள்.

எங்கள் ஊர் மேளக்காரக் கந்தசாமிக்கு அழைப்புப் போயிற்று. என்னென்ன பாட்டு எப்பொழுது வாசிக்க வேண்டும் என்று அவருக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டது. ''வருஷத்தைப் பாரு அறுபத்தியாறு!... உருவத்தைப் பாரு இருபத்தியாறு!'' என்ற மெட்டுகளெல்லாம் கட்டாயமாக வாசிக்கக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. உத்தரவு பிறப்பித்தவர்கள் மணியம் அவர்கள்தான். இருபத்தியாறுவது வருஷத்து உடையிலும் தம் சிகையிலும் அடங்காத பற்றுக் கொண்ட பெரிய மனிதர் அவர்.

தெருவிலிருந்து மேடை வரைக்கும் பந்தல் போட்டார்கள். குலை தள்ளியிருந்த வாழை மரங்கள் வெட்டப்பட்டு ஒவ்வொரு பந்தல் காலிலும் கட்டப்பட்டன. மாவிலைத் தோரணம் மட்டுமல்லாமல், காகிதத் தோரணங்கள் பலப் பல வண்ணங்களிலும் உருவங்களிலும் பந்தலை அலங்கரித்தன. அழகழகாக எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய வரவேற்பு வளைவுகள் ஊரின் கோடியிலிருந்து மைதானம் வரை எழும்பின.

நகரிலிருந்து மின்சாரக் கம்பெனி ஆட்கள் வந்தார்கள். பெரிதும் சிறிதுமாகப் பல விளக்குகள் போடப்பட்டன. குழல் விளக்குகள் பல பொருத்தப்பட்டன. தேசியக் கொடியும் கட்சிக் கொடியும் எங்கும் பறந்து கொண்டிருந்தன.

எல்லா ஏற்பாடுகளும் முடிந்தபோது பகல் மணி நான்கு. இரவு எட்டரை மணிக்கு முதல்வர் வந்துவிடுவார்.

மணியக்காரர் பூமாலை போட வேண்டியது. நாட்டு வைத்தியர் பூச்செண்டு கொடுக்க வேண்டியது. குருக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டியது. கடவுள் வணக்கம் மட்டும் அவர் கட்டாயம் பாடக் கூடாது. அவர் குரலில் அதற்கேற்ற இனிமை இல்லை. பாக்கியத்தம்மாள் வீட்டுப் பெண் பட்டணத்தில் பாட்டுப் படித்து வந்திருந்தது. அந்தப் பெண்ணைக் கூப்பிட்டுப் பாடச்

சொல்லிக் கேட்டார்கள். ''பத்து மாதம் சுமக்கவில்லை, பத்தியமும் இருக்கவில்லை...'' என்று கணீரென்று எடுத்தாள் அந்தப் பெண். மணியம் காதுகளை மூடிக் கொண்டார். ''ஏனம்மா கடவுள்பேரில் ஏதாவது பாட்டுத் தெரியாதா?'' என்று கேட்டார் குருக்கள். நல்ல வேளையாக அந்தப் பெண்ணுக்கு 'ஏழுமலையாண்டவனே, வெங்கடேசா' என்ற பாட்டுத் தெரிந்திருந்தது. அந்தப் பாட்டின் பல்லவியை மட்டும் பாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மாலை ஐந்து மணிக்கு எல்லோரும் மணியக்காரர் வீட்டுத் திண்ணையில் குழுமியிருந்தோம்.

'சரக், சரக்' எனக் காலைத் தேய்க்கும் சத்தமும், 'டொக், டொக்' என்று கழியை வைக்கும் ஒலியும் கேட்டன. ஆமாம்! பிச்சைக்கார ஆண்டிதான் வந்து கொண்டிருந்தான்.

''ஐயா, தருமம்!'' என்றான் அவன்.

மணியக்காரர் ஏதோ ஹாஸ்யத்தைக் கேட்டவர் போல் இடிஇடி என்று சிரித்தார்.

''எதற்குச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் குருக்கள்.

''நம்ம ஊர்ப் பிரமுகர் இவன் ஒருத்தன் இருப்பதை நாம் மறந்து விட்டோமே என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது'' என்றார் மணியக்காரர்.

பெரமையாவும் நாட்டு வைத்தியரும் கூடச் சேர்ந்து சிரித்தார்கள். அங்கு கூடியிருந்தவர்களில் தலையாரி முதல் ஐந்து வயதுச் சிறுவன் வரை புரிந்தும் புரியாமலும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டார்கள்.

ஆண்டிக்கு இந்தப் பெரும் சிரிப்பின் காரணம் புரியவில்லை. கருமமே கண்ணாக ''ஐயா! தருமம்!'' என்றான் மீண்டும்.

மணியத்தின் முகத்தில் கடுமை பிறந்தது. ''டேய், ஆண்டி!'' என அதட்டினார் அவர்.

''என்னங்க ஐயா!'' என்றான் ஆண்டி பணிவுடன்.

''தெனம் போல இல்லேடா இன்னிக்கு! இன்னிக்கு நம்ம முதல் மந்திரி இந்த ஊருக்கு வரப் போகிறார் தெரியுதாடா!'' என்று கேட்டார் குருக்கள்.

''முதல் மந்திரின்னு அவன் என்னத்தைக் கண்டான்?... பெரிய மனுசங்க வராங்கன்னு சொல்லுங்க'' என்றார் வைத்தியர்.

''ஆமாண்டா, பெரிய பெரிய மனிதர்கள் எல்லாம் வராங்க. இந்த ஊரைப் பத்தி ரொம்பப் பெருமையா நெனெச்சுக்கிட்டு வராங்க... நீ அவுங்க முன்னாலே உன் முகத்தையும் கப்பரையையும் காட்டிக்கொண்டு வந்து நிக்கக் கூடாது!... தெரிந்ததாடா?'' என்றார் மணியம்.

ஆண்டியின் முகம் தொங்கிப் போயிற்று. சில நாட்களுக்கு முன்பு இப்படித்தான் பந்தல் போட்டுக் கூட்டம் நடத்தினார்கள். சின்னக் குழந்தைகளுக்கெல்லாம் மிட்டாய் கொடுத்தார்கள். அவனுக்கும் கொஞ்சம் கிடைத்தது. இப்போது வரக் கூடாது என்று விரட்டுகிறார்களே!

மணியம் மீண்டும் அதட்டினார். ''எங்கேயாவது தலையை நீட்டினால், தொலைந்தாய். என் கைத்தடியாலேயே நானே ரெண்டு போடுவேன்... உஷாரா இருந்துக்கோ'' என்று தடியை உயர்த்திக் காட்டினார்.

''ஆமாம், சொல்லி வைக்க வேண்டியதுதான். இல்லாமல் போனால் இவன் நேரே 'சீப் மினிஸ்ட'ரிடம் போய், 'ஐயா தருமம்' என்று நின்றாலும் நிற்பான்!'' என்றார் பெரமையா.

மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள்.





"குமார்! மன்னித்து விடுங்கள்! நான் இப்போது சொல்லப் போகிற விஷயத்தைக் கேட்டு அதிர்ச்சி அடையாதீர்கள். விதியை வெல்ல முடியுமா? தெய்வ சோதனை இது என்று நம்புங்கள்."

"இதயம் நின்றுவிடும் போலிருக்கிறது. சொல்வதைச் சீக்கிரம் சொல்லு!"

"நம் திருமணத்துக்கு அப்பா சம்மதம் தெரிவித்து விட்டார்."

"என்னடா தெரிந்ததா?" என்று கேட்டார் மணியம் இறுதியாக.

"சரிங்க, ஐயா!" என்றான் ஆண்டி.

"ஆற்றங்கரை மண்டபத்திலே போய்ப் படுத்துக்க... நாளைக் காலை வரையில் தலையைக் காட்டக் கூடாது!" என்று எச்சரித்தார் பெரமையா.

ஆண்டி தலையை அசைத்தான். ஆனால் இடத்தை விட்டு மட்டும் நகரவில்லை.

"என்டா! இன்னும் நின்னுக்கிட்டிருந்தால் எப்படி?" என்று கேட்டார் குருக்கள்.

"ஐயா, தருமம்!" என்றான் அவன் அவரைப் பார்த்துக் கையை நீட்டியபடி.

"போடா, போ! வேறே வேலை இல்லே உனக்கு!" என்று அலுத்துக் கொண்டார் அவர்.

ஆண்டி குழுமியிருந்த எல்லோரிடமும் தன் குவளையை நீட்டினான். "சில்லறை இல்லே" என்றார் ஒருவர். "நோட்டாக இருக்கிறது!" என்றார் இன்னொருவர். "பிச்சைக்காரர்களை நாட்டை விட்டு விரட்டினால்தான் நாடே உருப்படும்" என்ற யோசனை மூன்றாமவருக்கு உதித்தது. "இவர்கள் தொல்லையிலிருந்து நமக்கு என்றைக்கு விடுதலையோ அன்றைக்குத்தான் நிஜமா நமக்குச் சுதந்திரம் வந்தமாதிரி!" என்று ஒத்துப் பாடினார் நான்காமவர். "பஸ்ஸிலே, ரயிலிலே... கோவில்லே... குளக்கரையிலே... எங்கே பாருங்க... இவர்கள்தான்...." என்று அலுத்துக்கொண்டார் இன்னுமொருத்தர்.

"டொக், டொக்... "சரக் சரக்" — கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மறைந்தது.

பக்கத்து நகருக்கு முதல் மந்திரி வந்து விட்டார். சரியாக அங்கிருந்து எட்டேகாலுக்குப் புறப்பட்டு எட்டரை மணிக்கு எங்கள் ஊருக்கு வந்துவிடுவார். பந்தலில் கூட்டம் கூடத் தொடங்கியது: பந்தலின் மின்விளக்குகள் எரியத் தொடங்கின. ஒலிபெருக்கியிலிருந்து தேய்ந்துபோன இசைத்தட்டுகள் முழங்கின. மாலையும் பூச்செண்டும் அடங்கிய கூடை மேடைக்கருகே தயாராகக் கொண்டு வைக்கப்பட்டது.

மேடைக்கு மேல் — முதல்வர் ஆசனத்துக்கு நேர் மேலே போடப்பட்டிருந்த விளக்கு மட்டும் எரியவில்லை. மின்சாரக் கம்பெனிக்காரர் தமக்குத் தெரிந்த மட்டும் ஏதேதோ செய்து பார்த்தார். விளக்கு எரியவில்லை. பல்பு பொருத்தும் ஹோல்டரில் ஏதோ கோளாறு. சிறிய இடைவெளி இருந்ததால் பல்புக்குள் மின்சாரம் பாயவில்லை என்ற முடிவுக்கு வந்தார் அவர். இந்த "இடைவெளியில் ஒரு செப்பு நாணயம் — ஒரு நயா பைசாவை வைத்தால் போதுமானது. விளக்கு எரியும்" என்றார்.

"யாரிடமாவது பைசா — பழைய வட்டக் காசு இருக்குமா?" என்று கேட்டார்.

மணியக்காரர் தம் மணிபர்ஸைத் திறந்து பார்த்தார். நூறு ரூபாய் நோட்டை மடக்கி வைத்தால் விளக்கு எரியும் என்று சொன்னால் அவர் கொடுக்கத் தயார். ஆனால் ஒரு பழைய நயா பைசா அவரிடம் இல்லை.

அங்கு இருந்தவர்கள் யாரிடமுமே செப்பு நயா பைசா நாணயம் இல்லை. இரண்டு பைசாக்கள் இருந்தன. மூன்று பைசாக்கள் பல இருந்தன. கால் ரூபாய்கள், அரை ரூபாய்கள் ஏராளம்; ஆனால் அந்த ஒரு நயா பைசா — அதுமட்டும் இல்லை.

குருக்கள் கோவிலுக்கு ஓடினார். தரும கர்த்தாவும் மணியமும் முன் நிற்க உண்டியலைத் திறந்தார்கள். ஊஹூம்! நயா பைசா நாணயம் ஒன்றுகூட அதில் இல்லை.

"ஆண்டியிடம் இருக்கும். கேட்டால் என்ன?" என்று யோசனை சொன்னார் பெரமையா.

ஒருவரல்ல, இருவரல்ல. அறுவர் ஆண்டியைத் தேடி ஓடினார்கள். பாழும் மண்டபத்தில் அவனைக் காணோம். வாய்க்கால் பக்கத்து மேட்டடியில் படுத்திருப்பான் என்று போய்ப் பார்த்தார்கள். அங்கும் அவன் இல்லை. கோயில் குளத்தருகே இருப்பான் என்று நினைத்து அங்கும் போய்ப் பார்த்தார்கள். ஆண்டி இல்லவே இல்லை.

இத்தனை ஆண்டுகளாகப் பிறக்காத ஒரு வெறுப்பு — ஒரு துவேஷம் — ஆண்டிக்கு எங்கள் ஊர்மேல் வந்திருந்தது. தன் உடைமைகள் அத்தனையையும் சுருட்டிக் கொண்டு அவன் பக்கத்து நகரை நோக்கித் தெரு ஓரமாக நடக்கலானான்.

ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியபடி பல கார்கள் அவனைக் கடந்து போயின. அவன் எதையும் லட்சியம் செய்யாமல் நடந்து போனான்.

ஊர்க் கோடியில் இருந்த டீக்கடை நாயர் பழைய ரொட்டித் துண்டை வைத்துக் கொண்டு ஆண்டியை அழைத்தான். ஆண்டி லட்சியம் செய்யவில்லை. அவன் நடந்து கொண்டிருந்தான்.

பாதையின் குறுக்கே ரயில்வே தண்டவாளம் சென்றது. ஏதோ ரயில் வரப்

போகிறது என்று கதவை அடைத்திருந்தார்கள். அங்குகூட அவன் தாமதிக்கவில்லை. கம்பிகளில் இருந்த இடைவெளி மூலம் நுழைந்து மறுபுறம் வந்து விட்டான்.

ஊரில் தனக்கு ஏற்பட்ட இமேஜ் கிராக்கி பற்றி அறியாமல் அவன் போய்க் கொண்டிருந்தான்.

ரயில்வே கேட்டருகே ஒரு வாய்க்கால். அதன் மதகின் மேல் சற்று இளைப்பாறச் சாய்ந்தபடி நின்றான் ஆண்டி.

ஒன்றன்பின் ஒன்றாக நான்கைந்து மோட்டார் கார்கள் வந்தன. ரயில் கதவு சாத்தப்பட்டிருந்தது கண்டு அவை நின்றன. வண்டியில் உள்ளவர்கள் இறங்கி நின்றார்கள்.

முதல் வண்டியின் டிரைவர் காரின் இஞ்சினைத் திறந்தான். ரேடியேட்டரில் தண்ணீர் இல்லை. பக்கத்துக் கால்வாயிலிருந்து மொண்டு ஊற்றலாம். எதை வைத்து மொள்ளுவது?

ஆண்டியின் கையிலிருந்த குவளைதான் அவன் கண்ணில் பட்டது. அதை எடுக்க அவன் முனைந்த போது. "அது என்னுது.... அது என்னுது!" என்று அலறினான் ஆண்டி.

காரினருகே கூட நின்றவர்களில் நடுநாயகமானவர் அவன் பக்கம் திரும்பினார்.

"உன்னுடையதுதானப்பா! தண்ணீர் மொண்டு ஊற்றி விட்டுத் திருப்பித் தருவோம்!" என்றார் அவர்.

ஆண்டி அவரைப் பார்த்தான். அவருடைய அடக்கமான — அன்பான குரல் — அவனுக்கு ஆறுதலாக இருந்தது.

காரின் பின் ஆசனத்தில் மலையாகக் கிடந்த மாலைகளையும் பழங்களையும் கண்டு அவன் திகைத்துப் போய் நின்றான்.

தண்ணீரை மொண்டு ஊற்றிய டிரைவர் குவளையைத் திருப்பிக் கொடுக்க வந்தான். அந்தப் பெரிய மனிதர் அதை வாங்கித் தம் காரிலிருந்து இரண்டு ஆப்பிள்களையும் நான்கு ஆரஞ்சுப் பழங்களையும் போட்டுக் கொடுத்தார்.

"நீங்கதான் பட்டணத்திலேயிருந்து வர ஐயாவா?" என்று கேட்டான் ஆண்டி.

"ஆமாம்" என்றார் அவர்.

"பக்கத்து ஊரிலே பேசப் போறதும் நீங்கதானா?" என்றான் அவன்.

"ஆமாம்!" என்றார் அவர்.

"அப்படின்னா பெரிய மந்திரிங்கறதும்.."

"நான்தான்!" என்றார் முதல்வர். கூடியிருந்த அனைவரும் — போலீஸ் அதிகாரிகள் உள்பட — இந்தச் சம்பாஷணையை ரசித்தனர்.

தன் மடியில் மடித்து வைத்திருந்த ஒற்றை ரூபாய் நோட்டை நோய் பிடித்த தன் விரல்களினால் மிகச் சிரமப்பட்டு எடுத்தான் ஆண்டி. அதை முதல்வரிடம் நீட்டினான்.

"என்னைப் போல ஏழைங்களுக்குப் பணம் சேர்க்கறதா பெட்டிக் கடையிலே பேப்பர் படிக்கச் சொன்னாங்க..... என்னுலே ஆனதுங்க...." என்று நீட்டினான் ஆண்டி.

முதல்வரின் அகம் குழைந்தது. முகம் மலர்ந்தது. உணர்ச்சிப் பெருக்குடன் அதைக் கரங்களில் வாங்கிக் கொண்டு தெய்வப் பிரசாதம் போல் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

முதல்வரின் காரை ரயில்வே கேட்டருகே பார்த்த செய்தி கேட்டு ஊர்ப் பிரமுகர்கள் ஓடோடி வந்தார்கள். இரண்டு பெட்ரோமாக்ஸ் லைட்டுடனும், மாலையும் செண்டுமாக அவர்கள் ஓடி வந்தார்கள்.

மணியக்காரர் முதல்வரின் கழுத்தில் மாலை போட முன் வந்தார். முதல்வர் அதைத் தடுத்துத் தம் கையால் வாங்கி ஆண்டியின் கழுத்தில் தாமே சூட்டினார்.

"இந்த மாலைக்கு உரியவர்கள் யாராவது இருக்க முடியுமானால் அது இந்தச் சகோதரன் தான்!" என்றார் முதல்வர் உணர்ச்சிப் பெருக்குடன்.

மற்றவர்கள் வாயடைத்து நிற்க அந்த 'இமேஜ் பிரமுகன்' ஆண்டி கூனிக் குறுகிப் போய் நின்றான்.

முதல்வரின் கார் எங்கள் ஊரில் நிற்கவில்லை; நேரமாகி விட்டது என்று நேராகப் போய் விட்டார்கள். அந்த 'ஒரு நாள்' எங்கள் ஊரில் உள்ள அத்தனை பேர் நெஞ்சிலும் நிச்சயம் என்றும் பசுமையாக இருக்கும்!



'அஞ்சி அஞ்சிச் சாவார்...!'



பலவானுக்கு எது பாரம்? துணிவுள்ளவனுக்கு எது தூரம்? கல்விமானுக்கு எது வேற்றூர்? இதமாகப் பேசுவோனுக்கு எவன் அந்நியன்?

மற்றவர்களுக்கு அடிமைப்பட்டிருப்பவர்களும் உயிர் வாழ்கிறவர்களே என்றால், அப்புறம் செத்தவர்கள்தான் யார்?

தவறு செய்து விடுவோமோ என்று அஞ்சிச் செயல் திரும்புபவன் கோழை. சகோதரா! அஜீரணத்துக்கு அஞ்சி ஆகாரத்தைத் துறந்தவர்கள் உண்டா?

எவனால் பலர் வாழ்கிறார்களோ, அவன்தான் உண்மையில் வாழ்பவன்.

சமஸ்கிருதப் பழமொழிகளைத் தொகுத்து அளித்தவர்: அ. ராதா

தூய்மையும் தோற்றுக் கொள்ளும்

ரா. கணபதி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நீருவும் நீமாவும் முடிவு செய்தபடியே கபீருக்குக் கல்யாணம் ஆயிற்று.

ஏதோ இதுவும் தம் கர்மா என்ற மனப் போக்கிலேயே ஜிஜ்ஜா பீபியை மணந்தார் கபீர். மற்றபடி ஜிஜ்ஜாவுடன் உறவு வைத்துக்கொள்ளவில்லை. சீரத் துணியில் கறை படாமல் வைத்துக் கொண்டவர் அல்லவா?

அவரைப் பொறுத்த மட்டில் அவருக்கு ஏற்கனவே கல்யாணமாகி விட்டது. அந்தக் கல்யாணத்தில் அவர் மணமகன் அல்ல, மணமகள்! நித்திய கல்யாணன் அவரை — அவளை — மணந்திருந்தான்!

அவனை நோக்கிப் பாடிப் பாடிப்' பரவச முறுவார் கபீர். அவனை 'நோக்கி' என்றால், எப்படித் தெரியுமா நோக்கினார்? கண் மூடிக் கொண்டு!

வெளிப் பார்வை மறந்த அகப் பார்வையின் ஆனந்தவெளியில் ஆன்ம நாயகனுடன் களித்துக் கும்மாளமிட்டார்! கண்ணை மணவறையாக்கி, கண்மணியைக் கட்டிலாக்கி, இமையைத் திரை போட்டு, மணாளனைக் கூப்பிட்டார். "கண்களுக்கு உள்ளே வந்துவிடு. கண்களை மூடி உன்னை அப்படியே பொத்தி வைத்துக் கொண்டு விடுகிறேன். அதன் பின் நான் பிறர் யாரையும் பார்க்கக் கண்ணைத் திறக்க வேண்டியதே யில்லை. நீயும் பிறர் யாரையும் பார்க்க விட மாட்டேன்" என்றெல்லாம் பிரேமையில் அவனைச் கவிகாரம் செய்து கொண்டு பாடினார்.

பிறரைப்பார்க்காமலும், பிறர்பார்வையில் அகப்படாமலும் கோஷாவாக வாழ விரும்பிய ஜிஜ்ஜா தனியாய்த் தவிக்க நேர்ந்தது.

அவளது மாமியாரும் மாமனாரும் எண்ணியது பலிக்கவில்லை. திருமணம் கபீரின் மனத்தை அணுவளவும் மாற்றவில்லை. அவர்களும் போய்ச் சேர்ந்தார்கள் காலகதியில். ஜிஜ்ஜாதான் கபீரின் 'பைத்திய'த்துக்கு ஈடு கொடுக்க நேர்ந்தது.

பரம உத்தமி அவள். கபீருக்குப் பணிவிடை செய்வதைத் தன் பாக்கியம் எனக் கருதினாள். ஆனால் ஏழ்மையில் பக்கிர்களுக்கு விருந்திடுவதுதான் அவளுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அவள் 'கோஷா' என்று முக்காடு போர்த்திக் கொண்டால் அதுகூடக் கபீருக்கு அதிகப்படியான உடையாகத் தோன்றியது. அதையும் எடுத்துத் தானம் செய்து விடுவார்.

முக்காடு போடாமல் வேலைக்குச் செல்லும் அந்த முஸ்லிம் பெண்மணியின் முகாரவிந்தம் சௌகாரின் கண்ணில் பட்டது. படுபாதகமான இச்சை பிறந்தது அந்த அரக்கனுக்கு.

"இந்தப் பைத்தியத்திடம் கிடந்து ஏன் அவதிப்படுகிறாய்? உடல் எடுத்த பயனையே பெறாது போனாயே?" என்று பல்லைக் காட்டினான் ஜிஜ்ஜாவிடம்.

கணவனின் கடிமலர்ப் பாதங்களை நினைந்து முத்து முத்தாகக் கண்ணீரை உகுத்துக் கொண்டு விடு வந்தாள் ஜிஜ்ஜா.

விஷயத்தைக் கேள்வியுற்ற கபீரும் கலங்கினார். "உனக்காக நான் கவலைப்படவில்லை. உன் தூய்மைக்கு ஒருபோதும் களங்கம் வராது. சௌகாருக்காகத்தான் கவலைப்படுகிறேன். பிறன் மனைவியை விரும்பினால் அது அழிவுக்குப் பூர்வாங்கம். ராவணன் கதி என்ன ஆயிற்று?

மீண்டும் வானில் மேவித்(து) அதனை
மெள்ளவே பதிப்பாரோ?
இன்னொருத்தன் சதி மீண்டும் வானென
உள்ளி உணராரோ?

"நீங்கள் பாடுகிறீர்கள். எனக்குப் பீதியாக இருக்கிறது" என்று நடுங்கினாள் ஜிஜ்ஜா. "சௌகாரின் கண்ணில் பட்டாகி விட்டது. இனி விட்டு வைக்க மாட்டான்" என்று கூறிக் கோவென அழுது விட்டாள்.

கபீர் சித்தாக்கிராந்தரானார். தீர்க்கமாக யோசித்ததில் சித்தம் தெளிந்தது. "முறைப்படி குருவின் உபதேசம் பெறாததாலேயே என்னுடைய இறையுணர்வு இல்லறத்துக்கு நல்லது செய்யவில்லை. குரு மகராஜ் ராமானந்தரை அடைந்து அவரிடமிருந்து ஸ்ரீ ராம நாம உபதேசம் பெறுவேன். பிறகு பார், நாம் எவ்வளவு விச்ராந்தியாக வாழ்கிறோம் என்று" என்றார்.

"நான் கேட்பதைத் தவறாக எண்ணாதீர்கள். நாமோ இஸ்லாமியர். தாங்கள் ஏன் ராம் ராம் என்கிறீர்கள்? இது சரிதானா?" என்று பணிவுடன் வினவினாள் ஜிஜ்ஜா.

"தாயே! ராமும் ரஹீமும் ஒருவரே. கரீமும் கேசவனும் ஒருவரே. ஏனோ என் மனம் ராமன் என்ற பெயரிலேயே ஒட்டிக் கொண்டு விட்டது. நான் 'எந்த மதமும் வேண்டாம்; எந்தக் குருவும் வேண்டாம்; கஸ்தூரி மான் போல் நம்முள்ளேயே உருவும் பெயருமற்ற நித்தியப் பொருளின் சுகந்தம் இருக்க வெளி விஷயங்களான மதத்தையும், சடங்கையும், வெளி மனிதரான குருவையும் நாட வேண்டாம்' என்றுதான் ஓயாமல் பாடி வருகிறேன். ஆனால் அந்த வெளி மனிதரான குருவே உள் மனிதராகவும் கிடைக்கிறார் என்று இப்போது தெரிகிறது. உருவும் பெயருமற்ற பொருள் 'ராம' என்கிற பெயரில் உறைந்திருப்பதும் தெரிகிறது. எனவே எல்லா மதத்துக்கும் பொதுவாகப் பாடுகிறேனாயினும், என்னைப் பொறுத்தமட்டில், ராமனிடமும் குரு மகாராஜ் ராமானந்தரிடமும் என்னையறியாத ஈடுபாடு எப்படியோ வலுத்து வருகிறது" என்றார் கபீர்.

"ஆனால்.... அவர் உங்களைச் சீடனாக ஏற்றுக் கொள்வாரா? நாம் ஹிந்துக்களை காபிர் என்பது போல்தானே, ஹிந்துக்களும் நம்மை மிலேச்சர்களாகக் கருதுகின்றனர்? ராமானந்

தர் இந்நிலைக்கு அப்பாற்பட்டிருப்பினும், அவரது சீடர்களும் அடியார்களும் உங்களை அவர் ஏற்க அனுமதிப்பரா?'' என்று மெய்யான விசாரத்துடன் வினவினாள் ஜிஜ்ஜா.

கபீர் மீண்டும் யோசித்தார். சட்டென்று கவலை மறந்தது. ஏதோ பெரிய வேடிக்கை கண்டது போல் அவர் முகம் சிரிப்பு மயமாயிற்று.

ஆண்டவன் வாசலில் கிடப்பாய்
தாண்டி வாரா(து) அவன் மிதிப்பான்
மிதிப்பினை விதியாய் மதிப்பாய்
மதிமிகு மந்திரம் பெறுவாய்

என்று பாடிக் கொண்டே புறப்பட்டுவிட்டார் நள்ளிரவில்.

அந்த விநோதக் கணவனைப் பார்த்து வியந்து அமர்ந்திருந்தாள் ஜிஜ்ஜா.

ஃ ஃ ஃ

சுவாமி ராமாநந்தர் தமது வழக்கப்படியே வைகறைக்கு ஒரு யாமம் முன்னதாகக் கங்கைக் கரையில் ஏகாந்தத் தியானம் புரிவதற்காக ஆசிரமத்திலிருந்து புறப்பட்டார் தனியாக. வாசற்படியில் எதையோ மிதித்து விட்டதை உணர்ந்து துணுக்குற்றார்.

'தந்திரம் பலித்தது; பாத தீட்சை பெற்றோம். இனி உபதேசமும் பெற்றுவிட வேண்டியதுதான்' என்ற ஆர்வத்துடன் எழுந்திருந்தார், நள்ளிரவிலிருந்து அங்கு வந்து கிடந்த கபீர்.

இருளிலும் அது ஒரு மனித உருவம் என்று தெரிந்து விட்டது ராமாநந்தருக்கு. மனிதனை மிதித்தோமே என்ற பச்சாத்தாபத்தில் வாய் விட்டு ''ராம ராம'' என்று கூறினார்.

குருநாதரின் வாய்மொழியாக அந்த அமுத நாமத்தை மாந்துவதற்குத்தான் கபீர் தமது செவிகளைக் கிண்ணமாகக் குவித்து வந்திருக்கிறாரே! எண்ணிறந்த ராம ஜபம் புரிந்த மகானின் நாவிலிருந்து அடர்த்தியுடன், செறிவுடன் பிறந்த திவ்விய நாமத்தைச் செவியில் ஏந்தி இதயத்துக்குப் பாய்ச்சிக் கொண்டார்.

ஆனால் அது மட்டும் அவருக்குப் போதவில்லை: அவரிடமிருந்து தமக்குள் வந்த திருநாமம், மீண்டும் தம்மிடமிருந்து அவரை அடைந்தாலே வட்டம் நிறைவு பெறும் என்று கருதினார். மந்திரோபதேசம் செய்த குரு, சீடன் அம்மந்திரத்தைத் திரும்பச் சொல்லிக் கேட்பதே அல்லவா மரபு?

கபீர் ராமாநந்தரிடம் கேட்டார்: ''சுவாமி! நான்தான் பெரிய அபசாரம் செய்துவிட்டேன். தாங்கள் எழுந்திருந்தவுடனேயே தவறு செய்ததாக வருத்தப்படுவதற்கு நானே காரணமாகி விட்டேன். வாயிற் படியில் படுத்தது என் தப்பு. அதனால்தானே தாங்கள் என்னை மிதிக்க நேர்ந்தது? என் அபசாரத்துக்கு என்ன பரிகாரம்?''

''பரிகாரமா? உலகில் எந்தப் பாபத்துக்கும் ஒரே பரிகாரம்தான். ஸ்ரீ ராம நாமம் தான் அது. அதைச் சொல்லு.''

கபீர் விட்டபாடில்லை. ''என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?''

''ராம ராம.''

''ராம ராம.''

அவர் சொல்லி இவர் திரும்பச் சொல்லியாகி விட்டது.

கபீரின் உவகைக்கு எல்லையே இல்லை.

குருவை ஏமாற்றியது பாவமோ என்று சிறிதே உள் நெஞ்சு குறுகுறுத்தது. ஆனால் அந்தக் குருவேதான் எந்தப் பாபத்துக்கும் ராம நாமம் பரிகாரம் என்று உபதேசித்து விட்டாரே!

''ராம ராம ராம ராம'' என்று ராம மயமாக வீடு திரும்பினார் கபீர்.

ஃ ஃ ஃ

குரு முகமாக உபதேசம் பெற்றவுடன் குடும்பப் பிரச்னை யெல்லாம் பறந்து போகும் என்றார் கபீர். ஆனால் குரு உருவில் வந்த பின்பே ராமன் அவருக்கு மிகப் பெரிய சோதனையை வைத்து விட்டான்!

'குருவும் வேண்டாம், பீரும் வேண்டாம், ஜபமாலையும் வேண்டாம், தஸ்பீஹும் வேண்டாம்' என்று பாடி வந்த கபீர், தம்மை ராமாநந்த சீடராகச் சொல்லிக் கொண்டு, துளசி மாலை அணிந்து, நாம சங்கீர்த்தனம் செய்யத் தொடங்கியதிலிருந்து, ஹிந்து சமய பாகவதர்கள் அவரிடம் திரண்டுவரலாயினர்.

அவர்களுக்கெல்லாம் 'அன்பு ஒன்றே அவர் தந்த உபதேசம். 'வேண்டாம் ஆராய்ச்சி. ஆண்டவனிடம் பிரேமை வையுங்கள்: அது ஒன்றே வழி'' என்றார். மூளைக்கு இறைவனிடம் வேலையில்லை என்பதற்குக் கவிதை உருக் தந்து, ''அவன் இருப்பிடத்தின் கூரை மிகத் தாழ்ந்தது; தலையை வெட்டிக் கொண்டால்தான் அங்கு நிற்க முடியும்'' என்றார். ''இந்த மூளை ஓட்டைப் பார்த்தீர்களா! தலைகீழாகப் பிடித்த கிண்ணம் போல் இருக்கிறது. இதில் எப்படி பக்தி ரசத்தை ஏந்தி வைக்க முடியும்?''

சித்தாந்த வாதமே அவருக்குப் பிடிக்காது. இதயக் கண்ணைச் சித்தாந்தப் படுதாவால் மறைத்துக் கொள்ளவில்லை. இதனால்தான் ஸ்ரீ ராமாநுஜ மதத்தைப் பின்பற்றிய ராமாநந்தரின் சீடரான போதிலும், அவர் தெள்ளத் தெளிய அத்வைதமாகிவிடும் அன்பைப் பாடினார்.

அன்புக்கு வெறி பிடித்த இந்த 'மத்த மௌலா'வைத் தேடிப் பாகவதர்கள் வருகையில் அங்கே சௌகாரும் ஆசை வெறி பிடித்தலைந்தான் ஜிஜ்ஜிக்காக.

ஒரு நாள் நூறு சாதுக்கள் வந்து விட்டனர், கபீருடனேயே அன்று முழுதும் இருந்து பகவந் நாம பஜனை புரிய. ''பஜனையும் இங்குதான்; போஜனமும் இங்குதான்'' என்று அவர்கள் கூறிவிட்டனர்.

அந்த அதிதிகளுக்கு அன்னம் படைக்க வழி என்ன?

ஒரே ஒரு வழிதான் இருந்தது.

மிகவும் பயங்கரமான வழி.

அன்றொரு நாள் பயந்து நடுங்கிய அதே ஜிஜ்ஜா இன்று கம்பீரமாக அந்த வழியை எடுத்துச் சொன்னாள்:

''நான் இன்று சௌகாரின் இச்சையைத் தீர்த்து வைப்பேன். அவர் எனக்குப் பொன்னும் பொருளும் தருவார். பாகவதோத்தமர்களுக்கு வயிறாரப் படைக்கலாம். பிறகு என்னை மாய்த்துக் கொள்வேன். நீங்கள்


முதலில்
அவளுக்கு ரக வாரியான பிஸ்கெட்டுகளை வாரி வழங்குகிறது பார்லே:
முதன் முதலாகப் பல வகை உன்னத உப்பு பிஸ்கெட்டுகளை தயாரித்தவர்கள்
பார்லே
பிஸ்கெட்
வாங்குக இன்றே, பார்லே நன்றே!
விரும்பியதைத் தேர்ந்தெடுக்கள்!
ஜெ:.ப்ஸ், ஓர்லே, ஸ்பின்-ஹெச்
சீஸ்லிங்ஸ்.
வேண்டும்—பார்லே தான்.
க்ருகோவையும், மொனேகோவையும்
க்ருகோ
மொனேகோ
ஓர்லே
ஸ்பின்-ஹெச்
ஜெ:.ப்ஸ்
சீஸ்லிங்ஸ்
everest/566a/PPtm

ராம்தீர்த் பிரஹமி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும், பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும், அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதி யான நித்திரையை அளிக்கிறது.

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR - BOMBAY-14

"YOGIC CLASSES"

எமது சென்னை ஆபீஸில் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன

மதராஸ் பிராஞ்சு: 25, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ் – 3

போன்: 34258

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக் கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக் கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூல காரணமான இந்தக் கிருமிகளை ஒழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடைய முடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடெர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப்பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர்தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

மூல நோயை

முற்றவிடாமல்

நம்பிக்கையான

ஹெடென்ஸா

உபயோகித்து

நிவாரணம்

அடையுங்கள்:

— ரண

சிகிச்சையையும்

தடுங்கள்

பாடுவீர்களே. திரியின் ஓரே இடத்தில் தீபக் கொழுந்து எரிந்தால் அவ்விடம் கரிந்து போகும். திரியின் கரிந்த பகுதியை வெட்டினால் தீபம் தொடர்ந்து எரியும் என்பீர்களே! நான் தீபம் ஏற்றுவதற்குத் திரியாக இருந்து, தீபக் கொழுந்துக்காகவே கரிந்து சாவேன். இல்லை, அது சாவு இல்லை; அமர நிலை'' என்றாள்.

அவளது அன்பின், தியாகத்தின் உறுதியின் நிலை கண்டு ஸ்தம்பித்து விட்டார் கபீர்.

தீபத்தின் திரியாக அவள் தன்னைச் சொல்லிக் கொண்டாள். கபீருக்கோ வேறொரு விதத்தில் அவள் தீபத்தின் தைலமாகத் தெரிந்தாள். கபீர் பரப்பும் கவிதை ஒளியை, தெய்வீக ஒளியை உலகம் புகழ்ந்தது. உண்மையில் கபீருடையதா அந்த ஒளி? பரமனது அருள் ஒளிதான் அது. அந்த ஒளியை ஏந்தி நின்ற திரிதான் அவர். ஆனால் திரி தீயில் எரிந்தே அல்லவா போகும்? எரியாமல் காப்பது என்னெய்தானே? ஜிந்ஜாவின் மகிமைதான் தைலமாக இருந்து அவரை எரியாமல் காத்தது. ஊரார் தீக்கொழுந்தைத் தாங்கும் திரியை மட்டும் பார்த்தனர். யார் பார்வைக்கும் படாமல் தைலமோ தன்னைத் தானே அணு அணுவாகப் பலி கொடுத்துக் கொண்டிருந்திருக்கிறது!

''என்ன, திக்பிரமித்து அமர்ந்திருக்கிறீர்கள்? வாருங்கள் என்னோடு'' என்று கட்டளை விட்டாள் ஜிந்ஜா — ஒருபோதும் ஓங்கிப் பேசியறியாத மங்கை நல்லாள்.

அவள் பின்னால் ஓடலானார் கபீர்.

சௌகாரின் வீட்டை அடைந்தனர்.

ஜிந்ஜாவைக் கண்டு மலர்ந்த சௌகாரின் கண்கள், தொடர்ந்து வரும் கபீரைக் கண்டு கூம்பின.

''சௌகார்ஜி! தங்களுக்கு என்னைத் தரவே அவர் வந்திருக்கிறார். ராமன் பேரில் இது சத்தியம். இந்த சத்தியப் பிரமாணத்தை நம்புவீராயின் ஓர் உதவி புரிய வேண்டும். வீட்டில் நூறு அதிதிகள் வந்துள்ளனர். அவர்களுக்கு உணவு படைக்க வேண்டும். அதற்கு வேண்டிய பொருட்கள், பரிசாரகருக்கு ஆன செலவு அனைத்தும் இப்போதே கொடுங்கள். நானும் போய் உடனிருந்து கடைசி முறையாக பாகவத கைங்கரியம் செய்கிறேன். பிறகு தப்பாமல் உம்மை வந்தடைவேன்'' என்றாள் ஜிந்ஜா.

சௌகார் பேரானந்தம் அடைந்தான்;



அவள் கேட்டவாறே பொன்னும் பொருளும் மற்ற வசதிகளும் செய்து கொடுத்தான்.

பாகவத ஸத்காரம் திருப்தியாக ஆயிற்று. அதைப் போன்ற விருந்து அவர்கள் ஒரு நாளும் உண்டதில்லை.

இரவு அடியார்கள் யாவரும் போயாகி விட்டது.

மழை கொட்டத் தொடங்கியது.

''போகட்டுமா, அல்லது நீங்களும் வருகிறீர்களா?'' என்றாள் ஜிந்ஜா.

''மழையான மழை பிடித்துக் கொண்டிருக்கிறதே'' என்றார் கபீர். அவரது நா வாய்க்குள் சுருட்டிக் கொண்டு விட்டது.

''அதனால்? சொன்ன வாக்கைக் காப்பாற்றத்தானே வேண்டும்? இன்று இப்பேர்ப்பட்ட விருந்தோம்பல் சௌகாரால்தானே நடந்தது? இப்போதும் அந்தச் சௌகாரே சாரட்டு அனுப்பி வைக்கலாம். ஆனால் ஊராருக்குத் தெரிய வேண்டாம் என்று பார்க்கிறார் போலிருக்கிறது. சரி, நான் வருகிறேன். நீங்கள் என்னவோ மயங்கி, மயங்கி, தயங்கித் தயங்கி அவதிப்படுகிறீர்கள். உங்களை நான் எதிர்பார்த்துப் பயனில்லை....''

கொட்டுகிற மழையில் புறப்பட்டாள் ஜிந்ஜா.

''ஜிந்ஜா, ஜிந்ஜா'' என்று பின்தொடர்ந்தார் கபீர். ''மழையில் நனைந்து போகாதே. உனக்குச் சட்டென்று சைத்தியத்தில் ஜல தோஷம் வந்து விடுகிறது. மேலும் இந்த அழுக்கு ஜலத்தில் அளைந்து கொண்டு போனால் சேறும் சகதியுமாக அங்கு நிற்பாய். சௌகார் எனக்குத் தோஷமில்லாத, செல்லுகிற முழு முழு ரூபாயாகத்தானே தந்தார்? நானும் உன்னை நல்ல படியாகத்தான் அவருக்குத் தர வேண்டும். இந்தா, இந்த என் கம்பளியை நன்றாகப் போர்த்திக் கொண்டு என் தோள் மீது ஏறி உட்கார். உன்னை அலுங்காமல், நலுங்காமல் கொண்டு போய்ச் சௌகாரிடம் ஒப்புவிக்கிறேன்'' என்றார்.

நளாயினி தன் கணவனை வேசை வீட்டுக்குச் சுமந்து சென்றாள். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர் சிவனடியாராக வந்த சிவபெருமானுக்குத் தாரத்தைத் தாரை வார்த்துத் தந்தார். கபீர் வரலாறு இதற்கு உத்தர பாரதப் பதிப்புப் போல் இருக்கிறது.

கணவரது தோள் மீது பாதம் படாமல்

அமர்ந்து சென்ற ஜிஜ்ஜா திடுமெனச் சிரித்தாள்.

"என்ன ஜிஜ்ஜா?" என்றார் கபீர்.

"பிறன் மனையாளை அடைவது பொற் கத்தியைக் கழுத்தில் அழுத்திக் கொள்வது போல் என்று பாடுவீர்களே! இன்று பாகவத சேவை செய்கிற ஆசைக்காகத்தானே அந்தப் பாபம் சௌகாரைச் சேர்ந்தாலும் பாதகமில்லை என முடிவு செய்தீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒரு நாளும் இல்லை" என்று அலறி விட்டார், அவளைச் சுமந்த நிலையில் பேசவும் சிரமப்பட்ட கபீர்.

"இன்று அடியார்களுக்கு அன்னமிட்ட புண்ணியம் அனைத்தையும் எனக்கு அணுவும் சேராமல் சௌகாருக்கே தத்தம் செய்து விட்டேன். அவர் உன்னைத் தீண்டுகிற பாபமும், அதன் பின் நீ பிராணத் தியாகம் செய்யப் போவதால் ஏற்படும் ஸ்திரீ ஹத்தி தோஷமும் என்னையே சார வேண்டும் என ராமனிடம் ஆணையிட்டிருக்கிறேன்."

இடைமறித்தாள் ஜிஜ்ஜா. "தியாகத்தை எல்லாம் அப்படி நீங்களே ஏக போக்கியம் செய்து கொள்ள வேண்டாம். மரணம் அடைந்த பின்னும் மனத்தால் நான் உங்கள் சகதர்மிணிதான். எனக்குப் பங்கு விட்டு வையுங்கள்."

இதற்குள் சௌகாரின் இல்லம் வந்தது.

ரகசிய வழி மூலம் ஜிஜ்ஜாவை அவரது சயனக் கிருகத்துக்கு அழைத்துச் சென்றார் கபீர்.

அவர்களைக் கண்டவுடன்...

சௌகாரின் மனத்துக்குள் மழை பெய்தது.

சொன்ன சொல் தவறாமல் அவர்கள் வந்ததும், அந்தக் கணவன் தன் கம்பளியை அவளுக்குத் தந்து, மழையில் அவளைச் சுமந்து வெற்றுடம்புடன் வந்ததும் சௌகாரின் மோக மேகங்களைக் கரைத்து மழையாக்கத் தொடங்கின.

கபீர் மனைவியை இறக்கி விட்டு, சௌகாரை வணங்கிச் சொல்வார்:

"சௌகார்ஜி! தங்கள் புண்ணியத்தில் பாகவத ஆராதனம் குறைவில்லாமல் நடந்தது. முதலில் பிரசாதம் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கூறி பதாஸாப் பணியாரத்தைப் பணிவுடன் நீட்டினார்.

சௌகார் மனத்தில் மழை வலுத்தது.

கண்களிலிருந்து மழைக் கால்கள் இறங்கத் தொடங்கின.

அவருக்குள் பெய்த மழை அவரையே உருட்டிப் புரட்டித் தள்ளியது.

பெருமழையில் விழுந்த தருவென, கபீரின் காலடியில் விழுந்தார்.

"சௌகார்ஜி, எழுந்திருங்கள், எழுந்திருங்கள்!" என்று கபீர் எவ்வளவோ சொல்லியும் அவர் எழுந்திருக்கவில்லை.

தரையில் பதித்த முகத்தை எடுக்காமலே நிமிர்ப் பேசினார் சௌகார். "எழுந்திருந்தால் தங்கள் முகத்தை, தங்கள் தேவியாரின் திருமுகத்தை நான் பார்க்கும்படியாகும். பாவி நான் தங்களை எப்படிப் பார்ப்பேன்? என்னை வெட்கமும் அவமானமும் கொல்கின்றன. இந்தச் சண்டாளனின் வீட்டை மிதிக்கக் கூடாத தாங்கள் இருவரும் இங்கிருந்து அகன்ற பின்தான் நான் தலைதூக்குவேன்" என்றார்.

"சௌகார்ஜி, தவறு செய்த போதுதான் அவமானப்பட வேண்டும். அப்படி யாரும் படுவதில்லை. பட்டால் தவறே செய்ய மாட்டார்கள். தாங்கள் செய்ய இருந்த தவற்றை விட்ட பின் இப்போது ஏன் அவமானப்பட வேண்டும்? அதுவும் உங்கள் தவற்றுக்கு ஒத்துப் பாடி உடந்தையாக இருந்த எங்களிடம் என்ன வெட்கம்?" என்று இனிக்கக் கேட்டார் கபீர்.

சௌகார் மனத்தில் பெய்த மழையில் அழுக்கெல்லாம் கரைந்து பசுமையாக எழுந்திருந்தார்.

ஃ ஃ ஃ

மழை நின்று வானம் வெளிவாங்கி விட்டது. உலகத்துக்கெல்லாம் சவுக்காரம் போட்டுக் குளிப்பாட்டினாற்போல். வீட்டுக்குப் போகிற வழியில் ஜிஜ்ஜா தன் நாதனைக் கேட்டாள்: "சௌகார் மனம் எப்படி மாறிற்று?" என்று.

"சீடன் துணி, குரு வண்ணான், இறைவன் சவுக்காரம் என்று பாடுவேனே — நீ கேட்டதில்லையா? இறைவனே குருவாகவும் வந்து சௌகாருக்குச் சவுக்காரம் போட்டுத் தோய்த்திருக்கிறான்" என்றார் கபீர்.

கபீர் அப்படித்தான் சொல்வார். நமக்கு உண்மை தெரியும். இறைவன் கபீரின் உள்ளப் பாங்காக வந்து சௌகாருக்குச் சவுக்காரம் போட்டு விட்டான்!

கபீரின் நிர்மல உள்ளம் தானாகவே பாபியையும் பற்றிக் கொண்டது. 'ஒருவன் பிறந்த சத்தியசந்தனாக ஆகிவிட்டால் அதன் பின் அவன் எது கூறினாலும் அதுவே சத்தியமாகி விடும்; ஒருவன் அஹிம்சையில் முதிர்ந்து விட்டால் அவன் முன்னிலையில் புலியும் சிங்கமும் கூட ஹிம்சையைத் தாமாக விட்டு விடும்; ஒருவன் சிற்றின்பத்தை முற்றிலும் அடக்கித் தூய்மையில் மூழ்கி விட்டால், அவன் சந்நிதியில் மற்றவருக்கும் தாமாக இந்திரிய சுத்தம் உண்டாகி விடும்' என்றெல்லாம் யோக நூல்களில் கண்டுள்ளது.

தம்மைப் பரம்பொருளுக்கு நாயகியாக்கிக் கொண்டு, மண முடித்த மனைவியிடமே பிரமசரியம் காத்த கபீரின் தூய்மைதான் சௌகாரையும் தொற்றிக் கொண்டது!

மெய்யான வைஷ்ணவன் பிற பெண்டிரைத் தாயாகவே பார்ப்பான். (பரஸ்திரீ ஜேனே மாதரே) என்றார் நரஸி மேதா. கபீர் முதலில் யாரோ ஓர் அந்நிய ஸ்திரீயான நீமாவை — அவள் அந்நிய ஸ்திரீ என்று அறிந்தே — தாயாகப் பாவித்தார். அதன் பிறகு தம் மனைவியையே தாயாகப் பார்த்தார். அதோடு காம வெறியன் ஒருவனும் பர ஸ்திரீயைத் தாயாகப் பார்க்குமாறு செய்துவிட்டார்!

ஓவியம் : கனுதேசாய்

படித்துப் பாருங்கள்

SANKARA AND SHANMATA

‘சங்கரரும் ஷண்மதமும்’ என்ற பெயரைத் தாங்கிய மகாநாடு விமரிசையாய் இனிது நிறைவெய்தியதை அனைவரும் அறிவார்கள். அந்த மகாநாட்டை முழுமை பெறச் செய்யும் விளக்கம் போன்ற ஒரு விசேஷ மலரையும், மகாநாட்டைச் செவ்வனே உருவாக்கியவர்கள், வெகு அண்மையிலேயே வெளியிட்டிருப்பது அரும் பயனைத் தரக் கூடிய விதம் அமைந்திருக்கிறது.

காஞ்சி காமகோடி பரமாசாரியரின் மலர்ந்த உள்ளமே இச்சிறப்பு வாய்ந்த மகாநாட்டை விதையிட்டு வளரச் செய்தது என்பதற்கு அத்தாட்சியாக நூல் நெடுகிலும் அப்பெரியவாளை மறக்காத வண்ணம் கட்டுரைகளும் காட்சிகளும் பரவலாகக் காணப் பெறுவது இம்மலரின் மணத்தை அதிகமாகவே நுகருவதற்கு வாய்ப்பளித்திருக்கிறது.

ஆதி சங்கர பகவத்பாதர் ‘ஷண்மத — ஸ்தாபனாச்சாரியர்’ என்பதினால் அவர் ஆறு தெய்வ வழிபாடுகளைத் தொடங்கி வைத்திருப்பதாக நினைப்பதற்கு இடமில்லை. ஆறு தெய்வ வழிபாடுகளையும் அவைகளுக்குகந்த சீருடனும் சிறப்புடனும் திருத்தமாய்ப் பழக்கத்தில் கொண்டு வருவதற்கெனவே அவர் முயன்று வெற்றி கண்டார் என்பதுதான் அவ்விருதின் விளக்கமும்.



நான்கு பாகங்களாக இந்நூலைத் தொகுத்தவர்கள், ஒவ்வொன்றையும் கவனத்தை ஈர்க்கும் வகையில் கட்டுரைகளாலும், ஓவியங்களாலும் நிரப்பியுள்ளார்கள். கட்டுரைகள் எல்லாமே ஆங்கிலத்தில் உள்ளன. காரணம், இப்புத்தகத்தைத் தயாரிப்பதன் நோக்கம் பாரதம் முழுதும் வாசகர்களிடமும் நூல் நிலையங்களிலும் இதற்கு ஒரு தனி இடம் ஏற்படுவதுடன், வெளிநாடுகளிலுமுள்ள நூல் நிலையங்களிலும் இதனை வரவேற்க வேண்டும் என்பதுதான். உலகமெங்கும் சங்கர பகவத்பாதர் செய்துள்ள பெரிய சேவையை அறிய வேண்டும் என்பதும் நியாயமான லட்சியமல்லவா ?

பொதுப்படையான சில சமயக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளையே முதல் பாகத்தில் சேர்த்திருக்கிறார்கள். சமயப் பற்று என்பது அவசியமான ஒரு வாழ்க்கை லட்சியம் என்பதைத் திறம்பட அலசிக் காட்டும் கருத்துக்களையே இதில் அடங்கிய பதினெட்டு கட்டுரைகளிலும் காணலாம்.

இன்று உலகம் போகும் விதத்தில் கடவுளுக்கு இடம் வரவரக் குறைந்தும் அதற்குப் பதிலாகப் பணப் பேய் மக்களைப் பிடித்து வாட்டியும் வருவது நாஸ்திகம் செய்யும் கொடுமையென மனத்தில் தைக்கும்படி ராஜாஜி ஆணித்தரமாய்க் கருத்துக்களை வழங்கியிருக்கிறார். அவரது கட்டுரை நாட்டின் அவல நிலையினால் அவருடைய உள்ளம் பெற்றிருக்கும் துயரத்தைக் கண்கூடாகக் காட்டுகிறது.

டாக்டர் ராகவன் ஷண்மதங்களையும் ஆதி சங்கரர் உய்விக்க எடுத்துக் கொண்ட பணியை விரிவாக விளக்கியுள்ளார்.

அடுத்த பகுதியில் ஷண்மதங்களான, காணபத்தியம், கௌமாரம், ஸௌரம், வைஷ்ணவம், சாக்தம், சைவம் என்ற ஆறு தெய்வ வழிபாடுகளைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியுள்ளன. இடையே ராமனையும், கிருஷ்ணனையும் சேர்த்திருக்கின்றனர்.

மூன்றாவது பகுதியில் சேர்த்திருப்பவை ஆதிசங்கர பகவத்பாதரையும் அவரால் நிலைக்கப்பெற்ற அத்வைத தத்துவத்தையும் நன்கு தெளிவுபடுத்தும் கட்டுரைகள். இந்த மலருக்கென்று எல்லாம் எழுதப்படாதவை யாயினும், டாக்டர் ராதாகிருஷ்ணன் போன்ற தத்துவ ஞானிகள் ஏற்கனவே வழங்கியுள்ள கருத்துக்களை வேறு புத்தகங்களிலிருந்து இங்கு தொகுப்பில் சேர்த்திருப்பது இதன் பெருமையைப் பெருக்குகின்ற தென்பதில் ஐயமில்லை. முக்கியமாய், ‘வில் டுராண்ட்’ (Will Durant) என்ற பிரபல அமெரிக்க அறிஞருடைய கட்டுரையை வாசிக்கையில், அத்வைதத்தின் சாரத்தைப் பிற நாட்டைச் சேர்ந்த சிலர் எவ்வளவு நன்றாய் உணர்ந்துள்ளனர் என்பது புலனாகிறது.

கடைசிப்பகுதி நமது காஞ்சி பெரியவாளைப் பற்றியதாயிருப்பது மிகவும் பொருத்தத்துடனே விளங்குகிறது.

தெய்வங்களின் அழகான மூவர்ணப் படங்களையும் ஏராளமான இதர போட்டோக்களையும் தாங்கிய இம்மலர் அழுத்தமான மேலட்டையுடன் உயர்வான விதத்தில் தயாராகியிருக்கிறது.

காஞ்சிப் பெரியவாளைப் பற்றிய செய்திகளில் அக்னிஹோத்ரம் தாத்தாச்சாரியார் எழுதியுள்ளவை உள்ளத்தைத் தொடுபவை. அரசியல் அமைப்புச் சட்டம் உருவானபோது சமயத்தைப் பாதுகாக்க அடிப்படை உரிமைகளின் பகுதி ஷரத்துகள் சிலவற்றுக்குப் பெரியவாள் எவ்வளவு தூரம் அடிகோலியாயிருந்துள்ளார் என்பதையும் அறிகிறோம்.

இந்நூலில் பொருளடக்கமோ, பெயர் அகராதியோ கொடுக்கப் படவில்லை. புத்தகத்தைப் படித்து அதிலிருந்து மேற்கோள்கள் காண்பிக்க எண்ணுகிறவர்களுக்குச் சிறிது பிரயாசை அவசியமாகலாம்.

Publishers: M. L. J. Press, Mylapore, Madras-4; Price Rs. 12.

— வி. சந்திரசேகரன்

எதிர்பாராத மகிழ்ச்சி

முருகன் அருள்

தென்னிந்திய ரயில்வேயில் சின்னச் ஸ்டேஷன் மாஸ்டராக வேலை செய்த சமயம் என் குடித்தனம் திருச்சியில் இருந்தது. குழந்தைக்கு ஆண்டு நிறைவு மே மாதம் 16ந் தேதி வருகிறது என்று என் மனைவி முன்கூட்டியே தெரிவித்திருந்தாள்.

மே 8ந் தேதி திடீரென்று என்னை விருத்தாசலத்துக்கு அடுத்த தாளநல்லூர் என்னும் ஸ்டேஷனுக்குப் போகும்படி உத்தரவு வந்தது. நேரே ஆபீஸ் சென்று அதிகாரியைச் சந்தித்து விஷயங்களை விளக்கி சில தினங்கள் வரை திருச்சிக்கு அருகிலேயே போட்டால் நலமாக இருக்கும் என்றும், மே 15, 16 இந்த இரண்டு நாட்கள் கட்டாயம் லீவு வேண்டும் என்றும் விண்ணப்பித்துக்கொண்டேன். ஆபீஸ் அதிகாரியோ ஒரே பிடிவாதமாய் நான் தாளநல்லூர் போய்த்தான் ஆக வேண்டும் என்றும், முடிந்தால் இரண்டு நாட்கள் லீவு கொடுக்க முயற்சி செய்வதாயும் தெரிவித்தார். மிக்க மன வேதனையுடன் தாளநல்லூர் போய்ச் சேர்ந்தேன்.

ஆண்டு நிறைவுக்கு இன்னும் இரண்டே நாட்கள் தான் இருந்தன. ஒரு யோசனை தோன்றியது. விருத்தாசலம் சென்று ரயில்வே டாக்டரிடம் விஷயத்தைச் சொல்லி 'சிக் லீவ்' வாங்கலாம் என ஓர் ஆசை. போவதற்கு வண்டியோ பஸ்ஸோ இல்லை. ஐந்து மைல் நடந்தே போனேன். டாக்டரைச் சந்தித்து அவருடைய உதவியை வேண்டினேன். டாக்டரும் என்னுடைய வேண்டுதலை நிராகரித்து விட்டார். எல்லாம் என் விதியின் பயன் என நினைத்து, ஆண்டு நிறைவுக்கு வர முடியாதது பற்றி ஒரு கடிதம் எழுதி என் மனைவிக்குப் போட்டு விட்டுத் திரும்பி இரவு வேலைக்குத் தாளநல்லூர் வந்தேன். மனம் உருகினேன். முருகனை வேண்டிக் கொண்டேன்.

இரவு சுமார் பன்னிரண்டு மணி. 'கண்ட்ரோல்' மணி ஒலித்தது. ''தாளநல்லூர்'' எனக் குரல் கொடுத்தேன். ''தங்களை கண்ட்ரோலர் அவசரமாய் ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்க்க வேண்டுமாம். தயவு செய்து அவருக்குச் சொல்லி அனுப்புங்கள்'' என்றார் கண்ட்ரோலர். ஸ்டேஷன் மாஸ்டர் வந்து பேசினார். பிறகு அவர் என்னிடம், ''நீ அவசரமாய்த் திருச்சி குட்ஸ் யார்டுக்குப் போய் வேலை



பார்க்க வேண்டுமாம். வேறு வண்டி இல்லாததால் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் உனக்காக நிறுத்தப்படும்'' எனக் கூறி என்னிடமிருந்து வேலையை அவரே ஒப்புக் கொண்டார்.


மறுநாள் காலை திருச்சி குட்ஸ்யார்டுக்குப் போய் முதன்மை ஸ்டேஷன் மாஸ்டரைச் சந்தித்தேன். அவர் ''நீதான் முன்பே இவ்விடம் வேலை பார்த்திருக்கிறாயே. உனக்கு 'டிரெயினிங்' தேவையில்லை. இன்று இரவு டியூட்டிக்கு வந்துவிடு. மறுபடியும் 17ந் தேதிதான் உனக்கு டியூட்டி'' என்றார்.

அப்பொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் அல்லவா இருந்தது. நேரே வீடு சென்று மனைவியிடம் விவரம் கூறிக் கவலை மிகுந்த அவளை ஆனந்தத்தில் ஆழ்த்தினேன். முருகனின் அருளால் குழந்தையின் ஆண்டு நிறைவு விழா ஒரு குறையும் இன்றி அமோகமாய் நடந்தேறியது.

டி. ஏ. ராமநாதன்

பண்பு முக்கியம்

நான் அப்பொழுது சென்னை சர்க்கார் பிரவேசப் பரீட்சையில் தேறி மேற்கொண்டு சிரோமணி வகுப்பில் சேர்ந்து படிக்கப் பல கல்லூரிகளுக்கு விண்ணப்பம் போட்டேன். ஆனால் எனது துரதிர்ஷ்-



வசமாக எங்கும் இடம் கிடைக்கவில்லை. காரணம் அதிகமான மார்க்கு வாங்கவில்லை. இறுதியில் தஞ்சை ஜில்லா திருவையாறு கல்லூரியிலிருந்து இன்டர்வியூவுக்கு வரும்படி கார்டு வந்தது.

அன்று பஸ்ஸில் ஒரே கூட்டம். எங்களுக்கு எப்படியோ உட்கார இடம் கிடைத்தது. இரண்டு மூன்று ஸ்டாப்புகள் கடந்து பஸ் நின்றது. யாரோ ஒரு வைஷ்ணவப் பெரியவர் ஒருவர் ஏறினார். அவருக்கு வயது ஐம்பது இருக்கும். தெய்வீகக் களை பொருந்தியவர். பஸ்ஸில் ஏறியவுடன் சுற்று முற்றும் பார்த்தார். ஆனால் உட்கார இடமில்லை. அவரைப் பார்த்தவுடன் எனக்கு ஒரு மரியாதை உணர்ச்சி ஏற்பட்டது. நான் எழுந்திருந்து அவருக்கு இடமளித்தேன். அவர் முதலில் மறுத்தாலும் நான் வற்புறுத்தியவுடன் நன்றியை அறிவித்துவிட்டு அமர்ந்தார்.

கல்லூரியை அடைந்ததும் படபடத்த நெஞ்சுடன் பிரின்ஸ்பால் அறையில் நுழைந்தேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அங்கு அமர்ந்திருந்தவர் வேறு யாருமில்லை. நான் பஸ்ஸில் யாருக்கு இடம் அளித்து உதவினேனோ அவரே தான் என்னைப் பார்த்துப் புன்சிரிப்புடன் வரவேற்றார். என் மார்க்குகளை அவர் பார்த்துவிட்டு 'உனக்கு இந்தக் கல்லூரியில் இடமளித்துவிட்டேன். எனக்குத் தேவை மார்க்குகள் மட்டுமல்ல. பண்பு! அதுதான் முக்கியம்' என்றார். அம்மகானின் பெயர் உ. ப. வே. வேதாந்தமங்கலம் ஸ்வாமிகள். கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த இந்நிகழ்ச்சி இன்றும் என் மனத்தை விட்டு அகலவில்லை.

கே.ஆர். வைத்தியநாத சாஸ்திரி
ஓய்வுபெற்ற ஸம்ஸ்கிருத ஆசிரியர்.



நல்லதொரு முத்து

'சரளன்'

"சிவகாமி! எதிர் வீட்டிலே புதிதாகக் குடி வந்திருக்கிறார்களே! அவர்களை உனக்குத் தெரியுமோ ?"

"ஏன் தெரியாது ? நாங்கள் கும்பகோணத்திலிருந்த போது எங்கள் வீட்டுப் பின் கட்டில் குடியிருந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ரங்கசாமி ஐயருடைய பெண் அல்லவா அந்த முத்துலட்சுமி ?"

"அப்படியா ?"

"ஆமாம்! மகா வாயாடி ! போக்கிரி ! மட்டு மரியாதை என்பதே கிடையாது ! பிடிவாதம் என்றால் அப்படி ஒரு பிடிவாதம் ! ஆமாம் ! எதற்காகக் கேட்கிறீர்கள் ?"

"ஒன்றுமில்லை. எப்போது பார்த்தாலும் ஒரே கூச்சலும் கூப்பாடுமாக வீடு இரண்டு படுகிறதே ! அதனால் கேட்டேன் !"

"அதை ஏன் கேட்கிறீர்கள் ! ஏட்டிக்குப் போட்டிதான். கணவன் எது சொன்னாலும் விதண்டாவாதம்தான் ! அவளைக் கட்டிக் கொண்டு அந்தப் புருஷர், பாவம் !"

"அவளுடைய புருஷனுக்காக நீ ஒன்றும் ரொம்பவும் உருக வேண்டாம், சிவகாமி ! இதோ நான் உன்னைக் கட்டிக் கொண்டு...!"

"போதும், உங்களுடைய லீலை ! இருந்தாலும் அவளைப் போல ஒரு பெண்ணை யாரும் பார்க்க முடியாது !"

"அதோ பார், சிவகாமி ! ஏதோ அவர்களுக்குள் சண்டை !"

"நான்தான் சொன்னேனே ! கேளுங்கள்! அந்த முத்துவின் குரல் எத்தனை அட்டகாசத்துடன் ஒலிக்கிறது! இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இத்தனை அகம்பாவம் வேண்டாம் ! கணவன் குரல் இந்தத் தெருக் கோடி வரை கேட்டால், அவளுடைய குரல் ஊர்க் கோடி வரைக்கும் கேட்கிறது! ஹும்! சரி ! நமக்கேன் வம்பு ! நீங்கள் சீக்கிரம் டி. யூ. சி. எஸ்.ஸுக்குக் கிளம்புங்கள் ! சர்க்கரை வந்திருக்கிறதாம் !"

மேற்படி சம்பாஷணை சிவகாமிக்கும் அவளுடைய கணவர் வேதாசலத்துக்கும் நடைபெற்ற ஒரு வாரத்துக்குப் பிறகு....

வேதாசலத்தின் வீட்டின் மாடியிலே குடியிருக்கும் குண்டுராவ், "என்ன மிஸ்டர் வேதாசலம் !" என்று உள்ளே நுழைந்தார்.

"வாருங்கள், மிஸ்டர் குண்டுராவ் !" என்று வரவேற்றுத் தம் பொடி டப்பியை நீட்டினார் அவருக்கு.

"கோர்" என்று அழுத்தமாய்ப் பொடியை உறிஞ்சி விட்டு, குண்டுராவ் ஆரம்பித்தார். "சார் ! எதிர் வீட்டிலே புதிதாய்க் குடிவந்திருக்கும் பேர்வழிகளைக் கவனித்தீர்களா?"

"அந்தக் கூத்தை நீரும் கவனித்தீரா ?" என்று கூறினார் வேதாசலம்.

"ஒரே கலாட்டா மயமாய் இருக்கிறதே! நம் வீடுகளிலும் புருஷன் மனைவி தகராறு நடைபெறுகிறது. இல்லை என்று கூறவில்லை, சார் ! ஆனால் எதிர் வீட்டைப் போலவா ? சேச்சே !" என்றார் குண்டுராவ்.

"சற்று முன்பு நடந்த நாடகத்தைக் கவனித்தீர்களா ?"

"ஏன் கவனிக்காமல்? 'இதோ பார், முத்து ! நீ இப்படி எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டி என்றால், நான் உடனே உன் தகப்பனுக்குத் தந்தியடித்து, உன்னை உடனே அழைத்துப் போகும்படி செய்து விடுவேனாக்கும்! ஞாபகமிருக்கட்டும்!' என்று அந்த மனிதர் கூப்பாடு போட்டதைத்தானே கூறுகிறீர்கள், மிஸ்டர் வேதாசலம்? இருந்தாலும் பெண்களுக்கு அடக்கம் வேண்டும்!" என்று சொன்னார் ராவ்.

"அது ஒருபுறமிருந்தாலும், ஆண்களுக்கும் இம்மாதிரி முரட்டுப் பெண்களை அடக்கிக் கொண்டு போகத் திறமை இருக்க வேண்டும், இல்லாவிட்டால், ஊர் சிரித்து விடும் !" என்று சற்று மெதுவாய், சமையலறைப் பக்கம் பார்த்துக் கொண்டே கூறினார் வேதாசலம்.

தொடர்ந்தார் குண்டுராவ். "அந்தப் பெண்ணை எனக்கு ரொம்ப நாளாய்த் தெரி



மனைவி: ''என்னங்க.... நீங்க.... எத்தனையோ திறப்பு விழாக்களிலே கலந்து கொண்டு.... திறந்து வைத்துப் பழக்கம் இருக்கு.... இந்தப் பாட்டிலைத் திறக்க முடியலையே உங்களால்....!'' - ஹரன்.

யும், கும்பகோணம் அவளுடைய சொந்த ஊர். ஜாதகப் பொருத்தம் எல்லாம் சரியாகப் பார்த்துத்தான் கொடுத்தார்கள். ஜாதகம் பார்த்துச் சொன்னவர், கும்பகோணம் கும்பேசுவர தீக்ஷிதர். அவர் ஜாதகம் பார்த்துச் சொன்னார் என்றால் மறு பேச்சே கிடையாது. அவர் சொன்னாராம், ''இந்தக் குழந்தையும் இவளுடைய புருஷனும் அத்தனை அந்நியோன்னியமாய் இருக்கப் போகிறார்கள்!'' என்று. இங்கு என்ன நடக்கிறது, பாருங்கள்!''

''அட! நீங்கள் ஒன்று! ஜாதகமாவது, மண்ணாங்கட்டியாவது? சுத்த ஹம்பக்!'' என்றார் வேதாசலம்.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது, இவர்களைக் கடந்து கொண்டு எதிர் வீட்டு முத்து உள்ளே, ''சிவகாமி!'' என்று அழைத்துக் கொண்டே போனாள். இருவரும் ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர்.

''சார்! அதோ உள்ளே போகிறாளே! முத்து! அவளுடைய முகத்தைக் கவனித்தீர்களா?'' என்றார் குண்டுராவ்.

''ஏதோ தகராறு போலிருக்கிறது தம்பதிகளுக்குள்! என் மனைவியிடம் கூறிக் குறைப் பட்டுக் கொள்ளத்தான் வந்திருக்கிறாள் என்று நினைக்கிறேன்!'' என்று பதில் கூறினார் வேதாசலம்.

''இருக்கும்!''

அடுத்த ஒரு நிமிஷத்துக்கெல்லாம் முத்துவின் கணவரும் வந்து விட்டார்!

''நமஸ்காரம் சார், உங்களுடன் பழக்கமே இல்லை. இருந்தாலும் என்னுடைய மனைவி முத்துவுக்கு உங்கள் மனைவி முன்பே பழக்கம் என்று அறிந்தேன்!'' என்று வேதாசலத்தைப் பார்த்துக் கூறியபடியே அமர்ந்தார் அந்த மனிதர் — சூரி.

''என் மனைவிக்கு மட்டுமல்ல, சார்! இதோ இந்த மிஸ்டர் குண்டுராவுக்கும் உங்கள் மாமனார் குடும்பத்தைப் பற்றிய பழக்கம் உண்டாம்!'' என்று குண்டு ராவ் பக்கம் திரும்பினார் வேதாசலம்.

''அப்படியா? நமஸ்காரம் சார்! இப்போது நானும் என் மனைவியும் இங்கு ஏன் வந்தோம் என்பதைக் கூறி விடுகிறேன்!'' என்று ஆரம்பித்தார் சூரி.

''சார்! நீங்கள் கூறித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது கிடையாது. நான் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறேன்'' என்று ஏக காலத்திலே வேதாசலமும் குண்டுராவும் கூற எண்ணினார்கள். ஆனால் ஏனோ கூறாமல் நின்றார்கள்!

''இந்த உலகிலே நான் எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். ஆனால் அவை எல்லாவற்றையும்....'' என்று மேலே கூறுவதற்குள் குண்டுராவ் இடைமறித்தார்.

''தூக்கி எறியக்கூடியபடி அமைந்துவிட்டது உங்கள் சம்சாரம் உமக்குக் கொடுக்கும் தொல்லைகளும்... ஒத்துழையாமையும் என்று கூற வருகிறீர்கள்!.... அப்படித்தானே?''

சுவாரசியத்துடன் வேதாசலமும் சூரியைப் பார்த்தார்.

வியப்பினால் முகம் மாறுபட, ''என்ன? என்ன கூறுகிறீர்கள்? என் மனைவி எனக்குத் தொல்லைகள் தருகிறாளா? ஐயோ! இது என்ன கஷ்டம்! இதற்காகத்தான் என் மனைவி இப்போது இங்கு வந்திருக்கிறாள்! அதாவது எங்களுக்குள் பேச்சு சற்றுப் பலமாக ஒலிப்பதால் அக்கம்பக்கத்துக்காரர்கள் ஏதாவது தவறாக எண்ணிக் கொள்ளக்கூடும் என்று எண்ணித்தான், விஷயத்தைப் புரிய வைக்க இப்போது இருவரும் வந்திருக்கிறோம்.....'' என்று கூறிய சூரியை இருவரும் கண்டு விழித்தார்கள்!

தொடர்ந்தார் சூரி:

''கேளுங்கள், சார்! என் உத்தியோக நிமித்தம் நான் தினமும் இரவிலே நேரங் கழித்து வருகிறேன். அது வரையிலே ஏன் சார், இவள் பட்டினி கிடக்க வேண்டும்? சாப்பிட்டு விட்டு எனக்கு மூடி வைத்து விட்டால் என்ன? கேட்க மாட்டாள்; போதாக் குறைக்குக் கர்ப்பிணி வேறு! பட்டினி கிடக்கலாமா? அது போகட்டும். அறுபது ரூபாய் கொடுத்து நல்ல புடவையாக எடுத்துக் கொள் என்று கூறினால், முப்பது ரூபாயில் புடவையை எடுத்துக் கொண்டு, மீதிக்கு எனக்கு டெரிலின் சட்டைத் துணி வாங்கி வந்து நிற்கிறாள். மனிதனுக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்?''

வேதாசலமும் குண்டு ராவும் ஒருவரையொருவர் பார்த்து விட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டனர்.

சூரி தொடர்ந்தார். ''இவைகூடப் பரவாயில்லை, சார்! இந்தக் குளிர் காலத்திலே விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்து குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்தால் உடம்புக்கு ஆகுமா? வெந்நீரில் குளி என்றால் என் பேச்சு லட்சியமல்ல. அவளுடைய தந்தை என்னிடம், 'மாப்பிள்ளை, குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!' என்று நம்பி ஒப்படைத்திருக்கிறார். அவளுடைய நலனைக் கவனிக்க வேண்டியது என் கடமையல்லவா? பேச்சு கடுமையாய் இருப்பதுபோல் பிறருக்குத் தோன்றலாம். ஆனால் அது அன்பின் அடிப்படையிலே ஏற்பட்டதுதான் என்பது எங்களுக்குப் புரியும். ஆனால் உங்களைப் போன்றவர்களுக்கு? அந்தச் சந்தேகத்தைப் போக்கவேதான் வந்தோம். மொத்தத்தில் முத்து எனக்குக்கிடைத்த நல்லதொரு முத்து சார்!''

அதே சமயம் உள்ளே முத்து, வேதாசலத்தின் மனைவியிடம், ''மாமி! கும்பேசுவர தீட்சிதர் என் ஜாதகத்தைப் பார்த்துச் சொன்னார். அவர் சொன்னது யாருக்குமே பொய்த்ததில்லை. நான் பெரிய அதிர்ஷ்டக்காரி!'' என்று கூறிக் கொண்டிருந்தாள்.



அருமையான இந்நூலைப் படிக்கப் படிக்க — பெரும் தத்துவத்தைக் கூறியுள்ளமை கண்ணை விழிகளிலே நீர் பனித்தது. மனம் புளகாங் கிதம் அடைந்தது.

மிக மிக உண்மையான — சாறு மிகுந்த நிலைகள் இவை. திருக் குர் ஆனும் இத னையே வலியுறுத்துகிறது என்பதை விட, ஒவ்வொரு பண்பட்ட நல் இதயமும் இதையே பன் முறை கூறிக் கூறிப் புலம்புகிறது என்பேன்.

எல்லாமே இறைவன் என்னும் நுணுக் கத்தை ஆழ்ந்து கற்றவர்கள் கூறுவர். அழு வதிலே, சிரிப்பதிலே, நடப்பதிலே, உண்ப திலே, உறக்கத்திலே, துன்பத்திலே, இன்பத் திலே அனைத்திலுமே இறைவனை இணைத்துக் காண்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியடை வது சாத்தியமே.

விலைமதிப்பற்ற இப் பொக்கிஷத்தை விலை யின்றியே விநியோகித்திருப்பது இறை வனுக்குச் செய்யும் அரிய சேவையாகும்.

கூடுவாஞ்சேரி, ம. கனி ஜூல்லாஹ்
2-8-69 (இறைவனின் நண்பன்)

★

தொழுமை யோகம் இனி எனது ஆயுள் பரியந்தம் நீங்காத துணைவனாக இருக்கும்.

சென்னை—2
2-8-69 டி. ரங்கன்

★

என்னைப் பொறுத்தவரை ''தொழுமை யோகம்'' படித்த பின், மேலும் இறைவ னருகே நான் செல்ல வேண்டியதன் அவசி யத்தை உணர்ந்தேன். இறைவனிடம் தள ராத பக்தி என்பது கடினமானதொன்று என்ற எண்ணத்தை நீக்கி எளிமையானது என்று உணர்த்தி விட்டீர்கள்.

இராயபுரம்,
2-8-69 ந. சந்தானம்

★

ராஜாஜி அவர்களின் ''தொழுமை யோக''த்தை ஊன்றிப் படித்த பின்னரே தாங்கள் எத்தகைய விலைமதிப்பற்ற பரிசை வாசகர்களுக்கு அன்பளிப்பாக அளித்துள் ளீர்கள் என்பதை உணர்ந்தோம்.

இவ்வாரக் கல்கி இதழில் தொடங்கப் பெற்றுள்ள 'வேஷங்கள்' ஆரம்பமே மிகவும் விறுவிறுப்பாக உள்ளது.

சென்னை—2 எஸ். சங்கரராமன்,
31-7-69 எஸ். ஆராவமுதன்

★

ராஜாஜி சொல்வது போல் யார் சொன் ஞர்கள்? நெஞ்சை உருக்கி விடுகின்றதே அவர் எழுதும் ராமாயணம். இதைத்தான் பன்னிரண்டு வருஷங்களில் எத்தனை தடவை படித்திருக்கின்றேன்! நட்பு உணர்ச்சியோடு என் உருக்கி உள்ளமெல்லாம் அங்கே நின்று விடுகிறது — தசரதன் கைகேயி இருக்கும் இடத்தில்.

ராஜாஜி ராஜாஜிதான். அடியேனுடைய அறியாக் காலத்திலேயே என் வீட்டில் ராமர்—ராமானுஜர் — ராஜாஜி மூவர் படங்களையும் சேர்த்துக் கண்டு கல்கி அவர்கள் முதுகில் ஷொட்டு கொடுத்திருக்கிறார்கள்.

விட்டலாபுரம்,
2-8-69 வி.எஸ். வேங்கடாச்சாரி

★

தொழில் வர்த்தகத் துறையில் சர்க்கார் 1968 மார்ச் முடிய 83 சர்க்கார் நிறுவனங் களில் 3333 கோடி ரூபாய் முதலீடு செய் திருக்கிறது. இந்த முதலீடுகளிலிருந்து லாபம் 48.43 கோடி, நஷ்டம் 83.14 கோடி ரூபாய். அரசாங்கம் ஒரு தொழிற்சாலை கூடத் திறக்க வேண்டாம். 3333 கோடியைத் தனியார் துறைக்கும், சிறு கைத்தொழில்களுக்கும் வட்டிக்குக் கொடுத்திருந்தால் கூட வருடத் துக்கு 300 கோடிக்கு மேல் லாபம் கிடைத் திருக்கும்! இந்த லட்சணத்தில் பாங்கிகளை வேறு தேசிய மயமாக்கிவிட்டிருக்கிறது!

பங்களூர்—1
29-7-69 உமா

★

''வேஷங்கள்'' முதல் அத்தியாயத்தின் பொறுப்பான சொல்லாட்சியும், உயிர்த் துடிப்புள்ள, அர்த்தபுஷ்டியான நடையும்.... அம்மாடி, பிரமித்துப் போனேன். இந்திரா பார்த்தசாரதியின் எழுத்தில் நான்கு வார்த்தைகளில் சொல்ல வேண்டியதை நாற்பது வார்த்தைகளில் சொல்லாமல், மூன்றே வார்த்தைகளில் அடக்கி விடுகிற மாட்சிமையைக் காண முடிகிறது. இ. பா. வைக் கல்கி அடையாளம் கண்டு விட்டதில் எனக்கு ஆத்மார்த்தமான திருப்தி.

மதுரை,
31-7-69 டி. ஆர். நடராஜன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon